இரண்டாம் பதிப்பு

விலை: 30
பக்கங்கள்: 48

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 274
ஆவணி 11ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை
27 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

## வெள்ளைக்கொடி விவகாரம் கோத்தபாய மறுக்கவில்லை

★ பாலசந்திரன் படுகொலை பற்றி மழுப்பல் பதில்
★ காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் சிறிய விடயமாம்
★ ஆயுதங்களைக் களைந்திராவிட்டால் டக்ளஸே முதலமைச்சராம்

கொழும்பு, ஒக. 27
இறுதிக் கட்டப் போரில் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தளபதிகள் பாதுகாப்புத் தரப்பினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியை, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மறுக்கவில்லை. அதேபோன்று பாலச்சந்திரன் படுகொலை, சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம் தொடர்பிலும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நேரடியாகப் பதிலளிக்காமல்-மறுக்காமல் சமாளித்துப் பதிலளித்துள்ளார்.
இறுதிப்போரின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச கொழும்பு ஊடகத்துக்குச் செவ்வி வழங்கியுள்ளார். அந்தச் செவ்வியிலேயே மேற்படி விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.
'புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உள்ளிட்டவர்கள் வெள்ளைக் கொடியுடன் >> 45

## என் கணவன் மீதுவெறும் பதவிக்காக குற்றத்தை சுமத்தாதீர்

அறச்சீற்றத்துடன் ஊத்தைபவானின் மனைவி முதலமைச்சரின் கருத்துக்குக் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 27
தமது பதவியைத் தக்க வைப்பதற்காகவும் புதிதாகப் பதவியைப் பெறுவதற்காகவும் எனது கணவன் மீது பொய்க் குற்றச்சாட்டுச் சுமத்த வேண்டாம் என்று தார் மீகக் கோபத்துடன் சீறிச் சினந்தார் புளொட் அமைப்பிலிருந்து உயிரிழந்த ஊத்தை பவான் என அழைக் கப்படும் கந்தையா செல்வராசாவின் விதவை மனைவி செ.யோகராணி.



“எனது கணவர் புளொட்டில் இருந்த காலத்தில் எவரையும் கொலை செய்யவில்லை. அது எனக்கு நன்கு தெரியும். தமது பதவியைத் தக்கவைக்கவும் புதிதாகப் பதவியைப் பெற்றுக்கொள்ளவும் சிலர் குழப்பமான - உண்மைக் குப் புறம்பான கதைகளை எனது கணவர் இறந்த நிலையில் கூறுவதை நான் கண்டிக்கின்றேன்” என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் யோகராணி.
பிரபல பத்திரிகையாளர் தராக்கி சிவராம் கொலையுடன் தொடர்புபட்டவர் புளொட் அமைப்பைச் சேர்ந்த ஊத்தை பவான் என்பவரே என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். அது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே யோகராணி அறச் சீற்றத்துடன் தனது கணவன் மீது பழிபோட்டவர்களை நிந்தித்தார்.
தராக்கி சிவராம் கொலையுடன் தொடர்புடையவர் என்கிற குற்றச்சாட்டு >> 45

## கருக்கலைப்புக்கு அனுமதியளிக்க ஆயர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக. 27
இலங்கையில் இரு காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்ய அனுமதியளிக்கும் சட்டத்துக்கு கத்தோலிக்க ஆயர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.
பாலியல் வன்முறையால் உருவான மற்றும் மரபணு பிறழ்வுக்குள்ளான கருக்களைக் கலைப்பதற்குச் சட்டரீதியாக அனுமதியளிக்கும் வகையில் கொண்டு வரப்படவுள்ள சட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெற வேண்டியுள்ளது. இந்தக் காரணங்களுக்காக அனுமதியளிப்பதை உரிய துறைசார் மருத்துவ நிபுணர்களும் ஆதரிக்கின்றனர். இவ்வாறானதொரு நிலையிலேயே ஆயர்கள் மாநாட்டில் அதனை எதிர்க்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
கருவொன்று உருவாகினால் அந்தக் கணத்திலேயே மனித உயிர் உருவாகின்றது. அது பரிசுத்தமானது. >> 45

## நீதிஅமைச்சரின் நியமனத்துக்கு மகிந்த அணி கடும் எதிர்ப்பு

அவர் ஊழல்வாதியாம்

யாழ்ப்பாணம், ஒக. 27
ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஆளும் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் தலதா அத்துக் கோரளவை நீதி அமைச்சராக நியமித்ததை கண்டிப்பதாக, மகிந்த அணி தெரிவித்துள்ளது.
வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சராகக் கடமையாற்றிய போது நிதி மோசடியில் ஈடுபட்டதாக விசாரணை >> 45

## 10ஆண்டுகளின் பின்னர் மகிந்தவுடன் கைகோர்த்தார் விஜயதாச



கொழும்பு, ஒக. 27
கூட்டு அரசிலிருந்து பதவி நீக்கப்பட்ட முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும், விகாரையில் ஒன்றாக வழிபாட்டில் பங்கேற்றுள்ளனர். >> 45

## மக்கள் பயன்பாட்டுக்கு பரு.- பொன்னாலை வீதி விடுவிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஒக. 27
கடந்த மாதம் பாதுகாப்புத் தரப்பினரால் விடுவிக்கப்பட்ட மயிலிட்டித் துறைமுகத்துக்கு பருத்தித்து >> 45

## அரச வேலைக்காக
## வடக்கில் 4,607 பட்டதாரிகள் பதிவு 95பேர் 35 வயதைக் கடந்தவர்கள்

யாழ்ப்பாணம், ஒக. 27
வடக்கு மாகாணத்தில் அரச வேலையற்ற பட்டதாரிகள் 4 ஆயிரத்து 607பேர் உள்ளதாக மாவட்டச் செயலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 95 பேர் 35 வயதைக் கடந்தவர்கள்.
அரசவேலையற்ற பட்டதாரிகள் 20 ஆயிரம் பேரை, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சில் அபிவிருத்தி உதவியாளர்களாக ஆள்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டச் செயலகங்களில் >> 45

## திலீபனின் தூபியில் நல்லூரில் துப்புரவு

ஏட்டிக்குப் போட்டியாக நாடகங்கள் ஆரம்பம் >> 45




## வடக்கில் அதிகரிக்கிறது டெங்கு ஒழிப்புப் பணியை முடுக்குங்கள்

தேசிய டெங்குஒழிப்புப்பணிப்பாளர் யாழ். நிலையை அவதானித்தபின்னர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 27
வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அனைத்துத் துறையினரையும் உள்வாங்கி டெங்கு பரவலைத் தடுப்பதற்கான பணிகளை முடுக்கிவிடுங்கள்.
இவ்வாறு கண்டிப்பான அறிவுறுத்தலை வழங்கியுள்ளார், தேசிய டெங்கு ஒழிப்பு பணிப் >> 45



# அரசமைப்பை உருவாக்க இதுவே சந்தர்ப்பம்

## ஜயம்பதி விக்ரமரட்ண தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 27

கூட்டு அரசின் ஆட்சியில் புதிய அரசமைப்பை உருவாக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அதனை நழுவவிடாது அனைவரும் இணைந்து புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியலமைப்புக் குழுவின் அங்கத்தவருமான கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண தெரிவித்தார்.

புதிய அரசமைப்புத் தொடர்பாக மக்களுக்குத் தெளிவூட்டும் கருத்தரங்கு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"அனைத்துப் பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன. தெற்கின் பிரதான கட்சிகள் மற்றும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என அனைவரும் கூட்டு அரசுடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். எனவே, புதியஅரசமைப்பை ஏற்படுத்துவதற்கு இதுவே சரியான தருணம். இதுபோன்ற சந்தர்ப்பம் எமக்கு மீண்டும் அமையும் என்பது நிச்சயமற்றது. எனவே இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது. புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டுவது போன்று மக்களின் கருத்துக்களையும், விமர்சனங்களையும் நாம் பெற்றுக் கொள்வதே இந்தக் கருத்தரங்கின் பிரதான நோக்கமாகும். இந்தக் கருத்தரங்கில் சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-10, 35)

# தென்மராட்சிக் கலாமன்றத்தில் ஆங்கில மொழித்தின நிகழ்வு

தென்மராட்சிக் கல்வி வலய ஆங்கில பாடப் பிரிவின் ஆங்கில மொழித் தின நிகழ்வுகள் தென்மராட்சி கலைமன்றக் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்கள் பியானோ வாத்தியங்களை இசைத்து விருந்தினர்களை வரவேற்றனர்.

வரவேற்புரையை வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி திருக்குமார் நிகழ்த்தினார். வலய மட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கலை நிகழ்வுகளும், மாணவர்களின் உரைகளும் இடம்பெற்றன. சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் நாடகம், வரணி மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களின் குழுப் பாடல்கள் இடம் பெற்றன. வலய நிலைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தொழில்நுட்ப பீட பேராசிரியர் க.கந்தசாமி கலந்துகொண்டார். (ஐ-9)

# பசுஞ்சோலை சிறப்புத்திட்டத்தில் தென்னங்கன்றுகள் வழங்கல்

அரச தலைவர் செயலகத்தால் நடைமுறைப் படுத்தப்படும் பசுஞ்சோலை சிறப்பு வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கமைவாக பயன்தரும் மரங்களை நடுவதனால் மீள்காட்டை உருவாக்கும் வேலைத்திட்டத்திட்டம் நெடுங்கேணியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அதில் நெடுங்கேணி சின்னடம்பன் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட இராசபுரம் கிராமத்திலும், புளியங்குளம் வடக்குப் பரசங்குளத்திலும் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 5 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. சுமார் 150 குடும்பங்களுக்குத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. தெங்கு அபிவிருத்திச் சபையின் ஊடாக அவை வழங்கப்பட்டன. நிகழ்வில் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் க.பரந்தாமன், சின்னடம்பன் கிராம அலுவலர் சி.சிவகாந்தன், ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-10, 101)

**குறிப்பு:-**

21ஆம் பக்கத்தில் உள்ள **'பார்வதி'** என்ற சிறுகதையின் தொடர்ச்சி 37ஆம் பக்கத்திலேயே பிரசுரமாகியுள்ளது.

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்
01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?
ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!
ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302/ 075 509 5887



ஜெய்குருதேவ்
வாழும் கலை
பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரின் வாழும் கலை மையத்தின் சிரேஷ்ட ஆசிரியரான ராஜ கோபால்ஜியின் ஆனந்தத்திற்கான பயிற்சி
சிறப்பம்சம்
- சுதர்சனக்கிரியா
- யோகா / பிராணயாமா
- தியானம்
- கலந்துரையாடல்
பலன்கள்
- மனஅழுத்தத்தை போக்கும்
- மேம்பட்ட ஆரோக்கியம்
- நடுநிலையில் இருத்தல் /அதீத உற்சாகம்
- படைப்பாற்றலையும் செயற்திறனையும் அதிகரிக்கும்.
பயிற்சி நாள்கள் : 2017.08.29 - 31 வரை
நேரம் : பிற்பகல் 5.30 - 7.30
இடம் : இந்து சமயப் பேரவை,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
077 760 7008





பாரம்பரிய ஓடியற் கூழில் பிரசித்தி பெற்றவர்களான
யாழ்பாடியின்
வாடிக்கையாளர்களின் வேண்டு கோளுக்கு இணங்க பிரதி புதன்கிழமை தோறும்
இரவு 6.30 - 9 மணிவரை
ஒரே கைப்பக்குவமான வல்லுனர்களால் குழல் புட்டு, உரலில் இடித்த சம்பல், சொதி மற்றும் றால் பிரட்டல், கணவாய் மற்றும் நண்டுக்கறி என்பவற்றை பெற்றுக்கொள்ள முந்திக்கொள்ளுங்கள்
(எம்மிடம் நிறைவான தங்குமிட வசதி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உண்டு)
தொடர்பு: யாழ்பாடி
தொ.பே.:075 987 5800/021 222 6868
49,51 - அம்மன் வீதி, நல்லூர்.
Colombo - T.P.:075 653 0348



வல்வை முதியோர் இல்லம்
பெண்கள்
பிள்ளைகளாலும், உறவினர்களாலும் உடனிருந்து பராமரிக்க முடியாது போனவர்களினதும் தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள முடியாதவர்களினதும் பாது காப்பை உறுதிப் படுத்துவதற்காகவும் அவர்களது நலன் களைப் பேணுவதற்காகவும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நடத்தப்படும் இல்லமாகும். இதுவரை தொடர்பு கொண்ட நபரும் இனிமேல் தொடர்பு கொள்ள இருப்பவர்களும் இவ் இல்லத்தின் சேவையைப் பெற்று பயனடைய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.
ஊறிக்காடு, வல்வெட்டித்துறை,
இலங்கை.
தொடர்பு :- 021 300 7598/ 077 810 6857
077 259 4273, 00614 693 27826


வேலைவாய்ப்பு
TFI நிறுவனத்துடன் இணைந்து நிதித்துறையின் முன்னேற்றப் பாதையில் நீங்களும் பயணியுங்கள்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (Marketing Officers) - ஆண் (லீசிங்) (வவுனியா மாவட்டம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி/ கொடிகாமம்)
- நிதி வசூலிப்பு உத்தியோகத்தர் (Recovery Officer) ஆண் (லீசிங்)
- கணக்கீட்டு உதவியாளர் (Accounts Assistant) பெண்
வருமானம் – நிரந்தர வருமானம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்
தகைமைகள்
கல்வித் தகைமைகள் - உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவை 3 பாடங்களில் சித்தி
- வயதெல்லை - 19 வயதுக்கு மேல்
- நிதி மதிப்பீடு தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.
விண்ணப்பதாரி
தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி நிதி சம்பந்தமான பல்வேறுபட்ட செயற்பாடுகளைக் குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும். தேவையேற்படின் நீண்ட தூரங்களுக்கு பயணம் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
மேற்குறிப்பிட்ட பதவிக்கு நீங்கள் தகுதியுடையவராயின் உறவினர் அல்லாத இரண்டு நபர்களின் விவரங்களுடன் சுயவிவரக் கோவையை இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 தினங்களுக்குள் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
மனிதவளப் பிரிவு
ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ஸ் பி.எல்.சி
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாகபூஷணி திருமண சேவை
எம்மிடம் ஏராளமான மணமக்கள் உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.
ஞாயிறு உட்பட எல்லா நாள்களும் திறந்திருக்கும்.
021 222 9306, 077 138 7596
383/14B, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வடக்குப் பக்கம்)

பழமரக்கன்றுகள் விற்பனைக்கு
தென்னங்கன்று (நல்ல இனம், பல இனம்), மாங்கன்று (பல இனம்), தோடை, தேசி, மாதுளை (நிமாலி), 1Kg கொய்யா, லாவல், கஜு, பசன், நெல்லி (முழு), அரை நெல்லி, விலும்பிள், யம்பு, கமுகு, பலா, வெற்றிலை, தேக்கு, சவுக்கு, மலைவேம்பு, சித்திரவேம்பு, வேம்பு, சமண்டலை, இலுப்பை, மருது, காயா, முதிரை, பாலை, கருங்காலி, ரெட் லேடி பப்பா, முருங்கை PKM, வில்வம், கறுவா, கராம்பு, கொண்டல் மற்றும் பல இனப்பூங்கன்று களும் சாடிவகைகளும் விற்பனைக்குண்டு.
நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு, (கணேசா பாடசாலைக்கு அருகில்)
077 612 9343
கிளை : K.K.S. வீதி, இணுவில்.

வங்கி நதிநிறுவனத்திற்கு கடன் வசூலிக்கும் அதிகாரிகள், ஒருங்கிணைப்பாளர்கள் உடன் தேவை
கடன் வசூலிக்கும் அதிகாரி (Recovery Officer)
இலங்கையில் பிரசித்திபெற்ற நிதி நிறுவனத்தில் இணைந்து மாதாந்தம் ரூ.50,000/- க்கு மேல் வேதனமாக பெற்று கொள்ளலாம். மோட்டார் சைக்கிள் ஓட்டும் அனுபவமும், க.பொ.த (சா/த) சித்தியும், தாம் மேற்கொள்ளும் பணியில் அதீத சிரத்தையும், கீழ்காணும் பிரதேசங்களில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மூதூர், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை
சிங்களம் பேசத் தெரிந்தோருக்கு முன்னுரிமை
ஒருங்கிணைப்பாளர் (தமிழ்மொழி) (Coordinator)
- க.பொ.த. உயர்தர சித்தி பெற்றவராகவும், கணனி அறிவுடையவராகவும், பொரலஸ்கமுவயில் அமைந்துள்ள எமது பிரதான காரியாலயத்திற்கு அண்மையில் பாடசாலையிலிருந்து நீங்கிய இளையோர் பயிற்சி உத்தியோகத்தர்களாக இணைந்துக்கொள்ளப்படுவர்.
சம்பளம் பேசி தீர்மானிக்கலாம்.
சுஜித் - 011 4472 826 / 070 3454 575
நுவன் - 011 4472 803 / 076 3598 833
ரஷீட் - 011 4472 820 / 070 2598 517
திலக் - 011 4472 810 / 071 8692 605
N&G Ads
Sensus BPO Services (Pvt) Ltd
173 - 2/A, Bellanwila, Boralesgamuwa.
Fax : 0112 721 746 | E-mail : thilkw@sensus.lk

Baraka
ஆரோக்கியமான வாழ்க்கை, நாளாந்தம்
கருஞ்சீரக எண்ணெய்
(Black Seed Oil)




- ஆஸ்துமா
- பீனிசம்
- இருமல்
- தும்மல்
½ தேக்கரண்டி வீதம் தினமும் காலையில் குடித்து வருவதோடு, எண்ணையின் சிறிய அளவை சூடாக்கி பூச வேண்டும். கொதிக்கும் நீரில் கருஞ்சீரக எண்ணெய் சிறிதளவு விட்டு ஆவி பிடிக்கவும். 3 தொடக்கம் 7 நாட்கள் வரை மேற்கொள்ள வேண்டும்.
ஆயுர்வேத திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டது.
GMP, HACCP, ISO 22000 & 14001 CERTIFIED COMPANY
0117 772277
www.baraka.lk

# துன்னாலை பதற்ற நிலைமை தொடர்பாக நேற்றுக் கூட்டம்

## வன்முறையில் ஈடுபட்டவர்களை சரணடையுமாறு பொலிஸ் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.27

துன்னாலை மக்களுக்கும் வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் றொசான் பெர்னான்டோவுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட சூட்டுச் சம்பவத்தை அடுத்து அந்தப் பிரதேசத்தில் காணப்படும் இயல்பற்ற நிலைமை தொடர்பில் அதில் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித பெர்னான்டோ, காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்கசகர் றஞ்சித மகாசிங்க உட்படப் பொலிஸ் அதிகாரிகள் பலரும், யாழ்.மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகளும், துன்னாலைப் பிரதேச மக்களுக்கும் கலந்து கொண்டனர்.

வடமராட்சி கிழக்கில் நடந்த சூட்டுச் சம்பவத்தை அடுத்து துன்னாலையில் போர்க் கால நிலைமை காணப்படுகின்றது என்றும் மக்கள் அச்சத்துடன் நடமாட வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. துன்னாலை சுற்றி வளைக்கப்பட்டு பெரும் எண்ணிக்கையானோர் கைது செய்யப்பட்டதை அடுத்து அந்தப் பகுதி இளைஞர்கள் அச்சத்தால் தலைமறைவாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். அதனால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"சூட்டுச் சம்பவத்தின் பின்னரான பொலிஸாரின் நடவடிக்கையில் வீதியில் நின்றவர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டுள்ளனர். பெண்கள், சிறுவர்கள் அச்சத்துடன் உள்ளனர். பொலிஸார் யாரைக் கைது செய்யப்போகின்றார்கள் என்ற விவரங்களைக் கிராம அலுவலரிடம் கொடுத்தால் அவர்கள் பொலிஸ் நிலையம் சென்று பேச முடியும்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள இளைஞர்கள் தொழில் வாய்ப்பு இல்லாமல் வறுமையில் வாழ்கின்றனர். சிலர் செய்த குற்றத்துக்காக அனைவருக்கும் தண்டனை கொடுப்பது நியாயமல்ல. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும். கைது செய்யப்பட்டவர்களை இழிவுபடுத்தும் விதத்தில் பொலிஸார் செயற்படுகின்றனர். குற்றம் செய்யாதவர்களை விடுவிக்க வேண்டும்." என்று பிரதேச மக்கள் கலந்துரையாடலில் குறிப்பிட்டனர்.

"சூட்டுச் சம்பவத்தின் பின்னர் மக்கள் சட்டத்தைக் கையில் எடுத்தமை தவறு. இலங்கையில் அனைவருக்கும் சட்டம் சமம். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொலிஸார் யாருடனும் தனிப்பட்ட கோபத்துடன் நடந்து கொள்வதில்லை. நாம் எமது தொழிலைச் செய்யவே இங்கு வந்துள்ளோம். எமக்கு சாதி, மத பேதம் ஏதுமில்லை. கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள். வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதற்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

பொலிஸ் வாகனம் மீது கல் வீசித் தாக்கியமை, பொலிஸ் காவலரண் தாக்கப்பட்டமை, பொலிஸ் உத்தியோத்தர் வீடு தாக்கப்பட்டமை தொடர்பில் 100 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையோர் எங்கே?.

பொதுமக்களுக்கு இடையூறு இல்லாது சந்தேகநபர்களைக் கைது செய்யப் பொலிஸாருக்குப் பணிக்கப்பட்டுள்ளது. கிராம அலுவலரின் ஊடாக நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளைத் தொடர்பு கொண்டு அவர்கள் ஊடாக பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மணல் ஏற்றிய வாகனத்தில் பயணித்த 4 பேரையும் இதுவரை காணவில்லை. அவர்கள் சரணடைந்தால் வழக்கை இலகுவாகக் கொண்டு நடத்தமுடியும். நாட்டில் தற்போது சமாதானம் நிலவுகின்றது. யாரும் வன்முறையை விரும்பவில்லை. வன்முறைக்கு இடம்கொடுத்தால் பயங்கரவாதம் தோன்றும். வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்படுவார்கள். குற்றம் செய்யாதவர்கள் நீதிமன்றால் விடுவிக்கப்படுவார்கள்" என்று வடமாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் றொசான் பெர்னான்டோ தெரிவித்தார்.

(ற-26)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி தந்தை, மகன் படுகொலை

## சந்தேகத்தில் மூன்று பேர் கைது

கூரிய ஆயுதத்தால் தாக்கி தந்தை மற்றும் மகன் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் மினுவாங்கொடை, கமன்கெதரப் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது. இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பே கொலையில் முடிவடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். வீட்டின் அருகில் மறைந்திருந்த சிலரால் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது , சந்தேகநபர்கள் கூரிய ஆயுதத்தால் தந்தை மற்றும் மகனின் கழுத்து, தலைப்பகுதிகளைத் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. தாக்குதலுக்கு உள்ளான இருவரும் மினுவங்கொடை மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பயனின்றி அவர்கள் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இருவரது சடலங்களும் மினுவங்கொடை மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




# 78 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு



மட்டக்களப்பு, ஓக. 27

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட 78 வீடுகள் பயனாளிகளிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

மீள்குடியேற்ற மற்றும் மறுவாழ்வு அமைச்சு இந்த வீடுகளை நிர்மாணித்துள்ளது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பயனாளிகளிடம் வீடுகளை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் 8 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதே வேளை 25 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளும் இதன் போது வழங்கப்பட்டன. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மறுவாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கென கடந்த வருடம் 820 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் கோரளைப்பற்று வடக்கு, கோரளைப்பற்றுத் தெற்கு, கோரளைப்பற்று மேற்கு, கோரளைப்பற்று, மண்முனை மேற்கு போரதீவுப்பற்று ஆகிய பிரிவுகளில் ஆயிரத்து 35 வீடுகள் அமைக்கப்பட்டுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சேதமடைந்த 756 வீடுகள் 110 மில்லியன் ரூபா நிதியில் திருத்தம் செய்யப்பட்டன. அதே போன்று இந்த வருடம் 525 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 656 வீடுகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் கட்டி முடிக்கப்பட்ட ஒரு தொகுதி வீடுகளே பயனாளிகளிடம் நேற்று கையளிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10, 47)

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சுபமங்களகரமான ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 11 ஆம் நாள் (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.31 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் துலாம் லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி மகேஸ்வரன் சுந்தராம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் திருநிறைச்செல்வன்
**பிரதீப்**
அவர்களுக்கும்



திரு.திருமதி செல்லத்துரை இராஜேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி திருநிறைச்செல்வி
**சிந்துகா**
அவர்களுக்கும்

இறையருள் துணைகொண்டு அன்புள்ளங்கள் சேர, சுற்றமும் நட்பும் சூழ கன்னிகாதான மாங்கல்யதாரணம் இல.1229, காங்கேசன்துறை வீதி, பூநாறிமரத்தடி, **"செல்வ மஹால் திருமண மண்டபத்தில்"** நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்பு உபசாரம் :**

30.08.2017 புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் இல.10,12,பூநாறி மரத்தடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் **"செல்வா பலஸ் மண்டபத்தில் ஆம்பல் அரங்கில்"** நடைபெறும்.

**குறிப்பு :**
இவ் அழைப்பினை சுற்றத்தார், உறவினர்கள், நண்பர்கள், எம்பணியில் தொடர்புடையவர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**இங்ஙனம் தங்களின் அன்பான இனிய நல்வரவை நாடும்,**

இல.25/8, அரசடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி செல்லத்துரை இராஜேஸ்வரி குடும்பத்தினர்,
கவியரசு நகைப்பூங்கா உரிமையாளர்,
செல்வமஹால் மண்டப உரிமையாளர்,
இராஜேஸ்வரி மண்டப உரிமையாளர் (கோண்டாவில், தெல்லிப்பழை),
திவ்யமஹால் மண்டப உரிமையாளர், செல்வாபலஸ் மண்டப உரிமையாளர்.
021 221 9779, 021 222 4360

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### வீடு விற்பனைக்கு
உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் முதலாம் கட்டையில் அமைதியான நல்ல சுற்றாடலில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு.
**077 854 6124**

### விற்பனைக்கு
யாழ்ப்பாணம், மானிப்பாய் தெற்கில் 6¼ பரப்புக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. பரப்பு 6.5 லட்சம்.
**077 478 7523**

### பன்னங்கண்டி மேட்டுக்காணி விற்பனைக்கு
பரந்தன் பூங்காவனம் சந்தியிலிருந்து கென்னடிறோட் மூன்றாம் வாய்க்கால் பன்னங்கண்டி கிராமசேவகர் அலுவலகம் எதிரே களஞ்சியம், கைத்தொழில், பல்துறைப் பண்ணை, ஆன்மீகதிருநிலையம், வீடு மற்றும் பலதுறைகளிற்கும் உகந்த மேட்டுக்காணி அரை (½) ஏக்கர் விற்பனைக்கு. விலை ரூபாய் இருபத்திநான்கு லட்சம் பரந்தன் கிளிநொச்சி நகரங்களின் துரித விரிவாக்கத்திற்கு மிக அண்மித்த மையப்பிரதேசம் சிறந்த ஆர்வமுள்ளவர்களின் தொடர்புகள் வரவேற்கப்படுகின்றன. பேசித்தீர்க்கலாம்.
**077 947 2275/ 077 935 2274**

### பனர் மெசின் விற்பனைக்கு
Model :- Thunderjet AD 1801.6 Feet Banner Machine
**077 545 1100**

### வீடு வளவு விற்பனைக்கு உண்டு.
இணுவில் தெற்கில் 8 பரப்புக் காணியில் வீடு விற்பனைக்கு உண்டு.
**077 196 8633** (CS 7280) (14)

### காணி விற்பனைக்கு
ஏ9 வீதியிலிருந்து நூறு யார் தூரத்தில் புங்கன்குளம் வீதியிலுள்ள 2¾ பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
**077 515 0345**

### மலிவு விற்பனை
புதிய வேப்ப மரக்கட்டில்கள் விற்பனைக்குண்டு
தொடர்பு :- 5/10, கருவப்புலம் வீதி, முதலாவது ஒழுங்கை, (யாழ்.மருத்துவ பீடத்துக்கு முன்பாக)

## தேவை

### பணிப்பெண் தேவை
கொக்குவிலிலுள்ள வீட்டில் வீட்டு வேலை செய்யக்கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
**077 929 8034**

### வீடு வாடகைக்குத் தேவை
வைத்திய குடும்பம் ஒன்றுக்கு யாழ். நகரை அண்டிய பகுதியில் கார் Park உடன் வீடு வாடகைக்குத் தேவை.
**076 462 1813**

### பணிப்பெண் தேவை
சிறிய வைத்திய குடும்பத்துக்கு வீட்டில் தங்கி வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
**076 462 1813**

### தோட்ட வேலையாள் தேவை
வவுனியாவில் தோட்டத்தில் குடும்பமாக தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வேலையாள் தேவை. தங்குமிட வசதியுண்டு. அளவெட்டி - ஏழாலையை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
**077 837 5832** (AKN 218) (14)

### மணமகள் தேவை
யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம். 1985 அனுசம், செவ்வாய்க்குற்றம் இல்லாத எஞ்சினியர் மணமகனுக்கு அழகான ஆசிரியையை எதிர்பார்க்கின்றோம். சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப்படமாட்டாது.
**071 841 6746**

### தேவை
50 வயதிற்கு மேற்பட்ட ஆண் வேலை உதவியாளர் தேவை. சமையல் வேலை தெரிந்திருப்பவர் விரும்பத்தக்கது. தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
**077 698 3691** (CS 7192) (14)

### வேலையாள்கள் தேவை
நீர்வேலி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு A.D சாரதி அனுமதிப் பத்திரமுள்ள சாரதியும் சாரதி உதவியாளரும் ஆண் விற்பனையாளரும் தேவை.
வயது 25-50
**077 433 0210**

### வேலையாள்கள் தேவை
கோப்பாய் சந்தியில் இயங்கும் பிரபல உணவகம் ஒன்றுக்கு சமையல் செய்யபவரும், றொட்டி தயாரிப்பாளரும் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாக வேலைக்குத் தேவை. (CS 7248) (14)
**075 925 2629**

### தேவை
பிலியந்தலையில் இயங்கும் இரும்பு தொழிற்சாலைக்கு தொழிலாளர்கள் தேவை. சம்பளம் 37500/- ரூபாய் + (Incentive) உணவு தங்குமிடம் இலவசம். கிராம சேவகர் சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், தேசிய அடையாள அட்டையுடன் தொடர்பு கொள்ளவும்.
**071 348 9084, 078 299 5265**

## ஏனையவை

### சேவை
ஆலயப் பூசைகளுக்கு மோதகம், வடை, சர்க்கரைப் பொங்கல் செய்து கொடுக்கப்படும். இடம் - கொக்குவில்.
**075 743 2461**

### உடன் தேவை
கணினியில் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக் கூடிய பெண்பிள்ளைகள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். மற்றும் (டிஜிற்றல்) போட்டோ கொப்பி செய்யக் கூடியவர்களும் தொடர்பு கொள்ளவும்.
(மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்)
இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(யாழ்.பல்கலைக்கழகம் அருகில்)
**076 414 3909**

### பணிப்பெண் தேவை
மல்லாகம் துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வீட்டுக்குப் பணிப்பெண் தேவை.
தங்குமிட வசதி செய்துகொடுக்கப்படும்.
**077 502 7708**

### வீடு தேவை
யாழ். நல்லூரை அண்டிய பகுதியில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு தேவை.
**077 609 5604**

### வீடு வாடகைக்கு உண்டு
யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (யாழ். பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில்) வீடு வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
**077 277 3671**

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1985 ஆம் ஆண்டு டோகாவில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை.
தற்போது யாழ் வந்துள்ளார். (CS 7216) (14)
**077 850 0395**

### காணி விற்பனைக்கு
ஹொறவப்பொத்தான வீதி, பள்ளி வாசலுக்கு அருகில் 16 1/4 அகலம் 135 அடி நீளமுள்ள நிலம் உறுதிக் காணி உடன் விற்பனைக்கு
**077 410 5294**

### வீடு வாடகைக்கு
யாழ்.நகருக்கு 2km உட்பட்ட நடுத்தர குடும்பம் வசிக்கக் கூடிய வீடும், கந்தர் மடம் சந்திக்கு அண்மையில் கடைகளும் வாடகைக்குண்டு.
**076 654 6112**

### ஆடு விற்பனைக்குண்டு
நல்ல இன ஆடுகள் விற்பனைக்கு உண்டு.
**076 654 6112**

### அறை வாடகைக்கு
பலாலி வீதியில் திருநெல்வேலி Farm School அருகில் வசதிகளுடன் கூடிய பெரிய அறை வாடகைக்குண்டு. உத்தியோகத்தர், பல்கலை மாணவர்கள் அணுகவும். (CS 7002) (14)
**076 391 6374**

### மணமகள் தேவை
யாழ். இந்து 1989 (அனுஷம்) ஆம் ஆண்டு பிறந்த அரச உத்தியோகத்தில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகான பெண் உடன் தேவை.
**077 333 0080/ 076 549 7851**

### தையல் வேலைக்கு ஆள் தேவை
யாழ் நகரில் இயங்கும் தையல் நிலையத்திற்கு பெண்களுக்கான ஆடைகள் தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. (CS 7282) (14)
**077 961 3202/ 077 899 9917**

### பரிசாரகர் தேவை
கொழும்பு 13 ஜிந்துப்பிட்டி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு
**பரிசாரகர்**
(மடப்பள்ளி ஐயர்) உடனடியாகத் தேவை.
தங்க வீடு வசதியும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.
விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு - 13.
Ph: 0722 2447606 / 2433881
Fax: 2336033
Email : muruganginthupitiya@gmail.com

### CAR FOR SALE
Doctor used Mitsubisi Lancer Car
No: N.P.HF 7XXX
For Sale.
**077 601 3616**

### வாடகைக்கு
கே.கே.எஸ் வீதி, மல்லாகத்தில் பங்களா ஒழுங்கை அருகில் மாடி வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கும் ஏற்றது.
**077 423 6645**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☏ 021- 2227712
facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

### மர அரிவு ஆலை விற்பனைக்கு உண்டு
மிருசுவில் உசன் வீதியில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் உள்ள மர அரிவு ஆலையுடன் கூடிய 6 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 255 7761

### வீடு வாடகைக்கு
இரண்டு வருடங்களுக்கு இருபாலை கிழக்கு றோட்டில் வீடு வாடகைக்குண்டு.
**071 841 9892**

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

YBLSC

# Yarl Beauty & Language's Skills College

மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!

## அழகுக்கலை

# Certificate in Self Makeup
# Diploma in Beauty Culture & Hairdressing
# Advance Dip in Beauty Culture & Hairdressing

## கேக் ஐசிங்

# Certificate in Cake Making & Decorating
# Diploma in Cake Making & Decorating

## தையல்

# Certificate in Tailoring
# Diploma in Tailoring

SPECIAL OFFER

**30% OFF + சாறி பிளவ்ஸ் பயிற்சி இலவசம்**

பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் 03.09.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 04.09.2017 அன்று 10.00 மணிக்கு

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலைச்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

# விசேட விலைக்கழிவு !




நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து தேவைகளுக்கும் மிக பொருத்தமான, சிறந்த தீர்வினையும் விற்பனைக்கு பிந்திய சேவையினையும் மிகவும் அர்பணிப்புடன் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

Central Environmental Authority Approved.



1. வீடு, தொழிற்சாலை, உணவகங்களுக்கு உகந்த எல்லா அளவிலுமான RO குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.
2. நீர்க்குழாய்கள், Tiles, Bathroom fittings களில் படியும் கல்சிய, மக்னீசிய படிவுகளிலிருந்து விடுதலை பெற Water Softener System.
3. சுற்றாடல் அதிகார சபையின் நியமங்களிற்கேற்ப கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை நிறுவி பராமரித்தல்.
4. நீச்சல் தடாக வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு.

குறிப்பு :- பெரிய வேலைத்திட்டங்களுக்கு மிகக் குறைந்த வட்டியுடனான வங்கிக் கடன் சலுகைகள் பெற்றுக்கொள்ளலாம்!

WE ACCEPT MasterCard VISA

## Everpure Hi-Tec (Pvt) Ltd.

No.341, K.K.S Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230

# உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

ISO 9001:2008 CERTIFIED

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ | காலி | மாத்தறை | அநுராதபுரம் | நுகேகொட | கம்பஹா | யாழ்ப்பாணம்
நீர்கொழும்பு | கண்டி | குருநாகல் | கிரிபத்கொட | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய

## இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

07, September, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

## IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

## KIDS' Class — Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**British Way® English Academy**


**Contact (Jaffna Branch) : 021 300 55 55**

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் குலேஸ்வரன் (குலம்)



விதானையார் ஒழுங்கை, இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குலேஸ்வரன் 25.08.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் செல்லம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பா பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும் பாமதியின் அன்புக் கணவரும் மங்களேஸ்வரி, குணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் றஜிதா, துவாரகன், துஜிரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்சிகன், ஜனுசிகன், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விதானையார் ஒழுங்கை,**
**இருபாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**076 609 4923**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
பவானிதேவி தயாபரநாதன் அவர்களின்
மாமியார்
திருமதி **பரமேஸ்வரி சிவராசா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
11 . 11 . 1924



மறைவு
26 . 07 . 2017

### கார்த்திகேசு குமாரரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

கைபிடித்த நாள் முதலாய்
பிரியவில்லை எம்மைவிட்டு
இப்போது மட்டும் எப்படி மனம் வந்ததையா!
சொல்லாமல் கொள்ளாமல் - உங்களை
யமன் கூட்டிச் சென்றானோ!
நிலை தடுமாறி நிற்கும் எங்களை
நிம்மதியாக வாழ அருள் புரியுங்கள் - எம்
வாழ்க்கை காலம் உள்ளவரை
உங்கள் நினைவோடு வாழ்ந்திருப்போம்

மணியகாரன் வீட்டடி,
வேலணை வடக்கு,
வேலணை - 05

குடும்பத்தினர்.

### புத்தூர் சாலை விபத்தில் தாயும் குழந்தையும் காயம்

ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் தாயும் குழந்தையும் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஆவரங்கால் மேற்கு, புத்தூர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த தாயும் 3 வயதுக் குழந்தையுமே காயமடைந்தனர். காண்டீபன் சஜித் (வயது -3) காண்டீபன் நித்திய மலர் (வயது -40) ஆகிய இருவரும் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (21,8,ரி1)

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையற்கரசி சரவணமுத்து



**தோற்றம்**
**26.01.1925**

**மறைவு**
**23.08.2017**

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி சரவணமுத்து 23.08.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரவணமுத்து (ஆசிரியர்) இன் அன்பு மனைவியும் சோமசுந்தரம், கனகசுந்தரம், மகேஸ்வரி, ராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், துரைராஜா மற்றும் சாரதாதேவி, பரிமளம், சேனாதிராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கௌரி, சக்திவேல், சத்தியமூர்த்தி, கருணாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவராசா, அஜி, மல்லிகாதேவி, வேணுசுதா ஆகியோரின் மாமியாரும் உமாகரன், கஸ்தூரி, ஐங்கரன், கயத்தா, றஜீந்தன், கஜந்தன், தாரணி, சஞ்சீவன், சகானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜே, அஸ்ணவி, அபினன், கரேஷ், சச்சின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (26.08.2017) சனிக்கிழமை மாலை 5.00 தொடக்கம் 9.00மணி வரையும் இன்று (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி தொடக்கம் 1.30 மணிவரையும் Chapel Ridge Funeral Home, Located at 8911 Woodbine Avenue, Markham, Ontario, L3R 5GI இல் பார்வைக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 1.30 தொடக்கம் 3.30 மணிவரையும் அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் மாலை 4.00 மணியளவில் Highland Hills Crematorium, 12492, Woodbine Avenue Gormley, Ontario, LOH 1Go எனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

கௌரி சிவராஜா (மகள்) - 416 297 7821
சத்தியமூர்த்தி (மகன்) - 416 798 9055
கருணாகரன் (மகன்) - 416 321 2912
சக்திவேல் (மகன்) - 01161 26258 3479
செ.கனகசுந்தரம் (தம்பி - இலங்கை)
94 11 243 3465

## சாரதிக்கு ரூ.3 ஆயிரம் தண்டம்

பதிவு செய்யப்படாத வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, சாரதியை எச்சரிக்கை செய்து 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (ஐ-9)

## வவுனியா மருத்துவமனை விநாயகர் ஆலயத்தில் குடமுழுக்கு

வவுனியா, ஒக.27
வவுனியா பொது மருத்துவமனை வளவிலுள்ள விநாயகர் ஆலய குடமுழுக்கு இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும்.
நேற்றையதினம் எண்ணெய்க்காப்பு இடம்பெற்றது. இன்று குடமுழுக்கும், அதனைத் தொடர்ந்து 10நாள்கள் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. குடமுழுக்கு சிவஸ்ரீ முத்து ஜெயந்தி குருக்கள் தலைமையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (ய.21)









# மக்கள் நலத்திட்டங்கள் மட்டுவிலில் முன்னெடுப்பு

தென்மராட்சி, ஓக. 27
மட்டுவில் பிரதேச மக்க ளுக்கான நலத்திட்டங்கள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. விளையாட்டு விழா மருத்துவ முகாம், குருதிக் கொடை, மூக்குக்கண்ணாடிகள் வழங்கல், மரக்கன்றுகள் வழங்கல் மற்றும் டெங்கு, நீரிழிவு, பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனை தொடர்பான கருத்தரங்குகள் உள்ளிட்ட நலத்திட்டங்கள் நேற்று நடத்தப்பட்டன. மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அரங்கில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. ஆண் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் நுணாவில் சந்தியில் ஆரம்பித்து, மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானம் வரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து குருதிக் கொடை நிகழ்வு நடைபெற்றது. மட்டுவில் பிரதேச மக்களுக்கான நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் நீரிழிவு, குருதி அமுக்கம், கண் போன்ற பரிசோதனைகள் நடத்தப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன. கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட 120 பேருக்குக் மூக்குக்கண்ணா டிகள் இலவசமாக வழங்கப்பட்டன. அத்துடன் பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில் வாழும் குடும்பங்களுக்குத் தென்னை, கமுகு, மரக்கன்றுகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் உ.சிசில் றெமின்டஸ் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய முதன்மைப் பொறுப்பதிகாரி விருந்தினராகக் கலந்து கொண்டார். சாவகச்சேரி லயன்ஸ் கழகமும், சாவகச்சேரிப் பொலிஸாரும் இணைந்து இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## வடக்கு மாகாணசபையும் வரலாற்றின் அநாமதேயங்களும் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.27
"வடக்கு மாகாணசபையும் வரலாற்றின் அநாமதேயங்களும்" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப 4 மணிக்கு நடைபெறும். யாழ்ப்பாணம் இலக்கம் 361, ஸ்ரான்லி வீதியிலுள்ள டி.எம்.ஐ கல்வி நிறுவனத்தில் ஏ.சி.ஜோர்ச் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆரம்ப உரையை சொ.சிவபாலன் நிகழ்த்தவுள்ளார். (ய)



## சிறுவனை காணவில்லை

மன்னார், ஓக. 27
மன்னார் வங்காலை 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செபஸ்தியான் சாளியான் மார்க் (வயது-14) என்ற சிறுவனைக் காணவில்லை இவ்வாறு சிறுவனின் தந்தை நேற்று முன்தினம் வங்காலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கடந்த மாதம் 24 ஆம் திகதி முதல் சிறுவன் காணாமல் போயுள்ளார். மன்னாரில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். சிறுவன் தொடர்பில் விபரம் தெரிந்தவர்கள் அல்லது அவரைக் கண்டால் 0776125880 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ10-56)

## பேருந்துச் சாரதி மீது அராலியில் வாள்வெட்டு

தனியார் பேருந்துச் சாரதி மீது இனம்தெரியாத குழுவினர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதில் படுகாயமடைந்த சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் அராலியில் நேற்று முன்தினம் இரவு நடந்தது. சம்பவத்தில் அராலியைச் சேர்ந்த தெய்வேந்திரம் லோகேந்திரம் (வயது -28) என்பவர் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் சென்ற பத்துப் பேர் கொண்ட குழுவினர் சாரதி மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-ரி1,8)




DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவிலக்கம். PB270
முன்னறிவித்தலின்றி விலையில் மாற்றமேற்படக்கூடும்
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 2. 011-4700600 011-4700677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

| | |
|---|---|
| 180 UG4 | Rs.384,550/- |
| 150 UG4.5 | Rs.335,950/- |
| 135 LS | Rs.300,780/- |

LG Life's Good

# ரூ.3,806 இலிருந்து

மாதாந்த தவணைக் கட்டண முறையில்

LG உண்மையான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரமொன்றை இன்றே உங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லுங்கள்!

வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு



## கண்மூடித்தனமாக சுத்திகரிக்கப்படாத எந்த நீரையும் பருகாதீர்கள்!



### உண்மையான RO வடிகட்டுதல்

கண்களுக்குப் புலப்படாத மற்றும் புலப்படும் பெரிய துகள்கள், துரு, கரை, சேறு, மணல், மண், கன உலோகம், கல்சியம், உப்பு, பக்டீரியா, வைரஸ், கிருமிநாசினிகள் மற்றும் ஆசனிக் ஆகியவற்றை நீக்கி 100% தூய்மையான மற்றும் ஆரோக்கியமான நீரை பெற்றுத்தருகிறது.

### உண்மையான பாதுகாப்பு

**இரட்டை பாதுகாப்பு ஸ்டைன்லெஸ் ஸ்டீல் நீர் தாங்கி**

காற்றுப் புகாத மூடியைக் கொண்ட ஸ்டைன்லெஸ் ஸ்டீல் தாங்கியில் நீர் எப்போதும் புத்துணர்வோடு இருக்கும்.

### உண்மையான அதிசிறந்த பராமரிப்பு

**டிஜிட்டல் பராமரிப்பு**

நீர் தாங்கி மற்றும் நீர் பயணிக்கும் சகல பாதைகளையும் தன்னியக்க டிஜிட்டல் பராமரிப்பு இயந்திரம் மூலம் தொடர்ந்து கிருமியழித்து சுத்திகரிக்கின்றது.

யாழ்ப்பாணம் (ஸ்டான்லி வீதி) 021-2220981, யாழ்ப்பாணம் (மானிப்பாய் வீதி) 021-5776107, யாழ்ப்பாணம் (ஸ்டான்லி வீதி) 021-5776153, திருநெல்வேலி -021-2220247, சுன்னாகம்-021-2240440, சங்கானை-021-2250106, மானிப்பாய்-021-5776100, அச்சுவேலி-021-3202027, நெல்லியடி -021-2264934, சாவகச்சேரி-021-2270005, மல்லாவி-021-5776108, முள்ளியவளை -021-5776104, முல்லைத்தீவு 021-5776154, புதுகுடியிருப்பு (பரந்தன் வீதி) -021-5776156, பளை - 077-3358560, புதுகுடியிருப்பு (முல்லைத்தீவு வீதி) -021-5776110, கிளிநொச்சி (A9 வீதி) 021-5776103, கிளிநொச்சி (கனகபுரம் வீதி) 2-021-5776155, பருத்தித்துறை 021-2262456, தெல்லிப்பளை 021-5776152, மன்னார் (கிராண்ட் பசார்) 023-2251193, மன்னார் (பள்ளிவாசல் வீதி) 023-5776097, முழங்காவில் 021-5776151, முருங்கன் - 023-3238552, கொடிகாமம் - 021-5776109, வவுனியா (கண்டி வீதி) - 024-2224878, வவுனியா (கண்டி வீதி) 024-5776151

Abans

LG Life's Good

# முதல் நாள் தொடக்கம்
## உங்கள் மின்சாரத்தை சேமியுங்கள்

உலகப் புகழ்பெற்ற விற்பனை நாமத்தில் வரும் LG இன்வெர்டர் வளிச்சீராக்கிகள்

**வேறு எங்கும் இல்லாத நம்பமுடியாத விலைகளில்**


மின் சேமிப்பு

நிலையான வேகத்தையுடைய வளிச்சீராக்கிகளை விடவும் 40% வரை விரைவான குளிர்ச்சி

40% வரை சத்தத்தை குறைக்கிறது

பாதுகாப்பு, நீடித்த ஆயுள், துரு பிடிக்காத கொப்பர் கண்டென்சர் அபான்ஸில் மட்டுமே

## LG DUALCOOL INVERTER Air Conditioner



வட்டி இல்லை ஜொலி அதிகம்

INVERTER COMPRESSOR 10 YEAR WARRANTY

| கொள்ளளவு | 12000btu (Smart Inverter) | 18000btu (Dual Cool) | 24000btu (Dual Cool) |
|---|---|---|---|
| சாதாரண விலை | ரூ.102,490 | ரூ.121,990 | ரூ.141,990 |
| விசேட விலை | ரூ.92,900 | ரூ.109,990 | ரூ.129,990 |
| வட்டியற்ற தவணை | ரூ.7,953 | ரூ.9,453 | ரூ.10,992 |

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

மேலுள்ள விலைகள் மற்றும் சலுகைகள் ஆகஸ்ட் 31ம் திகதிவரை மாத்திரம்.

துரித அழைப்பு 011 5999000

நாடளாவிய அபான்ஸ் /அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

*நிபந்தனைகள் உண்டு.

Abans

## இசைப்பேழை வெளியீடு

நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனான்மணி அம்பாள் ஆலயத்தின் 5ஆவது கும்பாபிசேகத்தை முன்னிட்டு 'தயை புரிவாய் தான்தோன்றித்தாயே' என்னும் இசைப்பேழை வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.45 மணிக்கு ஆலயமண்டபத்தில் நடைபெறும். நிகழ்வுக்கு வடக்குமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமை தாங்குவார். வரவேற்புரையை ச.செந்தூரனும், தலைமை உரையை மருத்துவர் வை.யோகேஸ்வரனும் வழங்கவுள்ளனர். (ய)

## நாவற்குழி சித்திவிநாயகர் பெருந்திருவிழா இன்று

நாவற்குழி சிறி சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. திருவிழாக்கள் வரிசையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 6 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (ய.21)




## கொடியேற்றத் திருவிழா

யாழ்ப்பாணம் ஓக. 27
நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்துக்கு தினமும் கடல் வழியாகப் பாம்பு பூ கொண்டுசெல்லும் அனலைதீவு புளியந்தீவு ஸ்ரீநாகேஸ்வரசுவாமி ( சிவன் ) ஆலயத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.
எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. திருவிழாக் கிரியைகள் சிவாச்சாரியர் பீட " வேத சிவாகமஜோதி " வை.தியாகராசாக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (21, 9)

* * *

யாழ்ப்பாணம், ஓக.27
யாழ்ப்பாணம் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாள்கள் திருவிழா நடைபெறும்.
தினமும் காலைநேரப் பூசைகள் 6 மணிக்கும், மாலைநேரப் பூசைகள் 5 மணிக்கும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது.(யாி)

## கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஓக.27
வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்கு நாலாம்பனை அருள்மிகு பிள்ளையார் கோயில் மகாகும்பாபிசேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
இதற்கான கிரியைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.
நேற்று சனிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெற்றது. கோயில் குருமார்களாகிய சிவுசிறி சிவரஞ்சன் குருக்கள், சிவசிறி சி.கபிலன் ஐயா ஆகியோரின் உதவிகளுடன் சில்லையூர் முத்துமாரி அம்மன் கோயில் குருக்கள் சிவசிறி சோ.நடராசக்குருக்கள் முதன்மைக் குருவாக இருந்து கும்பாபிசேகத்தை நடத்தி வைப்பார். கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து 20 தினங்கள் மண்டலாபிசேகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (ய 21, 173)

* * *

யாழ்ப்பாணம், ஓக.27
மந்துவில் வடக்கு புளியந்திடல் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிசேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.03மணிக்கு இடம்பெறும். மகாகும்பாபிசேகக் கிரியைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 7மணிக்கு ஆரம்பமாகின. நேற்று சனிக்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப.3மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெற்றன. இஸ்டலிங்க பூஜா துரந்தார் சிவத்திரு சோம. சந்திரசிகாமணிக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிலை தடுமாறிய முதியவர் கீழே விழுந்து படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக.26
துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் நிலை தடுமாறி கீழே விழுந்து தலையில் காயடைந்து ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காரைநகர் வாரிவளவுப் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நாகமணி நாகராசா (வயது - 53) என்ற முதியவரே இவ்வாறு காயமடைந்தவராவார். குறித்த பகுதியால் துவிச்சக்கர வண்டியில் சென்ற அவர் நிலை குலைந்து நிலத்தில் விழ்ந்தார். இதனால் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.
(21,8,ரி1)



ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு – பண்டாரபுலம்

# தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய

## புனராவர்த்தன அஷ்ட்டபந்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா திருக்குட திருமஞ்சன பெருஞ்சாந்தி

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா - 2017

## ஆலய வரலாறு



இலங்கைத்தீவின் வடபால் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தென் மேற்கே நீண்ட பெரும் நிலப்பரப்பாக இருப்பது லைடன்தீவு. வடக்கே கடலையும், தெற்கே சிறு ஏரியையும் கிழக்கே சரவணைக் கிராமத்தையும் மேற்கே கரம்பன் கிராமத்தையும் எல்லைகளாக் கொண்டு. லைடன்தீவின் வட மேற்கே அமைந்துள்ளது நாரந்த னைக்கிராமம். நிலவளம். நீர்வளம். கடல்வளம் பனைவளம் கொண்ட கிராமமாகவுள்ளது நாரந்தனை கிராமம்

நாரந்தனை வட பகுதி கடலோடு சேர்ந்த இடம் அரச தரவை நிலம் உள்ளது. அந்தக் காலத்தில் கிராம மக்களின் ஆடுமாடு கள் மேய்ச்சல் தரவையாக இருந்தது. வீதிகளை செப்பனிடப் பணி ஒவசியர் மக்களிடம் இருந்து அந்த வகையில் ஊர்காவற்றுறை பகுதிக்கு கரம்பனை சேர்ந்த திரு.துரைநாயகம் அவரகள் ஓவசி யராக இருந்து அவர் 1951 ஆம் ஆண்டு பங்குனி மாதம் கூலி ஆட்களைக்கொண்டு நாரந்தனை வடக்கில் உள்ள அரச காணியில் கல் அகழ்வுசெய்வித்தார். அச்சமயத்தில் பெரும் பாறாங்கல் அகப் பட்டது. அதை வெடி வைத்து தகர்த்தார்கள் அப்போது கலீர் என்ற சத்தத்துடன் பாறாங்கல் உடைந்தது. கூலி ஆள்கள் ஓடிப் போய பார்த்தார்கள் அங்கே ஒரு விக்கிரகமும் பழைய நாணயங்களும் இருக்கக் கண்டாரகள். அயலில் உள்ள மக்களுக்குத் தெரியப்படுத் தினார்கள். எல்லோரும் சென்று பார்வையிட்டனர். இது அம்மன் சிலைபோல உள்ளது. டச்சுக்காலத்துக் காசுகள் என எல்லோ ரும் உணரந்தனர். இவ்விடயம் கிராம விதானையார் மூலம் அரச அதிபர்வரை போய் விட்டது. புதைபொருள் ஆராயசியாளர்கள் கவனத்துக்குப் போகவே அவற்றை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று மக்கள் அம்பாள் தோன்றிய இடத்தில் கொட்டில் போட டு திரைச்சீலையில் அம்மன் படத்தை வடிவமைத்து கொட்டில் வைத்து வழிபடலாயிறறு. அவ்வாண்டிலேயே ஒர அன்பருக்கு அம்பாள் கனவில் தோன்றி "என்னை கடலில் காணபாய" என்று கூறிவிட்டு மறைந்துவிட்டார். காலையில் எழுந்து சில மக்களுடன் போய் கடலில் தேடிப பார்த்தார் முருகக்கல்லிலான இரண்டு தலை உடைந்த நிலையில் மூன்று தலையுடன் நாகவிக்கிரகம தெனபட்டது. அதனை எடுத்து வந்து கொட்டிலில் வைத்து வழிபடலானது.

ஊரமக்கள் ஒன்று சேர்ந்து அதில் ஆலயம் அமைக்கவேண்டும் என்ற ஆர்வத்தின் சைவ மகாசபை என்ற பெயரில் சபை அமைத்து அம்பாள் தோன்றிய இடத்தை மூலஸ்தானமாகக் கொண்டு ஆலயம் அமைத்து. 1958 ஆம் ஆண்டு ஆவணி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் ஆரம்ப (முதலாவது) கும்பாபிஷேகம் நடைபெற்றது. இணுவிலைச் சேர்ந்த அமரர் சிவ ஸ்ரீ.கு. இராமநாதக்குருக்களால கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து அலங்காரத் திருவிழாக்கள் நடைபெற்று வந்தது இரண்டாவது கும்பாபிஷேகம் 1973 ஆம் ஆண்டு நடைபெற்றது. அம்பாளுக்கு சித்திரத் தேர் அமைத்து அம்பிகை தோன்றிய 18 ஆவது வருடமாகிய நள வருடம் ஆவணி மாதம் 21 ஆம நாள (06.09.1976) திங்கட்கிழமை புதிய சித்திரத்தேரில் வீதியுலா வந்து மக்களுக்கு அருள் பாலித்தாள். மூன்றாவது கும்பாபிஷேகம் சுக்கில ஆண்டு ஆனித்திங்கள் 26 ஆம் நாள் (10.07.1989) திங்கட்கிழமை அத்த நட்சத்திரத்தில் நடைபெற்றது. நாட்டில் ஏறபட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் வெளியேறினாரகள். ஆலயத்தில் பூசைகள் இல்லை விளக்கு வைக்க யாரும் இல்லை. ஓரளவு சுமுக நிலை ஏறபட 1996 ஆம் ஆண்டு மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பினார்கள். நாரந்தனை மக்களும் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினரே மீளக் குடியமரதனர் மீளக் குடியமர்ந்த மக்கள் ஒன்று கூடி வெகுதானிய வருடம் ஐப்பசி மாதம் 16 ஆம் நாள் 2.11. 1998) திங்கட்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரத்தில் நாலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அம்பிகைக்கு இராஜகோபுரம் அமைக்கவேண்டும் மென மக்கள் ஆர்வப்பட்டதால் 2011 ஆம் யூலை மாதம 14 ஆம் திகதி இராஜ கோபுரத்துக்கு அத்திவாரம் போடப்பட்டது. கட்டட வேலை கள் நடைபெற்று வரும் சமயத்தில் சாந்தியமருந்துகள் பழுதடைந்து விட்டது. கும்பாபிஷேகம் செய்து பதினாறு வருடத்தில் மேலாகிவிட்டது. திருத்த வேலைகளைச் செய்து கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென குருக்கள் அவர்கள் தெரிவிக்க இராஜகோபுர வேலையை இடை நிறுத்தி 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி பாலஷ்தானம் செய்து ஆலயத்தை புனரமைத்து ஏவி ளம்பி வருடம் ஆவணி மாதம் 11 ஆம் நாள இன்று (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்ற சுவாதி நட்சத்திரத்தில் ஐந்தாவது கும்பாபிஷேகம் அம்பிகையில் அருளால் சிறப்பாக நடைபெறுகின்றது.

**சு. இராமலிங்கம்**
**செயலாளர், சைவமாகசபை,**
**நாரந்தனை.**

### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச்செய்தி



ஊர்காவற்றுறை. நாரந்தனை வடக்கு. பண்டாரபுலம் புண்ணிய பதியிலே வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கின்ற தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாளுக்கும் பிரகார மூர்த்திகளுக்கும் புதுப்பித்து அமைக்கப்பட்ட ஆலயங்களிலே பெருஞ்சாந்தி மகா கும்பாபிஷேகம் இன்றைய தினம் இடம்பெற இருக்கின்றது. இத்திருப்பணியை திரு. வே.துரைராசா தலைவராகக் கொண்ட சைவமகா சபையினர் ஏற்று கும்பாபிஷேகத்தை செய்கின்றார்கள். இவ்வாலய கட்டுமானப் பணியினை செய்த ச.மோகனதாசன் குழுவினருக்கும். இக் கிராமத்தில் வாழுகின்ற அடியயார்களுக்கும். சைவ மகா சபையினருக்கும் இக் கும்பாபிஷேக பலன் கிட்டி பெருஞ்சாந்திபெற இறைவன் இறைவியை பிரார்த் தித்து எல்லோரும் பதினாறு செல்வமும் பெற்று அவர்தம் வாழ்வு சிறப்புறவேண்டும் என ஆசிகூறி அமைகின்றேன்.

**பிரதிஷ்டா கலாநிதி, சிவாகம கிரியா கலாபமணி**
**ஓய்வுநிலை கட்டடத்தொழில் போதனாசிரியர்**
**அகில இலங்கை சமாதான நீதவான், சிவஸ்ரீ நவரத்தின பிரபுதேவக் குருக்கள்**
**யாழ்/ கொழும்புத்துறை கிழக்கு முத்துமாரி**
**அம்பாள் ஆலய ஆதீன குரு, உரும்பிராய்.**

### இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



ஊர்காவற்றுறை நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகத் தினை முன்னிட்டு வெளியீடு செய்யப்படும் பத்திரிகைச் சிறப்பு மலரில் எனது வாழ்த்துச் செய்தியினைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.
1951 ஆம் ஆண்டு பங்குனி மாதம் புதைபொருளாய்த் தோன்றிய ஆலயத்திற்கு இன்று 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேக நிகழ்விற்கு அம்பாள் அருள்பாலித்துள்ளார். இந்த அம்பாளின் அருளினால் இவ்வாலயத்தின் புனருத்தாபனத்திற்கு எமது அமைச்சும் பங்களிப்புச் செய்துள்ளமையானது மகிழ்ச்சியான விடயமாகும்.
வடமாகாணத்தின் சமயம். கலை. கலாசாரம். பண்பாட்டு பெருமைகள் பிரவாகம் ஊற்றெடுக்கும் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் மகா குப்பாபிஷேக நிகழ் விற்கு அம்பாளின் அருள் வேண்டி எனது வாழ்த்துச் செய்தியினை நிறைவு செய்கின்றேன்.

**அ.உமாமகேஸ்வரன்,**
**பணிப்பாளர்.**

### தலைவரின் வாழ்த்துச்செய்தி



நாரந்தனை வடக்கு. பண்டாரபுலம் என்னும் கடற்கரையை அண்டியதாக தான்தோன்றியாக வீற்றிருந்து எம்மக்கள் அனைவருக்கும் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் குல தெய்வமாகிய தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் ஐந்தாவது மகா கும்பாபிஷேகம் சிறப்புற அமைவதற்கு எல்லாம் வல்ல தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் அருட்கடாட்சத்தை வேண்டுகின்றேன்.

**வே.துரைராசா**
**சைவமகாசபை,நாரந்தனை**

### பிரதேச சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் யாரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழி நீ சொல்வாய் தெய்வமே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே

ஊர்காவல் தெய்வமான தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் கும்பாவிஷேகம் சிறப்புற அமைய அம்பாள் அடிபணிந்து வணங்குகின்றேன். ஆலயங்களில் பல்லாண்டுகளிற்குப் பின் எடுக்கப்படும் பெருவிழாவாகிய கும்பாபிஷேகமானது அம்பாளுக்கு நாம் ஆற்றும் கைங்கரியங்களிலெல்லாம் அதியுயர் கைங்கரியமாகும். சக்தியின்றேல் சிவமில்லை. தாயன்புக்கிணையேது. எல்லாப்பிழைகளையும் பொறுத்துக் கருணை பாலிக்கும் அன்னையின் திருவடிகளை இறுகப்பற்றிப் பிடிக்கும் இப்பெருவிழாவானது சிறப்புற அமைய எல்லாம் வல்ல பராசக்தியைப் பணிந்து வாழ்த்திப்போற்றுகின்றேன்.

**ம.அமிர்தகுலசிங்கம் செயலாளர்,**
**ஊர்காவற்றுறை பிரதேச சபை.**

### ஆசிச்செய்தி



ஈழத்திரு நாட்டின் இலங்குகின்ற யாழ்ப்பாணத்தை சூழ்ந்துள்ள சிறப்புப்பொருந்திய தீவகங்களில் ஒன்றான ஊர்காவற்றுறையில் வயலும் வயல்சார்ந்த நிலமுமான மருதநிலமும் கடலும் கடல்சூழ்ந்த நிலமுமான நெய்தல் நிலமும் பொருந்திய நாரந்தனை எனும் எழில் மிகு கிராமத்தில் 1951 ஆம் ஆண்டு புதைபொருளாகக் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக அவ்விடத்தில் தோற்றுவிக்கப்பட்ட நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கு இன்று புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பஷ பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகப் பெரு விழா நடைபெறுவது அம்பாளின் திருவருளேயாகும். இந்தப் பெருவிழாவினால் இப்பகுதி மக்களெல்லாம் இறைஇன்பத்தில் மூழ்கித் திளைப்பர் என்றால் அது மிகை யில்லை. இந்தவிழா சிறப்புறவும் மக்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு பேரின்பப்பெருவாழ்வு பெறவும் அம்பிகையின் அடிக்கமலங்களை இறைஞ்சி ஆசி கூறுகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்பஅன்பு"

**ஸ்ரீசோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமகா சன்னிதானம்,நல்லை ஆதீனம்.**

### ஆசிச்செய்தி



நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் 2017 ஆம் ஆண்டு கும்பாபி ஷேகம் நடைபெறவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தெய்வீகமாக கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா சிறப்புற நடை பெற்று அடியார்கள் அனைவருக்கும் அன்னையின் அருட் கடாட்சம் பெற்று சந்தோசமாக வாழ்கவென மனமார வாழ்த்துகின்றோம்.

**சிவஸ்ரீ சிறிதரக் குருக்கள்**
**அம்பிகையின் தொண்டன்.**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபஷ பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகப் பெரு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.
1951 ஆம் ஆண்டு புதைபொருளாக தோன்றிய அம்பாளுக்கு ஆலயம் அமைத்து வழிபாடுகள் செய்து வந்தமையும். இதன் பின்னர் மூன்று கும்பாபிஷேகங்கள் நிறைவடைந்திருப்பதோடு. வில்லு மண் டபம். வசந்தமண்டபம். மணிக்கோபுரம் என்பன அமைக்கப்பெற்று பெரும் கோயிலாக திகழும் இவ் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற அம்பாளின் திருவருளும் குருவருளும் நன்கு கிடைத்திருக் கும் இவ்வேளை 27.08.2017 அன்று பத்திரிகை மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதோடு. இவ் அரிய முயற்சிக்கு முழு முனைப்போடு செயற்பட்ட தான்தோன்றி மனோன்மணி அம்பாள் சைவ மகா சபையின ருக்கு என் பாராட்டுதல்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.**

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

ஈழமணித் திருநாட்டின் யாழ்குடாவின் தீவகம் வடக்கே கமமும் கலையும் கல்வியும் சிறப்புற்று நல் நிலமாக விளங்கும் நாரந்தனை பண்டாரபுலம் கிராமந் தன்னில் தானாக தோன்றி அருள் மழை பொழியும் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இறைவனை புறக்கண்களால் கண்டு வழிபடுவதற்கென எழுந்தருளச் செய்யும் புனிதமும் பவித்திரமும் நிறைந்த ஐந்தாவது மஹா கும்பாபி ஷேக பெருவிழா சிறப்பாக நடைபெற்று இப்பகுதி வாழ் மக்களுக்கு சிரிய பக்தி மயமான அருள்வாழ்வு கிடைக்கவும் இவ் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக இடம்பெறவும் என் வாழ்த்துக்களைத் தெரி வித்துக்கொள்கின்றேன்.

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்**
**பிரதேச செயலாளர், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.**

### வாழ்த்துச் செய்தி



ஈழமணித் திருநாட்டின் வடபால் திகழும் யாழ்நகரத்தின் மேற்குப் புறத்தில் மருதமும் நெய்தலும் உறவாடும் நாரந்தனைப்பகுதில் வீற்றிருந்து உலகெங்கும் அருள்பாலிக்கும் நாரந்தனை வடக்கு தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய புனராவர்த்தன நவகுண்ட மகாகும்பாபிஷேகம் சீரும் சிறப் புமாக நிகழ்த்தேற எல்லாம் வல்ல மனோன் மணித் தாயின் பாதார விந்தங்களை வணங்கி வாழ்த் துகின்றோம்.

**ச.மோகனதாசன்**
**தறணன் சிற்பாலயம், அராலி மத்தி, வட்டுக்கோட்டை.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# பொருத்தமான நேரத்தில் வந்த நினைவுபடுத்தல்

வடக்கிலும் தெற்கிலும் மாறிமாறிநிகழ்ந்துவரும்அமைச்சர்கள் பதவி துறப்புகள், பதவி விலக்கல்கள் என்பவற்றுக்குநடுவே இலங்கைஎன்கிறபிளவுபடாதநாடு முன்னேறிச் சென்றிருக்க வேண்டிய பாதையில் அது தடுமாறிக் கொண்டிருக்கிறது. முதலில் மந்தமாகி இப்போது கிட்டத்தட்ட படுத்த படுக்கையாகிவிட்டது. பன்னாட்டு மன்னிப்புச் சபை இந்த விடயத்தைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இந்த வார ஆரம்பத்தில் மன்னிப்புச்சபை விடுத்த அறிக்கை, கொழும்பு செய்யவேண்டிய விடயங்களையும் அது தொடர்பில்பன்னாட்டுச்சமூகத்திற்கு உள்ளபொறுப்பையும்தெளிவுபடுத்துகின்றது.

கொழும்பு செய்ய வேண்டிய விடயங்கள் என்ற பட்டியல் சொல்லும் விடயங்கள் வருமாறு:

சரணடைந்தவர்கள்மற்றும்தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை வெளியிடுவதாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவழங்கிய வாக்குறுதியை அவர்நிறைவேற்றவேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும். அதற்குப் பதிலாகக் கொண்டுவரப்படும் சட்டம் அனைத்துலகில் இருக்கும்சட்டங்களைப் போன்றதாகவும், நவீனஉலகின் நடை முறைகளுக்கு ஒத்துவரக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

தனிநபர்கள், குழுக்கள், பத்திரிகையாளர்கள், பொதுநலன் செயற்பாட்டாளர்கள்மீதுநடத்தப்பட்ட தாக்குதல்கள்தொடர்பான அனைத்து முறைப்பாடுகளையும்விசாரிக்க வேண்டும். அதேபோன்று மதச்சிறுபான்மையினர்மீதும்வழிபாட்டிடங்கள் மீதும், நடத்தப்பட்ட தாக்குதல்களும் விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள்பொறுப்புக்கூறவைக்கப்பட வேண்டும். இனி வரும் காலங்களில் அதுபோன்ற தாக்குதல்கள் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

பன்னாட்டு அரங்கில் குற்றங்களாக ஏற்கப்பட்டவற்றை (பலவந்தமாகக் காணாமல்ஆக்குதல், சித்திரவதை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள்) இலங்கையின் சட்டங்களுக்குக் கீழும் குற்றங்களாக்குதல்.

செயற்றிறனுடன்சேவையாற்றக்கூடிய உண்மை, நீதி மற்றும் மீளநடவாமை என்பவற்றுக்கான பொறிமுறையை உருவாக்கும் தெளிவான வழிவரைபடம் ஒன்றை உருவாக்குவதுடன் அது மக்களைச் சென்றடைவதற்கான நிகழ்ச்சி நிரலையும் பன்னாட்டுப்பிரதிநிதிகளையும்உள்ளடக்கியகண்காணிப்புக் குழு ஒன்றையும் உருவாக்கவேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையில்இலங்கைதொடர்பில்நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை முழுமையான நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை ஒன்றை வெளியிடவேண்டும்.

இவ்வாறுமன்னிப்புச்சபைகேட்டுள்ளது. அத்தோடுவாக்குறுதி அளித்தபடிகொழும்புஇவற்றையெல்லாம்நிறைவேற்றுகிறதா என்பதைஉறுதிப்படுத்துமாறுகொழும்பின்அதிகாரிகளையும் ஆட்சியாளர்களையும் வலியுறுத்துங்கள் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் கேட்டிருக்கிறது மன்னிப்புச் சபை.

மன்னிப்புச்சபையில் இலங்கை தொடர்பான விவகாரங்கள் நீர்த்துப் போய்விடக்கூடிய அபாயம் அதிகரித்துவரும் நிலையில், மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கை முக்கியத்துவம் பெறுகிறது. மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் கொண்ட கரிசனையைக் கைவிடக்கூடிய எந்தவொரு நிலைமையும் இலங்கையில் இல்லை என்பதை அந்த அறிக்கை தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

ஜெனீவாவில் வாக்குறுதிகளைவழங்கி கால அவகாசத்தைப் பெற்றுவிட்டுக்களத்தில்எதையுமே செய்யாது ஏமாற்றும்வழமையான சிங்களப் பேரினவாத அரசின் போக்கையே இந்த அரசும் கைக்கொள்கிறது என்பதை அந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது. அதனால் கொழும்பு மீதான அழுத்தமும் அவதானமும் கிஞ்சித்தும் குறையக்கூடிய சாத்தியம் இல்லை என்பதையும் மன்னிப்புச் சபை தெளிவாக இடித்துரைக்கின்றது.

மன்னிப்புச்சபையும்பன்னாட்டுச்சமூகமும்மன்னிப்புச்சபையின் இந்தஅறிக்கையின்மீது அதிககவனம்செலுத்தி கொழும்பு மீதான அழுத்தத்தை குறைக்காமல் இருப்பது அவசியம். ட்ரம்பின்ஆட்சிமாற்றம், தொடர்ந்தும்கொழும்பின்விடயத்தை தூக்கிப்பிடிப்பதில்நாடுகள்காட்டும்மெத்தனம்என்பவற்றுக்கு இடையில், கொழும்பின் மீதான அழுத்தம் கைவிடப் படக்கூடாது என்பதே தமிழர்களின் அவாவும் வேண்டுதலும்.





# 62 லட்சம் ஆதரவு வாக்குகளும் கை நழுவுமா?

சிங்கள மூலம்
(லங்காதீப
குசல்பெரேரா)
தமிழில் வி.எஸ்.ரீ

கூட்டாட்சி ஒன்றுக்கான தேவையை விட, மகிந்தவின் ஆட்சியை ஒழிப்பதே தமக்கு முக்கியம் எனச் செயற்பட்ட கொழும்பின் மத்திய தர குடிசார் சமூகத்தினர், இந்த மாதம் 15 ஆம் திகதி இன்றைய அரசுக்கு எதிரான எதிர்ப்புநடவடிக்கையொன்றை கொழும்பில் முன்னெடுத்தனர். அதில் ஆயிரம்பேர் வரையிலானவர்களே கலந்து கொண்டனர். தேர்தலின் போதுவழங்கியவாக்குறுதிகளை நிறைவேற்ற அரசை வலியுறுத்துவதே அவர்களது நடவடிக்கையின்நோக்கம். கூட்டு அரசைப் பதவியில்அமர்த்தவாக்களித்த 62 லட்சம் வாக்காளர்களுக்கு அந்தஉரிமைஉண்டென்பதே அவர்களது வாதமாக அமைந்திருந்தது. மகிந்தவின்எதேச்சாதிகார, ஊழல் மலிந்த நிர்வாகத்தை மாற்றியமைக்க பொது வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு வாக்களித்த 62 லட்சம் மக்களும் தம்முடன் இணைந்துகூட்டுஅரசைவலியுறுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டதே அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

### வெற்றியளிக்காத அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஒரு வகையில் இது அரசின் பிற்புலஆதரவுடன்சிலவேளை, ஐ.தே.கட்சியின் தேவையின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கலாம். ஆயினும் மகிந்தவுக்கு எதிராக வாக்களித்த 62 லட்சம் பேருடன் ஒப்பிடும்போதுஆயிரம்பேர்வரையானவர்கள் மட்டுமே பங்கேற்றஅந்தஆர்ப்பாட்டம்வெற்றியளிக்காதொருமுயற்சிஎன்பது உண்மையே. அந்தவகையில் குறித்த அந்த 62 லட்சம் வாக்காளர்களதுதற்போதைய நிலைப்பாடு என்ன என்பது முக்கியத்துவம்பெறுகிறது.

பொதுவேட்பாளர் மைத்திரிபாலவுக்கு2015அரசதலைவர் தேர்தலில் கிட்டிய 62 லட்சம் மக்களின் ஆதரவு. இரண்டு வருடங்கள் 8 மாதங்கள்கழிந்துள்ள இன்றைய நிலையில் அதே மட்டத்தில் உள்ளதா? எனத்தெரிந்து கொள்ளவேண்டியுள்ளது. உண்மையான அரசியல் நிலை குறித்த ஆய்வின் அடிப்படையில் நோக்கினால், தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்களில் மைத்திரிபாலவுக்கு வாக்களித்தோரில் பெருமளவானோர் மைத்திரிபால மீதான ஈர்ப்பினாலோ அல்லது அவர் மீதான நம்பிக்கை காரணமாகவோ அவருக்கு வாக்களிக்கவில்லை.

உண்மையில் மகிந்த மீதான வெறுப்பு, அவநம்பிக்கை மற்றும் பாரதூரமான விரோத உணர்வு காரணமாகவே மகிந்தவைப்புறம்தள்ளிமைத்திரிபாலவுக்குவாக்களித்தனர். வடக்குக்கிழக்குப்பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்களால் மைத்திரிபாலவுக்குக்கிட்டிய19 லட்சத்துக்கும்அதிகமானவாக்குகள், கடும் மகிந்த எதிர்ப்பு வாக்குகளேயல்லாமல், மைத்திரிபால மீதான நல்லெண்ணம்காரணமாகவழங்கப்பட்டவையல்ல. அதே போன்று மகிந்தவின் ஆட்சியில் பொதுபல சேன போன்ற கடுங்கோட்பாட்டு சிங்கள பெளத்த தரப்புக்களது இம்சைகளுக்குஆளான சிங்களப்பகுதி களில் வாழ்ந்த முஸ்லிம் வாக்காளர்களும் மகிந்தவின் மீதான தமது வெறுப்பை மைத்திரிபாலவுக்குவாக்களித்ததன் மூலம் வெளிப்படுத்திக் கொண்டனர்.

முஸ்லிம் மக்கள் மகிந்தவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்ட முஸ்லிம் அரசியல்வாதிகளும் பொது வேட்பாளரான மைத்திரிபாலவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தனர். அந்த வகையில் கடந்த அரசதலைவர் தேர்தலில் மகிந்தவுக்கு விரோதமான சிறுபான்மை மக்களது 22 லட்சம் வரையிலான வாக்குகளை பொது வேட்பாளர் மைத்திரிபால ஈட்டிக் கொண்டார்.

### சிறுபான்மை இனத்தவர்களது எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை

இந்த விதம் 22 லட்சம் சிறுபான்மை இனத்தவர்களது வாக்குகளைப் பெற்று அரசமைத்த கூட்டு அரசு, தனது கடந்த 32 மாதங்கள் கால நிர்வாகத்தில்சிறுபான்மைஇனத்தவர்களுக்கானதேவைகளில் எதனையாவது நிறைவேற்றியுள்ளதா? அமைச்சர்களை இணைத்து ஒரு அமைச்சரின் கீழ் செயற்பட வைக்க பொருத்தமில்லாத இணைப்பையும் இந்த அரசு முன்யோசனையின்றி மேற்கொண்டமைக்குப் பொருத்தமான உதாரணம், நீதி அமைச்சையும் பௌத்தசாசனஅமைச்சையும் இணைத்து விஜேதாச ராஜபக்சவிடம் வழங்கியமையாகும். மகிந்தவின் ஆட்சியில் கோதபாய ராஜபக்ச தரப்பினர் முஸ்லிம் இனத்தவர்களுக்கு எதிராக பொதுபலசேன போன்ற மதவாத கடுங்கோட்பாட்டுத் தரப்பினரை உசுப்பேத்திச் செயற்பட வைத்தமைக்கு ஒப்பானதே, இந்தக்கூட்டு ஆட்சித் தரப்பினரது போக்கும் எனக் கொண்டால் அது தவறல்ல. தற்போது விஜேதாச ராஜபக்ச தமது அமைச்சுப்பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டமை சிங்கள பௌத்த கடுங்கோட்பாட்டு நிலைப்பாட்டைப் பேணுவதான குற்றச்சாட்டின் பேரிலல்ல. மகிந்தத்தரப்பினரது முன்னையகுற்றங்களுக்கான விசாரணைகளை முன்னெடுக்க இயலாது தாமதப்படுத்துவதான குற்றச்சாட்டின் பேரிலேயே அவரது பதவி பறிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் பௌத்த மத உயர்

பீடங்கள் விஜேதாச ராஜபக்சவை பௌத்த மதக்காவலராகச் சித்தரித்து அவருக்கு வக்காலத்து வாங்கி வருகின்றன.

விஜேதாசராஜபக்சகாரணமாகத்தான் இந்த அரசு சிங்கள பௌத்த நிலைப்பாட்டைத் தீவிரமாகக் கடைக்கொள்கிறதுஎன்பதுசரியல்ல. மங்களசமரவீரவினது லிபரல் மதவாத நிலைப்பாட்டை நோக்கும் போது இந்த அரசியல்அங்கம்வகிக்கும்பெரும்பாலோர் சிங்கள பௌத்த நிலைப்பாட்டைப் பேணுவோரே. அரச தலைவர் மைத்திரிபாலவும் ஒரு நல்ல சிங்கள பௌத்தரே. தமது அந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்த அவர் நாட்டின் படைவீரர்களுக்குக்கௌரவம்வெளிப்படுத்திக்காட்டிவருகிறார்.

போர்க்குற்றச்சாட்டுக்களுக்கானவிசாரணையை அவர் மறுதலித்து வருவதும் அந்த இனவாத நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே.

அதேபோன்று தலைமை அமைச்சரும் கூட ஐ.நா.சபையால் 2015 செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட, அரசும் அரசரணை வழங்கிய போர்க்குற்ற விசாரணை குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப் பின்னடிப்பதும் கூட சிங்கள பௌத்த வாக்காளர்களது ஆதரவைஇழக்காதிருக்கும்நோக்கத்திலாகும். அது தற்போது புதிய வெளியுறவு அமைச்சர் மாரம்பனவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைமை அமைச்சரது கலாசார மேம்பாட்டுத் திட்டத்தில் சிறுபான்மை இனங்கள் புறக்கணிப்பு**

தலைமை அமைச்சர், கடந்த வாரம் கொழும்பு கலாசார கேந்திர நிதியத்தினூடாக150பௌத்தவிகாரைகளைப் புனரமைப்புச் செய்யத் தாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ள விடயத்தைத் தெரிவித்திருப்பதும், இந்த அரசின் சிங்கள பௌத்தவாத நிலைப்பாட்டை உறுதிப்படுத்துமொன்று. தலைமைஅமைச்சரதுகலாசாரமேம்பாட்டுத்திட்டத்தில் இந்துக்கோயில்களோ,இஸ்லாமியபள்ளிவாசல்களோ உள்ளடங்காமை குறிப்பிடத்தக்கது.

அதே விதத்தில் இந்த அரசு நாட்டின் வடபகுதியில் மற்றும் வன்னிப்பிரதேசத்தில் தமிழ்ப் பொதுமக்களிடம் தான் கோரிப்பெற்றவாக்குகளுக்காக அந்த மக்களுக்கு எந்தவித நன்மையையும் செய்திடவில்லை. தமிழ் மக்களது முக்கிய பிரச்சினை களுக்கு, குறிப்பாக காணாமற்போனோர்தொடர்பாக, பலாத்காரமாக அவர்களது நிலங்கள் படையினரால்அபகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக, யாழ். குடாநாட்டில் சட்டமும் ஒழுங்கும்மீறப்பட்டுவருவதுதொடர்பாக இந்த அரசு எவ்வித தீர்வையும்இதுவரைவழங்கியதில்லை.

இந்தஅரசு2015ஆம்ஆண்டு செப்ரெம்பரில் ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் ஒப்புக்கொண்டபடி புதிய சட்டங்கள் ஒன்றிரண்டை நிறைவேற்றினாலும், அவற்றை நடைமுறைப்படுத்தாததோடு மீதியானவற்றை நிறை வேற்றாதுபிற்போட்டதும். அவர்களதுதீவிர சிங்களபௌத்த நிலைப்பாடு காரணமாகவே ஆகும். தமிழ் மக்களது கோரிக்கைகளை இந்த விதம் கணக்கில் எடுக்காததன் மூலம கூட்டு அரசு மகிந்தவுக்கு எதிராக 2015 ஜனவரியில்மைத்திரிபாலவுக்குவாக்களித்து அரசதலைவராக்கியதமிழ்முஸ்லிம் வாக்காளர்களது 22 லட்சம் வாக்குகளும்ஜனநாயகத்தைவிரும்பி வாக்களித்த 62 லட்சம் வாக்குகளுக்குள் எதிர்காலத்தில் அடங்கப்போவதில்லை என்பது நிச்சயம்.

**அரசு மீது இன்னமும் நம்பிக்கை வைக்கும் எதிர்க்கட்சித் தலைவர்**

இருந்தபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவரும்,எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன், ஐ.நா மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்படி இலங்கைஅரசைதூண்டுமாறுஅமெரிக்க அரசைக் கோரியுள்ளதுடன், கூட்டு அரசு, தமிழ் மக்களால் ஏற்கத்தக்க விதத்திலான அதிகாரப் பகிர்வை புதிய அரசமைப்பொன்றின் மூலம் வழங்கும்என இன்னமும்நம்புகிறார். ஆயினும்தெற்கு அரசியல்வாதிகளது இந்தவழக்கமானஏமாற்றுப்போக்கை இலங்கையர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் நன்கறிந்துள்ளனர். கடந்த அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகள் யாவும் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்ட உழல் மோசடிகளைச்சுட்டிக்காட்டுவதாகவே அமைந்திருந்தன. அவை தென்பகுதியில் மகிந்த தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டஅழிப்புநடவடிக்கைகளைவிபரிப்பதாக அமைந்திருந்தன. அவை வடக்கில் மேற்கொள்ளப்பட்ட அழிப்புக்கள் குறித்து எதையும் குறிப்பிடவில்லை.

> **இந்தக் கூட்டு அரசின் 32 மாதங்கள் கால நிர்வாகத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள், மகிந்த அரசின் 9 ஆண்டுகள் கால நிர்வாகத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை விட அதிகமானவையாகும். கூட்டு அரசின் நிர்வாகத்தில் இடம்பெற்ற பெரியவையும் சிறியவையுமான ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து உரிய வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும். கூட்டு அரசால் நிறுவப்பட்ட சுதந்திர ஆணைக்குழுக்கள் எதுவும் எத்தகைய பயனுள்ள காரியங்களையும் செய்து முடிக்கவில்லை.**

கள்எதனையும்நிறைவேற்றஇயலாத கையறுநிலை கூட்டு அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கு அடிப்படைக் காரணங்களும்உள்ளன. முன்னைய மகிந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற ஊழல்மோசடிகள்குறித்துவிசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமாயினும், மைத்திரி - ரணில் அரசு எந்தவித ஊழல் மோசடிகளற்ற அரசாக இருப்பின் மாத்திரமே அது சாத்தியப்படும். அந்த வகையில் இன்றைய கூட்டு அரசுக்கு அதற்கான உரிமை எதுவும் கிடையாது.

**மகிந்த அரசின் ஊழல் மோசடிகளைவிட கூட்டு அரசின்ஊழல்மோசடிகள்அதிகம்**

உண்மையில் இந்தக் கூட்டு அரசின் 32மாதங்கள்காலநிர்வாகத்தில்இடம்பெற்ற ஊழல் மோசடிகள், மகிந்த அரசின் 9 ஆண்டுகள் கால நிர்வாகத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை விட அதிகமானவையாகும். கூட்டுஅரசின் நிர்வாகத்தில் இடம்பெற்ற பெரியவையும் சிறியவையுமான ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து உரிய வகையில் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டாக வேண்டும். கூட்டு அரசால் நிறுவப்பட்ட சுதந்திர ஆணைக்குழுக்கள் எதுவும் எத்தகைய பயனுள்ள காரியங்களையும் செய்து முடிக்க வில்லை. இதனால் சட்டத்தையும் ஒழுங்கையும்உரியமுறையில்முன்னெடுக்க இயலாது அவை தடைப்பட்ட, பிற்போடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் மேலாக கூட்டு அரசின் புதிய அபிவிருத்தித் திட்டங்களெதுவும் உரிய வகையில் ஆரம்பிக்கப்பட்டதாகவும் கூற இயலாதுள்ளது. இதனால் மைத்திரிபாலவுக்குக் கிட்டிய 22 லட்சம் தமிழ், முஸ்லிம் வாக்குகளுக்கு மேலதிகமாக தென்பகுதிச்சிங்களமக்களது40 லட்சம்வாக்குகளும்மைத்திரிபாலஅரசுக்குக்கிட்டாது போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதில்பரிதாபம்என்னவென்றால் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த அரச தலைவர் தேர்தலில் கிட்டிய 40 லட்சம்சிங்களவாக்குகளும்மீண்டும் மகிந்த ராஜபக்சவைத் தேர்ந்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படவிருப்பதாகும். ஜே.வி.பி. தரப்பினருக்கோ மகிந்த விரோதப் போக்கு அரசியலைத் தவிர வேறு மாற்று வழி எதுவுமில்ல. அதே சமயம் தமிழ் மக்களுக்கு மீண்டும் மகிந்தவுக்கு ... வாக்களிக்க இயலாதாயினும், அவர்களது தலைவர்கள் எதுவுமே செய்ய இயலாது, இன்றைய கூட்டு அரசின் பின்னாலேயே பயணிக்க நேர்ந்திருப்பதால், இந்த அரசுக்கு எதிரான தெரிவேதும் தமிழ்மக்களுக்குகிட்டப்போவதில்லை என்பதே யதார்த்தம்.



மகிந்தவுக்கு எதிராக அரச தலைவர் தேர்தல் சமயத்தில் ஜே.வி.பி.யும் இணைந்து மைத்திரிபால தலைமையில் அரசொன்றை உருவாக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்ட சகல வாக்குறுதிகளும், தென்பகுதியில் 9 ஆண்டுகளாகஇடம்பெற்றமகிந்ததரப்பினரது ஊழல்களை முன்னிறுத்தி அவற்றுக்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவழங்கப்பட்ட வாக்குறுதிகளாகும். 32மாதங்களின் பின்னர்கூட்டுஅரசுதனதுமுன்னைய வாக்குறுதிகளைநிறைவேற்றவேண்டுமெனக்கோரிகொழும்பில்ஆர்ப்பாட்டம்மேற்கொண்டதரப்பினர்கள், இந்த அரசை ஆட்சிபீடம் அமர வைக்க ஆதரவளித்த தரப்பினர்களே. ஆனால் இன்று தமது முன்னைய வாக்குறுதி




## இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

யாழ்.குடாநாட்டில்பலபாகங்களுக்கும் இலங்கை போக்குவரத்துச் சபையின்பேருந்துகளும்,தனியார் பேருந்துகளும் சேவைகளை மேற்கொள்கின்றன. இதில்இ.போ.ச. பஸ்சேவையில்பிரயாணிகளுக்கு எவ்விதபாதிப்பும்இல்லை. ஆனால் தனியார்போக்குவரத்துப்பேருந்துகளும்பயன்படுத்தும்(மினிவான்) பிரயாணிகள்தான் பலவிதமான நெருக்கடிகளையும்பாதிப்புக்களையும் எதிர்நோக்குகின்றார்கள். இதில் ஒன்றுதான் மிகுதிப் பணத்தைத் தனியார் பேருந்துகளின் நடத்துநர்கள் வழங்க மறுப்பது. அந்தவகையில்தனியார்பேருந்து ஒன்றில்கடந்த24ஆம்திகதிகொடிகாமத்திலிருந்து சாவகச்சேரிக்கு பிரயாணம் செய்தேன்.

அவ்வேளை சில்லறையாக ஏழு ரூபாவும்50ரூபாதாளொன்றையும் நடத்துநரிடம்கொடுத்தேன். நடத்துநர்நான்சில்லறையாகக்கொடுத்த ஏழு ரூபாவையும் திருப்பித்தந்து மற்றைய 50 ரூபாவில் கட்டணத் தொகைபோக மீதிப்பணத்தை வழங்காதிருந்தார்.

மினிவான்சாவகச்சேரிபஸ்நிலையம்வந்ததும், மிகுதிப்பணத்தைக் கேட்டதும் முப்பது ரூபா பணத்தைத் தந்தார். கட்டணம் 17 ரூபா தானே என நடத்துநரிடம் கேட்டபோது, சாவகச்சேரியிலிருந்துகொடிகாமம் வரை 20 ரூபாதான் கட்டணம் என்று பிடிவாதமாகக் கூறினார்.

இத்தகைய முறைகேடு அடிக்கடி தனியார் பேருந்துகளில் நடக்கின்றன. இ.போ.ச. பேருந்தில் 17 ரூபா தான் அறவிடுகின்றனர். அத்துடன் மிகுப் பணத்தைக் கட்டாயம் தருவார்கள். ஆனால் தனியார் பேருந்துக்கு ஏன் இந்தப் பேராசை? அது மட்டுமல்லாமல் மீதிச் சில்லறைப் பணத்தைத் தருமாறு வற்புறுத்திக் கேட்டால், அடாவடித்தனமான, பண்பாடற்ற விதத்தில் இவர்கள் கதைக்கின்றனர்.

சகலபயணிகளும் இவர்களது இத்தகைய பண்பாடற்ற செயற்பாடுகளைப் பொறுத்துக் கொள்வர் எனக் கருதமுடியாது. பிரயாணிகளை பொறுமை இழக்கும் நிலைக்கு ஆளாக்காமல் பயணிகளுடன் பண் ... போடுநடந்துகொள்ளு... தப்பட்ட அதிகாரத் தரப்பினர் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள், சாரதிகள்மற்றும்நடத்துநர்களுக்குஅறிவுறுத்துவார்களா?

ச.வீரசிங்கம், சாவகச்சேரி.

# சுஜீவா வைத்திய

## (சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத

## ஆண்டு விழாவும், பரிசளிப்பு வி

109, (நாச்சிமார் கோவிலுக்கு அருகாமை) கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். சேவை
நண்பகல் 12.00 வரை. மாலை 3.00 முதல் மாலை 5.00 வரை வெள்ளிக்கிழமை வ
மக்கள் வருவதற்கு முன் கட்டாயமாக தொலைபேசியில் தொடர்பு கொ
தொலைபேசி இல : **077 559 4147, 021 568 533**

Dr. **ஜெ.ஜெயலன் (DAM)** மருத்துவ பதிவாளர்:
**அரச பதிவு இல.13461**
**7ஆவது பரம்பரை**

Dr. **ச.ஜெயலன் (DAM) அரச பதிவு இல.1212**
**25ஆவது பரம்பரை (முன்னாள் விரிவுரையா**
**லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூ**

அநுராதபுரம், கனத்தாவ, ஈரற்பெரியகுளம், நேரியகுளம், தருமபுரம், வவுனிக்குளம், காரைநகர் முதலிய இடங்களில் முன்னர் இயங்கி வந்ததும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது 23 வைத்திய தலைமுறைகளுக்குரிய பரம்பரை ஓலைச் சுவடிகளில் உள்ள வைத்திய நுணுக்கங்கள் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் ஆண்டாண்டு காலமாக கற்பித்தவைகளில் சிறந்தனவும், எமக்கு கிடைத்த பல வைத்திய மேதைகளின் (இராவணன், நல்லூர் அரசர்கள் செகராஜசேகரன், பரராஜசேகரன் உட்பட இலங்கைக் கேயுரிய உள்நாட்டு வைத்திய முறைகள் அதிசிறந்த தென்னிந்திய பதினெண் சித்தர்களதும் வட இந்திய ஆயுள்வேத மருத்துவ நூல்கள் மூலமாகவும் எம்மால் தயாரிக்கப் படுகின்ற எமது பரம்பரைக்கேயுரிய சுதெச மருந்துகள் மற்றும் இந்திய இலங்கை சித்த ஆயுள்வேத மருந்துகள் (நன்கு செயற்படக் கூடியதென பெயர்பெற்ற தெரிந்தெடுக்கப் பட்டவை) மூலமாக மாற்றமுடியாதென கருதி கை விடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் வாதம் / சளி/ மூலம் / வயிற்றுப் புண் / சரும நோய் / உடற்பருமன் / சிறுநீரகம் / தலைமுடி உதிர்தல் / நரம்பு வியாதிகள் உட்பட பல) பெயர் பெற்றதுடன் தற்போது விசேடமாக குழந்தையின்மைக்குரிய சிகிச்சையில் நூற்றுக் கணக்கான குழந்தைகளை இலங்கையில் பல்வேறு மாவட்டங்களிலும் பல வெளிநாடுகளிலும் உருவாக்கி பிரபலமடைந்துள்ளது.

இங்கு சிகச்சை பெற்றதன் பயனாக உருவாகிய குழந்தைகளில் தெரிவு செய்யப்பட்ட 10 குழந்தைகளுக்கு 2011ஆம் ஆண்டு ஆயுள்வேத அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சுதேச அமைச்சு அதிகாரிகள் மற்றும் பிரமுகர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டது தெரிந்ததே. அதன் பின் மீண்டும் நீண்டகால இடைவெளியில் நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா நாளில் 20.08.2017 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஆண்டுவிழாவும் பரிசளிப்பும் நடாத்தப்பட்டது.

2011 ஆம் ஆண்டின் பின் ஒவ்வொரு வருடமும் பிறந்த குழந்தைகளில் தெரிவுசெய்யப்பட்ட 10 குழந்தைகள் வீதம் 50 குழந்தைகளுக்கும் வெளிநாடு சென்று சிகிச்சை பெற்றும் குழந்தை கிடைக்காது இங்கு சிகிச்சை பெற்றதனால் பிறந்த குழந்தைகளில் தலா ஒரு வருடத்துக்கு ஒரு குழந்தை வீதம் 5 குழந்தைகளுக்கும் விசேட பாரம்பரிய சித்த ஆயுள்வேத முறைகளை ஊக்குவிக்கும் முகமாகவும் வைத்தியரின் அன்னை பிரபல கணித ஆசிரியை அமரர் திருமதி ப. ஜெயசோதி ஞாபகார்த்தமாகவும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக Dr. திருமதி சியாமா துரைரட்ணம் அவர்கள் (ஆனையாளர் சுதேச மருத்துவ தினைக்களம்) கலந்து கொண்டதோடு, விருந்தினர்களாக பலர் கலந்துகொண்டனர். முக்கியமாக இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளை முகாமையாளர் கலந்துகொண்டதோடு சுஜிவா வைத்திசாலையில் பிறந்த குழந்தைகளுக்கு சிறுவர் சேமிப்புக் கணக்கு புத்தகமும் வங்கியால் பரிசுப் பொதிகளும் விங்கப்பட்டன்.

வைத்தியசாலையின் அறிவித்தல் பலகை அறிவிப்பினை மட்டுமே கொண்டு நடத்தப்பட்ட இந் நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர். பரிசுகளை வழங்குவதற்காக கண்டி, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட அனைத்துப் பகுதிகளிலிருந்து வந்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றாம்.

சமயத் தலைவர்கள் ஆசியுடனும் பல பிரமுகர்களின் பிரசன்னத்துடனும் இந் நிகழ்வுகள் இனிதே நடந்தன. இவ்விடையங்கள் மக்கள் மத்தியில் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் குழந்தை கிடைத்த தம்பதி ஒருவரின் அனுசரணையிலும் ஒழுங்குப்படுத்தலிலும் இவ்விளம்பரம் பிரசுரிக்கப் படுகின்றது.

**விழாக்குழுவினர்:**

**திரு. க. தங்கராஜசிங்கம்**
**திரு. இ.ஜெயக்குமார்**

**விழாக்குழு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்:-**
**திரு.கு.ரவிக்குமார்,வடமாகாண இணைப்பாளர், தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை, வணிகம் மற்றும் கைத்தொழில் பற்றிய அமைச்சு.**






**விழாவில் கலந்துகொண்டோர்**

Dr.Mrs.












**இ.விசாகரத்தினக் குருக்கள்**

**திரு.எம்.எல்.எம். லாகிர் அவர்கள்**

Dr. க





**திரும**







**ஜெ.கல்கிஜன் அவர்கள்**

**திரு இ. விஜயசூரியா அவர்கள்**

**திருமதி யோ. மாலதி அ**
**விவாகப்பதிவு வாளர்-உரு**





**கலாநிதி நா.தனேந்திரன் அவர்கள்**

Dr. **திருமதி ச. ஜெயலன் அவர்கள்**

# கல்வியங்காடு பிள்ளையார் ஆலயத்தில் சங்காபிசேகம்



யாழ்ப்பாணம், ஓக.27

வருடாந்த ஆவணி சதுர்த்தியினை முன்னிட்டு வரலாற்றுப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம், கல்வியங்காடு ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் ஆயிரத்தெட்டு சங்காபிசேகம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. ஆயிரத்தெட்டு சங்கினால் விநாயகப் பெருமானுக்கு சிறப்பு அபிசேகம் இடம்பெற்றதுடன் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு லட்சார்ச்சனையும் இடம்பெற்றது.

நுண்கலைமாணி கமலகாந்தன் வர்ஜிகனின் (உதவி விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை பீடம்) இசைச் சங்கமம் நிகழ்வு மாலை ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டுக்கான ஆலய மகோற்சவப் பெருந் திருவிழாக் காலப்பகுதியில் நடைபெற்ற தெய்வீக சொற்பொழிவில் இடம்பெற்ற விடயங்களில் பாடசாலை மாணவர்களுக்கு எழுத்துப் பரீட்சை நடைபெற்றிருந்தது. அப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்குக் கல்விசார் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்கள் ஆலய அறங்காவல் குழுவினரால் வழங்கப்பட்டன.

தொடர்ந்து மாலை 6.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீ மகாசந்திரசேகரப்பெருமான் சிறப்பு மாலை சாத்துப்படி அலங்கார வடிவில் உள்வீதி, வெளிவீதி உலா வந்து அடியவர்களுக்கு அருட்காட்சியளித்தார். (ய-32)

# தம்பசிட்டியில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக.27

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு நடமாடும் சேவை இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை தம்பசிட்டி அ.மி.த.க பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுச் சான்றிதழ்களில் திருத்தங்கள் மேற்கொள்ளல், சான்றிதழ்கள் மும்மொழியிலும் மொழிபெயர்ப்புச் செய்து வழங்கல், சட்டரீதியான திருமணப் பதிவு மேற்கொள்ளல் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான துணை ஆவணங்களைப் பெற்றுத் தருவதோடு ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளல், ஈ.ரி.எவ், ஈ.பி.எவ் தொடர்பான ஆலோசனை வழங்கலும், அதன் மூலம் கடன் பெற்றுக்கொள்ளல் தொடர்பான ஆலோசனை வழங்கல், சட்ட உதவி ஆணைக் குழுவின் ஆலோசனை வழங்கல், வரிப்பணம் மற்றும் வாடகைப் பிரச்சினைத் தீர்வு, அடிப்படை உரிமை, மனித உரிமைகளுக்கான தீர்வு, ஓய்வூதியப் பிரச்சினைகளுக்கான தீர்வு, நீர், மின்சாரம் போன்றவற்றுக்கான தீர்வு, அரச காணிப் பிணக்குகளுக்கான தீர்வு, சமநல சேவைப் பிரச்சனைகளுக்கான தீர்வு ஆகியவற்றை இந்த நடமாடும் சேவையின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் எனப் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார். (ய -21)












Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன் நித்திய சுகம் 333
உடலே கோயில்



# நித்திரைக்குறைவு

## உடல் இயங்கு நிலையில் ஏற்படும் குழப்பம்

மருத்துவர் மாலினி பேரம்பலம்

அடிப்படைத்தேவைகளான உணவு,உடை, உறையுள் என்பவை ஒவ்வொரு மனிதனுக்கும் அதுபோன்றே மனிதர்களுக்கு நல்ல தூக்கமும் அவசியமாகிறது.

**தூக்கத்தின் செயல்**

அனுதினமும் உடல் உள ரீதியில் கடின உழைப்பின் வயப்படும் மனிதனுக்கு தூக்கம் என்ற ஓய்வு நிச்சயப்படுத்தப்பட வேண்டும்.அதனில் இருந்தும் நீங்கியிருத்தல் கூடாது. தூக்கம் என்பது தன்னியல்பாக வரவேண்டிய ஒன்று. நாமாகத் தேடிச் சென்று வரவழைத்திட முடியாது.அதுபோன்று அவை வரும்போதும் மறுக்க முடியாது.

எம்மில் சிலர் தூங்கச் சென்றதும் எந்த இடைவிலகலுமின்றி இயங்கலற்று அயர்ந்துவிடுவர். ஆனாலும் சிலர் தூங்குவதற்கான இயல்பு நிலையை எப்படி உருவாக்கிக் கொண்டாலும் தூக்கமின்றி அவதிப்படுவர். பெரும்பாலும் வயதானவர்களைப் பாதிக்கும் பொதுவான பிரச்சினைகளில் ஒன்றாக இந்த நித்திரைக் குறைவும் முக்கியத்துவம் பெறுகிறது.

**முன்னகர்த்த நித்திரை**

குறிப்பாக,பகல் பொழுதில் தூங்கி விழுவது,நேரகாலத்துடனே தூங்குவது (இரவு 7 தொடக்கம் 8 மணி) மற்றும் அதிகாலைப் பொழுதில் (3 தொடக்கம் 4 மணி) தூக்கம் கலைந்து எழுதல், சிரமப்படுதல் எனப் பல வயதானவர்களிடையே காணப்படும் பிரச்சினையாக இது விளங்குகிறது. வயதாகும்போது எமது உடல் இயக்க ஒழுங்கில் ஏற்படும் குழப்பங்களே இதற்கான காரணங்களாக நோக்கப்படுகின்றன.

இதனை 'முன்னகர்த்த நித்திரை' என்பார்கள். அதாவது தூக்க நேரம் முன்னகர்வு பெறுதலை இது குறிக்கும். உண்மையில் இது தூக்கக் குழப்பமே அன்றித் தூக்கக் குறைபாடு அல்ல.ஆனாலும் தூக்கக் குறைபாடும் இருக்கக்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை.

நல்ல உடல் ஆரோக்கியத்துக்கு ஆழ்ந்த,அமைதியான தூக்கம் மிக அவசியமாகிறது. தூக்கத்துக்கான கால அளவுகள் வயதுக்கு ஏற்ப மாறுபட்டாலும் அவை 8 மணிநேரமாக அல்லது 6 மணி நேரமாக அமைவு பெற்றுள்ளது. இரவில் தூங்கி காலையில் எழும்போது நாம் சுறுசுறுப்பாக இருக்க முடிந்தால் அதுவே தூக்கத்துக்கான சரியான அளவிடையாகக் கொள்ளப்படத்தக்கது.

தூக்கம் குறைந்தால் அல்லது குழப்பமான தூக்கமாக இருந்தால் உடல் சோர்வடையும். மனதை ஒருமுகப்படுத்த முடியாது போகும். சிந்தனைத்திறன் குறைவடையும்.

**ஏனைய காரணிகள்**

மேற்கூறிய முன்னகர்த்த நித்திரையைத் தவிர வேறு பல காரணங்களாலும் வயதானவர்களின் தூக்கம் குறையலாம். இருதய நோய், ஆஸ்த்துமா, மூட்டுவாதம், பக்கவாத நோய், உணவுக்கால்வாய் சம்பந்தப்பட்ட நோய்கள், மனச்சோர்வு போன்ற பல மூப்புக்கால நோய்களும் வயதானவர்களின் நித்திரையைக் குறைக்கும். வயதாகும் போது பல்வேறு நோய்கள் உடலைத்தாக்குகின்றன. தினசரி அவற்றுக்காக உபயோகிக்கும் மருந்துகளும் தூக்கக் குழப்பத்துக்கு காரணமாக அமைந்துவிடுகின்றன.



எனவே தூக்கக் குழப்பம் உங்களைத் துன்புறுத்தினால் மருத்துவருடன் வெளிப்படையாகக் கதையுங்கள்.

**தூக்க குழப்பத்துக்கான தீர்வு நாடிகள்**

அதேவேளை தூக்கக் குழப் பத்தைத்தீர்க்கச்சில முயற்சிகளை மேற்கொள்ளலாம். அவை வருமாறு,

1. படுக்கைக்குப் போவதற்கு முன்பான ஒரு மணி நேரத்துக்குள் பரபரப்பை ஏற்படுத்தும் எந்தச் செய்கையிலும் ஈடுபட வேண்டாம். உதாரணமாக விறுவிறுப்பான தொடர் நாடகங்களைத் தொலைக்காட்சியில் பார்ப்பது,ஆர்வமூட்டும் நூல்களைப் படிப்பது,மனதுக்கு மகிழ்வூட்டும் விவாதங்களில் ஈடுபடுவது போன்ற செய்கைகளைப் படுக்கைக்குச் செல்லும் தருணங்களில் தவிர்க்க வேண்டும்.
2. நித்திரை செய்யும் இடம் ஆரவாரமற்ற அமைதியான,ஒளி குறைந்த இடமாக இருக்க வேண்டும்.
3. நரம்புகளைத்தூண்டும் பானங்களான கோப்பி, மது, கேக் போன்றவற்றை மதிய வேளைக்குப் பின் அருந்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.
4. மதிய வேளைக்குப் பின்னான அதிக நீராகாரம் இரவு வேளைகளில் அடிக்கடி சிறுநீர்கழிப்பதற்கான தூண்டுதலை தரும்.இதனால் தூக்கம் குழம்பும். எனவே மதிய வேளைக்குப் பின்பு அதிக நீராகாரம் தவிர்க்கப்பட வேண்டும்.
5. தூங்கச் செல்வதற்கான நேரத்தை ஒழுங்காகக் கடைப்பிடியுங்கள். உதாரணமாக இரவு 10 மணிக்குப் படுக்கைக்குச் சென்று அதிகாலை 5 மணிக்கு எழுவது போன்ற உகந்த ஏதாவது ஒரு ஒழுங்கான நேர அட்டவணையைத் தினசரி தவறாமல் கடைப்பிடியுங்கள்.
6. மதிய உணவு வேளைக்குப் பின் தினசரி தூங்குபவராயின் அதனை 15 நிமிடம் முதல் 30 நிமிடங்களாக மட்டுப்படுத்துங்கள்.
7. மாலை நேரத்தில் சற்றுக் காலாற உலாவித் திரியுங்கள். தினசரி கைகால்களைச் சற்று நீட்டி மடக்கிச் சிறிய உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள்.

# மனஅழுத்தத்தை சமாளித்தல்

மருத்துவ மாணவர்கள்: ஏ.எம்.வசிம் அக்ரம், ஏ.ஜி.எம்.மபாஸ், டபிள்யூ. எம்.விராஜின்.


எமக்கு இருக்கும் மனஅழுத்த நிலையை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.அதற்கான பொருத்தமுறு நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதன் மூலம் வேண்டத் தகாத சம்பவங்களின் நிகழ்தலைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**மன அழுத்தத்தினால் ஏற்படும் அறிகுறிகள்**

**உடலியல் மாற்றங்கள்**

- மயக்கம், தலைச்சுற்றல்
- காதில் தொடர்ந்து ரீங்கார ஒலி கேட்டல்
- உடல் நடுக்கம்
- மார்பில் எரிச்சல் ஏற்படுதல்
- பேதியாதல் அல்லது மலச்சிக்கல்

**மனம் அல்லது உணர்ச்சி சார் அறிகுறிகள்**



- தூக்கமின்மை.
- கவலை அல்லது அச்சம்.
- சோர்வு அல்லது தாழ்வு மனப்பான்மை.
- 'ஓவென' அழ வேண்டுமென்ற உணர்வு வெளிப்பாடு.
- முன்கோபம்.
- பிரச்சினைகள் ஏற்படும் போது சிந்திக்க முடியாமை.
- பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமை.

**மனஅழுத்தம் தரும் விளைவுகள்**

**மனவியல் ரீதியான விளைவுகள்**

சரியான முறையில் சிகிச்சை பெறாதபோது பலவாறாக இவை வெளிப்படுகின்றன. தீர்க்கப்படாத மனவியல் பிரச்சினைகள் முதலில் மனநிலையையும், பின்பு உடல் நிலையையும் பாதிக்கும்.

- விடயங்களை கவனம் கொள்வதில் சிரமம்
- முடிவு எடுப்பதில் சிரமம்
- தன்னம்பிக்கையை இழத்தல்
- அடக்கமுடியாத ஆசைகள்
- அதீத பயம்
- பயத்தால் வரும் பாதிப்புக்கள்

**செயற்பாட்டு விளைவுகள்**

இவை பாதிக்கப்பட்ட நபர் எவ்வாறு செயற்படுகிறார் என்பதைப் பொறுத்து வெளிப்படுகின்றன.

- அதிகமாகப் புகைபிடித்தல்
- நரம்பியல் தூண்டல்கள்
- அதிகமாக மது அல்லது போதைப் பொருள் பயன்படுத்துதல்
- பற்களைக் கடித்தல், முடிகளை இழுத்தல் போன்ற பழக்க வழக்கம்
- ஞாபகமறதி
- விபத்துக்குள்ளாதல்
- முரட்டுத்தனமான வன்முறைச் செயல்களுக்குத் தூண்டப்படுதல்.



செயற்பாட்டு விளைவுகள் அபாயகரமானவை என்பதோடு சமூக, தனிமனித உறவுகளைப் பாதிக்கக் கூடியவையாக அமைந்துள்ளன. தனிமை, வறுமை, சோகம், அழுத்தம் விலக்கி வைக்கப்படுதல் போன்ற செயல் நிலைகளால் ஏற்படும் விரக்தி போன்ற விளைவுகள் நீடித்து இருப்பது மட்டுமின்றி, சாதாரண சளி முதல் எய்ட்ஸ் வரையான வைரஸ் தாக்குதல்களுக்கு எதிரான நோய் எதிர்ப்புத் திறனையும் குறைக்கின்றன. ஓமோன்கள்,மூளையில் உள்ள நரம்பு மண்டலக் கடத்திகள், பிற சிறு அளவிலான இரசாயனங்கள், முக்கிய வினை ஊக்கிகள், உடல் செயற்பாடு ஆகியவற்றை சிலவகை மனஅழுத்தங்கள் உண்டாக்குகின்றன.

(அடுத்த வாரம் தொடரும்)

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பமசம்
27.08.2017

# ‘படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்’



கோ.செ.வேலாயுதபிள்ளை

இந்தியச் சஞ்சிகையிலிருந்த அந்த விடயம் கவனத்தை ஈர்த்தது. ஐக்கிய நாடுகள் சபை சார்பில் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் பணியைச் செய்கின்ற 'யுனெஸ்கோ' வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றை மேற்கோள்காட்டியே அந்த விடயத்தை வெளிக்குக் கொண்டுவந்திருந்தது குறித்த சஞ்சிகை. இந்தியாவிலிருக்கின்ற பழம்பெரும் இந்து ஆலயங்கள் சிதைவுபடுத்தப்படுகின்றன என்பதாக அந்த அறிக்கை நீள்கிறது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உள்ளடக்கமாக தழிழ்நாட்டிலிருக்கின்ற பழமையான கோவில்கள் பலவும் புனரமைப்பு என்ற பெயரில் சிதைக்கப்படுகின்றன என்பதை ஆராய்ந்து உறுதிப்படுத்தப்படுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து இந்திய அரசு. தனது மண்ணுக்குரிய பழமைகளையும் பாரம்பரியங்களையும் அரிய வரலாற்று மரபுகளையும் அழிக்க முனைவதாக யுனெஸ்கோ மாத்திரமன்றி அங்குள்ள ஊடகங்கள் பலவும் போர்க்கொடி தூக்கத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் அந்த நாடு, இந்தியா, எமது நாட்டில் செய்து கொண்டிருக்கும் இதே செயல்களைக் கண்டு கொள்வதற்கும் ஆராய்ந்து அறிக்கைவிடுவதற்கும் இதுவரைக்கும் யாருமே முன்வரவில்லை...



கதிர்காமத்தில் அசோகத்தூண்....



திருக்கேதீஸ்வரத்தில் வட இந்திய 'ஓம்'



திருக்கேதீஸ்வரத்தில் வட இந்திய ஓம்

### பழமை வாய்ந்த, வரலாற்றுப் புகழ் மிக்க ஈழத்து ஆலயங்கள்

மூர்த்தி, தலம், தீர்த்தம் அமையப்பெற்ற ஈழத்தின் புகழ்பூத்த இந்து ஆலயங்களான திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் போன்ற இன்னும் பல ஆலயங்கள் மிகவும் பழமையானமானவையாக இருக்கின்றன. வராலாறுகள் மற்றும் பழங்காலச் சரித்திரங்கள் பலவற்றையும் ஆலயங்களையும் அவற்றிலிருக்கின்ற வரலாற்றுத் தடயங்களையும் வைத்தே நாம் அறிந்து கொள்கிறோம். ஊகித்துக் கொள்கிறோம். வரலாறுகளில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் பலவும் பெயர்போன குறித்த தலங்களின் இடம், பெயர் சுட்டியே பேசப்படுகின்றன. அவற்றை நீக்கின் வராலாறு ஒருபோதுமே முழுமை பெறாது. அவற்றை விலக்கிய ஈழ வரலாற்றையும் காணமுடியாது. கோயிலின் பழமையும் பாரம்பரியமும் ஒரு அளப்பரிய சொத்து. அதன் புராதனம், கட்டடக்கலை, கலைநயம் மிக்க வேலைப்பாடுகள் போன்றவை விலைமதிப்பற்றவை. அன்றைய காலத்தை அழியாமல் அப்படியே வைத்திருந்து கண்முன்னே கொண்டுவந்தனவாய் இன்றைக்கும் நின்று நிலைக்கும் சான்றாதாரங்கள். கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள், சாசனங்கள் போன்றவை வரலாறு பேசுபவை. உண்மை பேசுபவை. இவற்றை அழிப்பதன் மூலம் கோயிலின் புராதனமும், வரலாற்று ஆதாரங்களும், அழிக்கப்படுகின்றன. ஈழத்தின் பல இந்துத் தலங்களுக்கும் இந்தியாவால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அது ஈழத்தின் புகழ்பூத்த பல இந்து ஆலயங்களுக்கும் மனமுவந்து, பெரும் தொகை நிதியைக் கையளிக்கின்றன. அவ்வாலயங்களை கட்டியெழுப்புவதில் தான் கரிசனை கொண்டுள்ளதாகவும் காட்டிக்கொள்கிறது. ஆனால் அதற்குப் பின்னாலோ சூட்சுமங்கள் பலவற்றையே அது ஒளித்து வைத்திருக்கிறது.


### இந்திய வரலாற்றில் இந்து மதம்

இந்திய வரலாற்றின் ஆரம்ப காலம் சிந்துவெளிப் பண்பாட்டுக்காலம் என்பதாக அறியப்படுகிறது. அது கிறிஸ்துவுக்கு முன்னான 3,500 தொடக்கம் 2,000ஆம் ஆண்டுகளுக்குரியது. கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலையில் சிறந்திருந்ததை அதன் இடிபாடுகள் பேசிநிற்கின்றன. அத்துடன் அவ்விடத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, தெய்வ வழிபாடு எனப் பல விவரங்களையும் அவையே பறைசாற்றி நிற்கின்றன. நதியை ஒட்டி வளர்ந்த அந்தச் சிந்து நாகரீகத்தின் அடிநாதமாக இருந்தது இந்து வழிபாடு என்றும் மருத்துவம், விவசாயம், நகர அமைப்பு, கட்டடக்கலை வியாபாரம் எனப் பல துறைகளிலும் அது சிறந்து விளங்கியிருந்தது என்பதுவும் பிற்பட்ட கண்டுபிடிப்புக்களாயின.

அதற்குப் பன்னெடுங்காலங்களுக்குப் பின்னர் இந்தியாவில் பல நாகரீகங்கள் தோன்றி மறைந்தன. கி.மு 5 ஆம் நூற்றாண்டளவில் கங்கைக் கரையோரமாக மக்கள் குடியேற்றங்களும் பல சிறிய அரசுகளும் உருவாகியிருக்கின்றன. வேதகாலப் பிராமணீயத்துக்கு மாற்றாகப் பௌத்தம், சமணம் என்னும் மதங்கள் தோன்றிச் செல்வாக்குப் பெற்றன. பலம் பொருந்திய மௌரியப் பேரரசன் அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சியில் கி.மு மூன்றாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் பௌத்தம் அரச சமயமாகி இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும், இந்தியாவுக்கு வெளியிலும்கூடப் பரவியிருக்கிறது.

### கதிர்காமத்தில் அசோகத்தூண்...!

இந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்த பௌத்த சமயத்தின் வலு, செல்வாக்கு என்பன காரணமாக அச்சமயம் சார்பான பல கட்டிடங்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதாக அமைக்கப்பட்டன. இக்காலத்தைச் சேர்ந்த கட்டடங்கள் பௌத்தக் கட்டடக்கலையின் உச்சமாகத் திகழ்ந்தன. நான்கு திசைகளையும் பார்த்தவாறு இருக்கும் நான்கு சிங்கத் தலைகளைச் சுமந்த தூண்கள் பலவும் நிறுவப்பட்டன. அந்த அசோகத்தூண்களே இன்றைக்கும் புதிய இந்தியாவின் முத்திரையாகவிருக்கின்றன. அந்நாட்டின் தேசியக் கொடியிலும் அசோகச் சக்கரம் இருக்கவே செய்கிறது. அந்த நாட்டின் அதே அசோகத்தூண்கள், நான்குதலைச்சிங்கத்தூண்கள் இன்றைக்கு ஈழத்துக் கதிர்காமம் வரைக்கும் பரவி விட்டன.



### பௌத்த செல்வாக்குக்குள் கதிர்காமம்

கதிர்காமம் என்பது இலங்கைத்தீவிலுள்ள மிகவும் பழமையான இந்து ஆலயமாகும். ஆனால் 2500ஆண்டுகளுக்கு முன் தமிழ் மன்னன் எல்லாளனுடனான போரில், சிங்கள மன்னனான துட்டைகைமுனு இக்கோயிலில் நேர்த்திக் கடன் வைத்தார் எனவும், போரில் வென்றதால் அந்த நேர்த்திக்கடனைக் கோவிலுக்குச் சென்று நிறைவேற்றினார் எனவும் வரலாறு உண்டு. அதை அடிநாதமாகக் கொண்டு கதிர்காமம் சிங்கள - பௌத்த செல்வாக்குக்கு உட்பட ஆரம்பித்தது. அந்தக் கோவிலின் அமைவிடம் அதற்கு மேலும் வலுச்சேர்த்தது. நிருவாகம், ஆளுகை என்பன கதிர்காமத்தை முற்றுமுழுதாகவே பௌத்தர்களின் பிடிக்குள் மூழ்க வைத்தன. ஆங்காங்கே புதிதாகக் கட்டியெழுப்பப்படும் பகுதிகளை பௌத்த சின்னங்கள் நிறைத்தன. இப்போது இந்தியாவின் பௌத்தக்குறியீடான அசோகத்தூணும் கதிர்காமத்துக்குள் நிறுவப்பட்டுவிட்டது. அதாவது கதிர்காமத்தில் நீர் நிலை ஒன்றில்(சிறிய பொய்கை போன்றதன் நடுப்பகுதியில்) நான்கு சிங்கமுகங்களுடனான அசோகத்தூண் ஒன்று கம்பீரமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

முருகனுறையும் கதிர்காமத்தின் வரலாற்றை எவ்வாறெல்லாம் திரிபுபடுத்தலாம் என்பதற்கு அசோகத்தூண் இனிவரும் காலங்களில் மிகவும் துணைநிற்கும். தான் அமைந்திருக்கும் இடத்தாலும், ஆளுகையாலும் கதிர்காமத்தின் பழமைகள் சிதிலமடைவதை ஓரளவுக்குப் பொறுத்துக்கொண்டாலும் தமிழர் ஆளுகைக்குள் உட்பட்டிருக்கும் ஏனைய ஆலயங்களில்கூட இப்படியான வேலைகள் நடந்தேறுவதே மிகவும் கவலையளிப்பதாக இருக்கின்றது.

**இப்போது இந்தியாவின் பௌத்தக்குறியீடான அசோகத்தூணும் கதிர்காமத்துக்குள் நிறுவப்பட்டுவிட்டது. அதாவது கதிர்காமத்தில் நீர் நிலை ஒன்றில்(சிறிய பொய்கை போன்றதன் நடுப் பகுதியில்) நான்கு சிங்கமுகங்களுடனான அசோகத்தூண் ஒன்று கம்பீரமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. முருகனுறையும் கதிர்காமத்தின் வரலாற்றை இனிவரும் காலங்களில் எவ்வாறு திரிபுபடுத்தலாம் என்பதற்கு அசோகத்தூண் இனிவரும் காலங்களில் மிகவும் துணைநிற்கும்.**


### திருக்கேதீஸ்வரத்தில் வடஇந்திய ஓம்...!

மன்னாரில் அமைந்திருக்கும் திருக்கேதீஸ்வரர் ஆலயம் கதிர்காமத்தைப்போலல்லாமல் தமிழர்களால், இந்துக்களால் ஆளப்பட்டுவரும் ஆலயமாகும். அவ்வாலயமும் இந்தியாவின் நிதி உதவிக்கு உட்பட்டுத் தனது பழமையை இழந்திருக்கின்றது. இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் கலைஞர்களாலும் கலைநுட்பங்களும் அது முற்றுமுழுதாகவே தனது பழைய வடிவை இழந்து நிற்கிறது. அங்கு அமைக்கப்பட்டுள்ள மண்டப அமைப்பும் அதைத் தாங்கும் தூண்களின் அமைப்பும் அவ்வாலயத்துக்குப் புதுத் தோற்றத்தை அளித்துவிடுகின்றன. பழமை மறைந்தே போய்விட்டது.

அவர்களால் புதிதாகக் கருவறைக்கு அடுத்ததாக அமைக்கப்பட்டிருக்கும் முதலாவது மண்டபத்தில் தமிழ் எழுத்து வடிவில் 'ஓம்' என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக வடஇந்திய மொழியில் அதைக் குறிக்கும் எழுத்து வடிவமே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

நிதி உதவி வழங்குவதுடன் இந்திய மொழிச் செல்வாக்கும் இப்படியாக இந்து ஆலயங்களுக்குள் புகுந்து விடுகின்றன. இவற்றை உடபுகுத்துவதற்காக ஏலவே இந்த ஆலயங்கள் கொண்டிருந்த வரலாற்றுத் தடயங்கள் பலவும் அழிக்கப்பட்டு விடுகின்றன. இன்னும் சில தசாப்தங்களில் அசோகன் வந்து கதிர்காமத்தை வழிபட்டுச் சென்றார் எனவும் அதுபோலவே ஒருவர் வந்து திருக்கேதீஸ்வரத்தையும் வழிபட்டு நேர்த்திக் கடன் வைத்துச் சென்றார் எனவும் குறிப்பு எழுதினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஈழத்தமிழர்களாகிய நாங்கள் அரசியல் பொருளாதார ரீதியில் மிகவும் பின்னடைவு அடைந்துள்ள நிலையில், சொந்த நிலத்தையும் அதன் பாரம்பரியத்தையும் இழந்து வாழும் சூழலில் இத்தகைய செயற்பாடுகளையும் கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

தமிழ் மக்களின் போராட்டத்தை அழிக்க ஒன்றிணைந்த அதே சக்திகள் எங்கள் பண்பாடு, பழமைகளையும் அழிப்பதற்கு இப்போதும் இணைந்தே செயற்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும். அது சரி இது தொடர்பாகக் கண் விழிக்க வேண்டியவர்கள் யார்...?



கதிர்காமம் தெய்வயானை ஆலயத்தில் வட இந்திய 'ஓம்'

பிரகாஸ்



# ரவுண்ட் த வேள்ட்


அ.தி.மு. கழகத்தில் இருந்து இரண்டு பிரிவுகளாகப் பிரிந்திருந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இருவரும் இணைந்துள்ளனர். இவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளவரான தினகரனுக்கு சுமார் 18 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு கொடுத்தனர். இதனால் சட்டசபையில் எடப்பாடி அரசு தனது பலத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தப் பின்னணியிலேயே ஓ.பன்னீர்செல்வத்தைத் தனது அணியில் இணைத்து நடவடிக்கை எடுத்துள்ளார் எடப்பாடி பழனிச்சாமி. ஓ.பன்னீர்செல்வத்துக்கு நிதி அமைச்சுப் பதவி கொடுக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் துணை முதல்வராகவும், கட்சியின் பொதுச் செயலாளராகவும் அவரே நியமிக்கப்பட் டுள்ளார். முன்னாள் முதல்வர் அம்மாவின் (ஜெயலலிதாவின்) வழியில் ஆட்சிசெய்யவுள்ளோம் என்று இருவரும் அறிவித்துள்ளனர்.

"என்னடாப்பா... அப்ப இனியும் ஊழல் ஆட்சிதானா...?"

## இணைந்தன இலைகள்




## வெள்ளை மாளிகையை பதறவைத்த கயளகனள



"அங்க குண்டு வைக்கிறாங்கள். இங்க குண்டு வைக்கிறாங்கள்" என்று உலகமே அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருக்கையில், வெள்ளை மாளிகையையே ஒரு புரட்டுப் புரட்டியுள்ளது வெடிகுண்டுப் பீதி. கடந்த செவ்வாய்க்கிழமை வெள்ளை மாளிகையில் சந்தேகத்துக்கு உரிய விதத்தில் ஏதோ ஒரு பை கண்டெடுக்கப்பட்டதை அடுத்து, வெளி மக்களின் பார்வை மறுக்கப்பட்டு அந்தப் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டது. மூலை முடுக்கெங்கும் தேடுதல் நடத்தப்பட்டு பின்னர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்னரே வெள்ளை மாளிகை இயல்பு நிலைக்குத் திரும்பியதாம். உலகில் அதியுச்சப் பாதுகாப்பு நிறைந்த இடங்களில் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன், அந்த நாட்டு அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகை என்பவை முதன்மை இடம்வகிக்கின்றன.

"வெள்ளை மாளிகைக்கே இந்த நிலையென்றால், ஏனைய பகுதிகள் தொடர்பில் சொல்லவும் வேணுமா?"





## இருளானது அமெரிக்கா

கடந்த திங்கட்கிழமை முழுமையான சூரிய கிரகணம் ஏற்பட்டது. உலகமெங்குமிருக்கின்ற 30 தொடக்கம் 40 கோடி மக்கள் இந்தச் சூரிய கிரகணத்தைப் பார்வையிடக்கூடியதாக இருந்தது. சூரிய கிரகணம் அதிகம் தென்பட்ட இடம் அமெரிக்காவே. அந்த நாட்டின் 14 மாகாணங்களில் அது அவதானிக்கப்பட்டது. அந்த இடங்கள் சில நிமிடங்கள் இருளில் மூழ்கின என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. இந்த வகைச் சூரிய கிரகணங்கள் 99 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஏற்படுமாம்.

பசுபிக்கடல்பரப்பில் அமெரிக்காவுக்குச் சொந்தமாக உள்ள குவாம் தீவைத் தாக்கவுள்ளோம் என்று தெரிவித்திருந்த வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன். இந்தத் தாக்குதல் திட்டத்துக்காக 4 ஏவுகணைகளைத் தயார் நிலையிலும் வைக்குமாறு உத்தரவிட்டார். எனினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தத் தாக்குதல் திட்டத்தில் இருந்து அவர் பின்வாங்கியிருந்தார். தற்போது கூடுதலாக ஏவுகணைகளையும், அணுவாயுதங்களையும் தயாரிக்க உத்தரவிட்டுள்ளாராம். ஐக்கிய நாடுகள் சபையும் வடகொரியா மீது தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்துக் கொண்டுதான் உள்ளது. வடகொரியாவும் தனது திட்டங்களில் இருந்து கொஞ்சமும் பின்வாங்காது முன்னெடுத்துக் கொண்டுதான் உள்ளது.

"அப்படியாயின் பொருளாதாரத் தடையின் நிலை...?"

## முடியலடா சாமி...




## சவூதி மன்னரின் சர்ச்சைச் செலவு

சவூதி அரேபிய மன்னர் சல்மான், இந்த ஆண்டு தனது கோடை விடுமுறையை மொராக்கோ நாட்டில் கழித்தார். அங்குள்ள டேன்ஜியர் நகரில் அவருக்குச் சொந்தமான ஆடம்பர அரண்மனை உள்ளது. இது 74 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. அங்கு அவர் ஒரு மாத காலம் தங்கியிருந்தார். அவரது தேவையை நிறைவேற்ற செய்ய 200 கார்கள் எந்த நேரத்திலும் தயார் நிலையில் இருந்தன. மன்னரின் வருகையை முன்னிட்டு கடந்த ஓர் ஆண்டு கால மந்த அரண்மனை புதுப்பிக்கப்பட்டது. அங்கு ஹெலிகாப்டர் தரை இறங்கும் வகையில் புதிய தளம் அமைக்கப்பட்டது. புதிதாக வேலைத் திட்டத்தில் அந்த சில குடியிருப்புகளை யும் கட்டியுள்ளனர். மொராக்கோ நாட்டில் மன்னர் சல்மான் தங்கியிருந்தபோது இலங்கை மதிப்பில் சுமார் ஆயிரத்து 600 கோடி ரூபாய்களை செலவு செய்தார் என்று தெரிய வருகிறது.

"ஐவனம், வேறு யாருக்கும் குடுத்திடாதீங்க. அது கூடாத பழக்கம்...!"



## ஆபிரிக்க நாடுகளை அச்சுறுத்தும் இடர்கள்



ஆபிரிக்க நாடுகள் பலவும் தற்போது கடுமையான மழைக்கும், வெள்ளப் பெருக்குக்கும், அதன் தொடர்ச்சியாக நிலச்சரிவுக்கும் முகம்கொடுத்து வருகின்றன. மேற்கு ஆபிரிக்க நாடுகளான செனகல், சியாரா லியோன், கினியா ஆகிய நாடுகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. சியாராலியோனில் சுமார் 400 பேர் உயிரிழந்துள்ளனர். கினியா மற்றும் செனகல் ஆகிய நாடுகளிலும் உயிரிழப்புக்கள் அதி கம் பதிவாகியுள்ளன. எனினும் உத்தி யோகபூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

"அப்ப இது கறுப்புக் கண்டம் இல்ல, கண்ணீர்க் கண்டம்போல"



விமர்சனம்

# விவேகம் வீண்விரயம்

**கடந்த சில மாதங்களாகவே பரபரப்புப் பூச்சாண்டிகாட்டிக்கொண்டிருந்த 'விவேகம்' ஒருவாறு கடந்த 24ஆம் திகதி திரைக்கு வந்து, யானைவெடியாக இல்லாமல் பூனை வெடியாகிப் போய்விட்டது.**

அஜித்தும் இயக்குநர் சிவாவும் தொடர்ச்சியாக இணைந்து உருவாக்கியிருக்கும் மூன்றாவது படம், அஜித்குமார் நடிக்க ஆரம்பித்து 25ஆவது வருடத்தில் வெளிவரும் படம், முழுக்க முழுக்க ஐரோப்பாவில் எடுக்கப்பட்ட படம் என 'விவேகம்' அஜித் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அதை விவேகத்தின் முன்னோட்டக் காட்சிகளும் அதிகப்படுத்தியிருந்தன. இந்த நிலையில்தான் வெளிவந்திருக்கிறது விவேகம். எந்த ஒரு நிலையிலும் முயற்சியைக் கைவிடாதவன், என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதுதான் 'விவேகம்' என்று இந்தப் படத்தை ஒருவரியில் சொல்லிவிடலாம். நண்பன் துரோகியாகிறான் என்ற வழமையான கதைதான். ஆனாலும், கண்ணாடியில் விரியும் கணினித் திரைகள், சுரங்கப் பாதைகளில் பைக் ரேஸிங், நிமிடத்துக்கு ஒரு துப்பாக்கிச் சூடு, அதிரடிச் சண்டைகள் என 'வீடியோ கேம்' டெம்போவில் இலேசாகப் புதுமை காட்டியிருக்கிறார்கள்.

**இந்தியாவைத் தாக்கும் வழமையான திட்டம்**

பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டிருக்கும் அணுகுண்டுகளை வெடிக்கச்செய்து நிலநடுக்கத்தை உருவாக்கும் கும்பல், இந்தியாவில் இரண்டு அணுகுண்டுகளை வெடிக்க வைக்கத் திட்டமிடுகிறது. அதைத் தடுக்க சேர்பியாவில் உள்ள ஒரு பயங்கரவாத எதிர்ப்புப் படை (உளவுப் படை) களமிறங்குகிறது.

அதன் சார்பில் செயலில் இறங்குகிறார் அஜய்குமார். நடாஷா என்ற ஊடுருவியால்தான் அதனைத் தடுக்க முடியும் என அவளைத் தேட, அவள் கொல்லப்படுகிறாள். ஆர்யன் உள்ளிட்ட நண்பர்கள்தான் இதன் பின்னணியில் இருக்கிறார்கள் என்பதும் தெரியவருகிறது. அவர்களை முறியடித்து எப்படி அணுகுண்டை அஜய்குமார் செயலிழக்கச் செய்கிறார் என்பதுதான் மீதிக் கதை.

ஜேம்ஸ் பாண்ட் படங்களில் நாயகன் அறிமுகமாவதைப்போல ஒரு பெரிய சண்டைக் காட்சியில் அறிமுகமாகிறார் அஜித்குமார். ஒரே ஒரு வித்தியாசம். ஜேம்ஸ் பாண்ட் படங்களில் அந்தச் சண்டை எதற்காக, யாருடன் நடக்கிறது, எப்படி நடக்கிறது என்பது தெளிவாகப் புரியும். விவேகத்தில் கண்ணைக் கட்டிப் பனிக் காட்டுக்குள் விட்டதைப்போல இருக்கிறது.

சரி, ஆரம்பம் தான் இப்படி, படம் வேறு மாதிரி இருக்கும் என்று காத்திருந்தால், அதிலும் ஏமாற்றம். படம் ஆரம்பித்திலிருந்து முடிவது வரைத் தொடர்ந்து யாராவது யாரையாவது சுட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். எந்த நாட்டின் உளவு முறியடிப்பு அல்லது பயங்கரவாத முறியடிப்புப் படை அணுகுண்டை செயலிழக்கச் செய்யும் பணியில் இறங்குகிறது? அந்த நாட்டில் அரசு என்ற ஒன்றே இருக்காதா? ஆயிரம் கேள்விகள் எழுந்தாலும் எதற்கும் பதிலில்லை.

**அஜித் ரசிகர்களுக்கு இனி அடுக்கு வசனங்கள்**

20, 30 பேர் சேர்ந்து இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அஜித் மேல் ஒரு குண்டுகூட படுவதில்லை. மிகப் பெரிய அணைக்கட்டிலிருந்து கீழே குதிக்கும் அஜித், கீழே விழுந்துகொண்டிருக்கும்போது துப்பாக்கியை எடுத்துச் சுட்டு நான்கைந்து பேரைக் கொன்றுவிடுகிறார். வில்லனாக வரும் விவேக் ஓபராய் மிகவும் பாவம். படம் முழுக்க, அஜித்தைப் பற்றி அடுக்கு வசனங்களைப் பேசிக்கொண்டேயிருக்க வேண்டிய வேலை அவருக்கு.

"ஒரு வழி இருந்தாலே அவன் ஆடுவான், அறுபது வழி இருக்கு அடங்கவே மாட்டான்", "அஜய்குமார் உங்க பார்வையில் படக்கூடாது என்று முடிவு பண்ணீட்டா, அவன் நிழலைக்கூட உங்களால நெருங்க முடியாது", "போராடாம அவன் போகவும் மாட்டான், சாகவும் மாட்டான்" இதெல்லாம் வில்லன், அஜித்திற்காகச் சொல்லும் அடுக்கு வசனங்கள். இது தவிர, அஜித் கமராவைப் பார்த்து பேசும் அடுக்கு வசனங்கள் தனியான பட்டியலுடன் இருக்கின்றன. இனி இவை அஜித் ரசிகர்களின் வாயில் கொஞ்ச நாளைக்கு முணுமுணுக்கப் போகின்றன. ஒரு படம் முழுக்க முழுக்க சண்டைக் காட்சிகளாலும் நிறைந்திருப்பது பிரச்சினையில்லை. 'பாஸ்ட் அண்ட் ப்யூரியஸ்' வகைத் திரைப்படங்கள் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால், அந்தச் சண்டைகள் யார் யாருக்கிடையில், எதற்காக நடக்கின்றன என்பதில் ஒரு தெளிவு இருக்கும். இந்தப் படத்தில் அந்தத் தெளிவு இல்லை. படம் நெடுக, இடத்தின் பெயர், நேரம் போன்றவற்றை எழுத்தில் காண்பிக்கிறார்கள். ஆங்கிலத்தில் வரும் அந்த வார்த்தைகளைப் படிப்பதற்கு முன்பாக அவை நீங்கிவிடுகின்றன. படம் பார்ப்பவர்கள் படித்துவிடக்கூடாது என்றால், அதை எதற்காகக் காண்பிக்க வேண்டும்?

**பாத்திர வார்ப்புக்கள்**

உடலைச் சீராக்கி, பார்வையைக் கூராக்கி, நடையை நேராக்கித் தெறிக்கவிடுகிறார் அஜித். இயந்திரத் துப்பாக்கியை ஏந்தி, மின்னும் நரை முடியோடு அவர் கம்பீரமாக நடக்கும்போது ஆங்காங்கே 'ஜேம்ஸ்பாண்ட்' தெரிகிறார். கண்களில் காதலைத் தேக்கி, உடல்மொழியில் நேசத்தைக் கடத்தும் அழகிய மனைவியாக காஜல் அகர்வால். கணவருக்காகக் காதலோடு காத்திருக்கும் போதும், களத்தில் நிற்கும் கணவரின் வீரத்தை செருக்கோடு பேசும்போதும் அவரது பாத்திரம் பரவாயில்லை.

அஜித் - காஜல் இடையிலான சிறுசிறு உரையாடலும், சமிக்ஞை மொழியும் குறுங்கவிதையாக நீள்கின்றன. அட்சரா ஹாசன் சில காட்சிகள் மட்டுமே வந்தாலும், அழுத்தமான நடிப்பை வெளிப்படுத்துகிறார். அஜித்தின் நண்பராக வரும் விவேக் ஓபராய், ஒவ்வொரு முறையும் அஜித்தை "நண்பா, நண்பா" என்று புன்னகையோடு அழைத்துக் கொண்டே, அதற்குப் பின்னால் இருக்கும் வில்லத்தனத்தை அழகாக வெளிப்படுத்துகிறார். இருந்தாலும், அடுக்கு வசனங்கள் பேசி நாயகனை எந்நேரமும் உயர்த்திப் பேசுவதையே வில்லனின் வேலையாக்கி இருப்பது அத்தனை விவேகமாகத் தெரியவில்லை. அஜித்துக்கு உதவும் மொழிபெயர்ப்பாளராக சில காட்சிகளே வந்தாலும், கிடைத்த நேரத்துக்குள் சிரிக்க வைக்கிறார் கருணாகரன்.

**அஜித் ரசிகர்களுக்கு 'தல' தலதான்**


தர்க்கத்தை கேலிசெய்யும் இதுபோன்ற சாகசங்களுக்கு வேறு நாயகனாக இருந்தால் வெறும் நகைச்சுவை ஆகியிருக்கும். அஜித் ரசிகர்கள் பொறுத்துக்கொள்கிறார்கள். கூடவே கிராபிக்ஸ் விஷ்வல் எபெக்ட்ஸ் தொழில்நுட்பமும், அதைப் பயன்படுத்திக்கொண்ட இயக்குநரின் புத்திசா லித்தனமும் ஓரளவு ஈடுகட்டுகின்றன. இந்தப் படத்தின் சண்டைக் காட்சிகளுக்காக அஜித் கடுமையாக உழைத்திருக்கிறார் என்பது மட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

அழுத்தமில்லாத கதைக் கரு, ஐரோப்பியர்கள் பேசும் அந்நியத் தமிழ், புரியாத அதிநவீன தொழில்நுட்பம், வாதம் இல்லாத சண்டைக் காட்சிகள் ஆகியவை திரைக்கதைக்கு வலுச் சேர்க்கவில்லை. வெற்றியின் கமராவும், ரூபனின் எடிட்டிங்கும், அனிருத்தின் பின்னணி இசையும் ஒரு ஆக்சன் படத்துக்குத் தேவையான கச்சிதத்தைத் தருகின்றன. கபிலன் வைரமுத்துவின் 'காதலாட' பாடல் மட்டும், ஸ்லோவேனிய நாட்டு குளிருக்கு, இதம் தரும் தேநீராக இருக்கிறது. பெருமுயற்சியுடன் ஆக்சன் காட்சிகளுக்காக உழைத்த அஜித்தும், ஸ்டன்ட் கலைஞர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். சண்டைக் காட்சிகளில் அஜித்துடன் சேர்ந்து இயக்குநர் சிவாவும் சண்டையிட்டிருக்கிறார். ஹொலிவூட் ஸ்டன்ட் இயக்குநர் கலோயன் வோடனிச்சரோவ் மற்றும் கணேஷின் சண்டைக் காட்சிகள் அசர வைக்கின்றன. செர்பியக் காடுகளில் அஜித் உடற்பயிற்சி செய்யும் காட்சிகள், சில்வஸ்ரர் ஸ்டலோன் நடித்த 'பர்ஸ்ட் ப்ளட்' படத்தை நினைவூட்டுகின்றன. விவேகம் அஜித் ரசிகர்களுக்குரிய படம்.



அழுத்தமில்லாத கதைக் கரு, ஐரோப்பியர்கள் பேசும் அந்நியத் தமிழ், புரியாத அதிநவீன தொழில்நுட்பம், வாதம் இல்லாத சண்டைக் காட்சிகள் ஆகியவை திரைக்கதைக்கு வலுச் சேர்க்கவில்லை.

# பார்வதி



சிறுகதை

தேவிபரமலிங்கம்

கால்கள் இரண்டும் பெடல் கட்டைகளை மாறிமாறி மிதிக்கச் சைக்கிள் சக்கரங்கள் உருண்டு நீண்ட தூரங்களைத் தாண்டி வந்து விட்டேன்.

அதோ தெரிகிறதே இரும்புக் கேடர்களால் உருவாக்கப்பட்ட படலை அது தான் அவள் வீட்டுப் படலை!

நான் மேற்கொண்டிருக்கும் இந்தப் பயணம் அவளைத் தேடியதல்ல. ஆனால் அவளின் வீட்டைத் தாண்டித்தான் எனது பயணம் நிறைவடைய வேண்டும்.

அவளின் வீட்டுப் படலை நெருங்க நெருங்க நெஞ்சுக்குள்ளே உதைப்பு ஆரம்பிக்கிறது. இறங்கி அவளின் வீட்டுக்குள் போய்விட்டுப் பயணத்தைத் தொடர்வோமா? அவளை என்ன பார்க்கிறது பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு போய் விடுவோமா?

முன்பெல்லாம் இப்படிப் பல தடவைகள் அந்த வீதியால் அவளது வீட்டுப் படலையைத் தாண்டிப் போகையில் சபலம் ஏற்பட்டிருக்க அதைச் சமாளித்து இருக்கிறேன்.

ஆனால், இன்று...?

என்னுள்ளத்துக்கு அந்தத் தைரியம் ஏனோ அற்றுப் போனது? சைக்கிளில் இருந்து இறங்கி அவளின் வீட்டுக்குப் போய்விட்டு மீண்டும் பயணத்தைத் தொடர்வோம் என்றே என் மனமும் உள்ளூரக் குத்திக் குடைந்து கொண்டு இருக்கிறது.

நான் அவளது வீட்டுக்குப் போகாமல் விட்டது ஏதோ பெரிய மனத் தாங்கல் ஒன்றால் இல்லை. என்னிடம் அப்போது குடிகொண்டிருந்த மனக் கர்வத்தால் தான்.

அந்த நாள்களில் அவளோடு நான் சுத்தித் திரிந்ததைப் பார்த்து அவளுடைய தாய் கூட இருவரையும் சேர்த்து வைத்துக் கதைத்து இருக்கிறாள்.

கொளு கொளென்று பன்றிக் குட்டியைப்போல் கடைந்தெடுத்த சிலையாக வட்டுறிப்பான அவளது மேனியும், குறுகுறித்த வண்டைப் போன்ற கண்களும் கறுத்த விற்புருவங்களும் மூன்று விரல்களால் இடப்பட்ட திருநீற்றடையாளமும், குங்குமப் பொட்டும், சீவிப் பின்னப்பட்டிருக்கும் ஒற்றைப் பின்னலும், கட்டைக்கை மேற்சட்டையும், பாதங்களுக்குமேல் உரைஞ்சி கொண்டு நிற்கும் நீளப்பாவாடை என இத்தியாதி அலங்காரங்களோடு அவளைக் கண்டதும் அப்பொழுதே அவள் எனக்குப் பொருத்தமானவள் எனும் எண்ணம் என்னுள் தோன்றி, வேர்விட்டு வலுப்பெற்று இருந்தது.

தென்பகுதியிலுள்ள அவளது அண்ணனார் கடைக்கு வேலையாளாக என்னை அழைத்துச் சென்று ஒரு வாரமளவில் அவர்களின் வீட்டில் வைத்திருந்த பின்பே கடைக்கு அழைத்துச் சென்றனர்.

அந்த நாள்களில் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் சிலவற்றை என் இதயத்தில் ஏற்றிவிட்டிருந்தாள். பார்வதி எனும் அவளது அழகிய சுருக்கப் பெயரையும் சுருக்கி சிலர் பாறி என்றழைத்தனர்.

'பாறி' என்றும் ம்ற்றவர் அழைப்பதை மாற்றிச் செல்லமாக அதனிடைக் கிண்டலுமாய்ப் 'பாதி' என்றவளை நான் அழைப்பேன். அப்பொழுது அவள் பார்ப்பாளே ஒரு பார்வை அந்தப் பார்வைக்கு நிகர் அந்தப் பார்வையே தான்.

அவள் வெளியே எங்கே வெளிக்கிட்டாலும் நானும் அவளுக்குப் பின்னால் சென்று வருவேன்.

மாடுகளை அவிட்டு விட்டு மேச்சலுக்காக வயல் வெளிக்குக் கட்டப் போனாலும் வீதியோரம் இருக்கும் கடைக்குச் சாமான் வாங்கச் சென்றாலும் அயலிலுள்ள வீடுகளுக்கு ஏதும் அலுவலாக வெளிக்கிட்டாலும் அவளோடு கூடவே நானும் நிழலாகப் போய் வருவேன்.

வழியில் காண்போர் சிலர் எங்கள் இருவரையும் சேர்த்துக் கதைத்துப் பகிடி செய்வினம். எனக்கோ அப்பொழுது பெரிதாக வெட்கம் வந்து சூழ்ந்திடும்.

ஆண் பிள்ளையான எனக்கே அப்படி வெட்கம் வந்தால், அவளுக்கு வந்த வெட்கத்தை எப்படிச் செல்ல முடியும்...? மாங்கனி போன்ற இரு கன்னங்களும் சிவந்து கண்கள் மேற்சொருகி தலை சரிந்து இதழ்கள் நெளிந்து...

அப்பப்பா! அந்த அழகை என்னவென்று விபரிப்பது? இதற்கிடையில் கால்கள் இரண்டும் நிலத்தைத் தோண்டிக் கொண்டிருக்க, இரு கைகளும் சேர்ந்து அவளது நிலவு முகத்தைச் சடாரென்று மூடிக்கொண்டுவிடும்.

இத்தனை அழகையும் பார்த்த என் உள்ளத்தில் மட்டும் உடலெல்லாம் ஐஸ்கட்டி வைத்தாற் போல் விறைப்பு மெது மெதுவாய் ஏறிப்பின்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தணியும்.

மாடுகளை அவிட்டுக் கொண்டு வயல் வெளிக்குப் போகும் போதெல்லாம் அவள் கூடவே நிழலாகச் செல்லும் நான் பின்னல் போட்டுக் கட்டியிருக்கும் அழகிய அந்த ஒற்றைப் பின்னல் கூந்தலைப் பிடித்திழுப்பேன்.

"ஆ... ஐயோ... அம்மா..."

கோவித்து அவள் முனகுவதில் கூட எத்தனை அழகு! திரும்பத் திரும்ப நான் எத்தனையோ தடவைகள் அவளுக்கு அப்படிச் செய்வேன். அப்படிச் செய்வதில் எனக்கு அலுப்பு வந்தால், புதிதாக அவளுக்கு வேறு ஏதாவது செய்வதற்குக் கற்பனை செய்வேன்.

மனதில் புதிதாக ஏதும் தோன்றினால் சடாரென்று அதை உடனடியாகவே செய்து விடுவேன். ஒரு தடவை அப்படித் தான் அவளின் தலையில் பலமாகக் குட்டி விட்டேன்.

"ஐயோ... ஓ... ஓ... அம்மா..."

என்றவாறே மாடுகளைப் பிடித்திருந்த கயிற்றின் கையை விடாமல் ஒரு கையால் தலையை அழுத்திக் கொண்டே கீழே குந்தி விட்டாள். நடந்து சென்று கொண்டிருந்த மாடுகள் அவளை நிலத்தில் விழுத்தி கொஞ்ச இடத்துக்கு இழுத்துச் சென்ற பின்புதான் மாடுகள் கட்டப்பட்டிருந்த கயிற்றின் பிடியைத் தளர்த்தினாள்.

"அம்மா... ஐயோ... வலிக்குதே..."

முனகிக் கொண்டே எழுந்த அவளது முழங்காலைப் பார்க்கிறேன். உரசித் தோல் உரிந்து குருதி கசிந்து கொண்டு வந்தது. எனக்கு இதயம் படக்குப் படக்கென்று வேகமாக அடிக்கத் தொடங்கியது. அந்நிய இடத்தில் வந்து நின்று அந்நியப் பிள்ளை ஒன்றுக்கு இப்படிச் செய்து விட்டேனே! என்ற குற்ற உணர்வு என்னை வாட்டியது. என்னைத் தப்ப விடுவார்களா? இதுவரை நினைக்காத ஒன்றை இப்பொழுது நினைவுக்குக் கொண்டு வந்தேன்.

"இரும்... இரும்... அம்மாவிட்டைச் சொல்லிக்குடுக்கிறன் ஓ. இனி.. உம்மோட கதைக்க மாட்டன் ஓ, கோவம்..."

அவள் இவ்விதம் சொன்னதும் என்னுடைய தலையில் ஆயிரக்கணக்கான சம்மட்டிகளால் அறைந்தது போலிருந்தது.

"பார்வதி... இஞ்சே என்னைச் சொல்லிக் குடுக்காதேயும்... நானினி உமக்கு இப்புடிச் செய்யேல்லை..."

நானிப்புடி எத்தனையோ தடவைகள் கெஞ்சியும் சொல்லிக் கொடுக்கப் போவதாகவே பிடிவாதம் செய்தவள் வீட்டுக்குப்போய் அதைப்பற்றி எதுவுமே சொல்லாதது ஏன்?

அதனால் ஏற்பட்ட நோவைக்கூட வீட்டில் எவருமே அறியாமல் இருக்க அவள் எடுத்தாண்ட பிரயத்தனங்கள் எத்தனை? இத்தகு உறவுகள் சிலவற்றுடன் அவளுக்கும் எனக்கும் இடையில் நீண்ட பிரிவொன்று பின்பு வரப்போவதை உணர்த்துவதாக எனது தென்பகுதிப் பிரயாணம் இடம்பெற்றது.

அவளது அண்ணனார் கடைக்குச் சென்று ஒருவருடகாலம் தொழிலுக்கு நின்ற எனக்கும் அவளுக்கும் மத்தியில் தோன்றிய மனக்கசப்பு ஓய்வில் ஊருக்கு வந்தபோது அவர்கள் வீட்டுக்குப் போவதாகவும் ஓய்வை முடித்து திரும்பவும் அவரது கடைக்கே வேலைக்கு வருவதாகவும் கூறிவந்த நான் அந்த இரண்டு காரியங்களையும் கைவிட்டேன். அதன்பின் வேறு எத்தனையோ கடைகள், எத்தனையோ முயற்சிகள், ஓடிவிட்ட பன்னிரெண்டு ஆண்டுகளும் அவளது நினைவுகள் தோன்றிக் குறுக்கிட்டாலும் அவர்களைச் சந்திக்காமலே மறைந்து ஒதுங்கி வாழ்ந்தும் விட்டேன்.

- - - - - - - - - - - -

அன்று கண்ட அந்த அழகி இன்று எத்தனையோ மாற்றங்களுடன் பருவ எழில் பூத்துக் குலுங்க காட்சிதருவாள். இவ்வெண்ணம் மனதில் தோன்றியதும் அவளை இப்பொழுதே பார்க்கும் ஆவல் மேலெழுகிறது.

"பார்வதி எனும் அவளது அழகிய சுருக்கப் பெயரையும் சுருக்கி சிலர் பாறி என்றழைத்தனர். பாறி என்றும் மற்றவர் அழைப்பதை மாற்றி செல்லமாக அதனிடைக் கிண்டலுமாய்ப் பாதி என்றவளை நான் அழைப்பேன். அப்பொழுது அவள் பார்ப்பாளே ஒரு பார்வை அந்தப் பார்வைக்கு நிகர் அந்தப் பார்வையே தான்."

35

# காக்காக் கூட்டத்தைப் பாருங்க...

தொல்புரம், சி.கதிர்காமநாதன்

மாலையில் அந்தச் செய்தியை தொலைபேசி மூலம் அறிந்தேன். அதிர்ச்சியான விடயம். உடனேயே பெரிய விளக்கம் கேட்க மனம் தூண்டவில்லை.

'அந்தப் பெண் உடனேயே இறந்துவிட்டார். ஆனால் அது இயற்கை மரணம் அல்ல. அகால மரணம். அவராகத் தனது மரணத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். வீட்டில் தனியாக இருந்த பெண். உறவுகள் வெளியே இருந்தார்கள். திருமணமாக வில்லை முடிவு இப்படியாகிவிட்டது. உறவுகள் அவரைக் காப்பாற்றும் முயற்சியில் வைத்தியசாலை கொண்டு சென்றும் அது பயனில்லாமல் போய் விட்டது.

அகால மரணம் என்பதனால் அவரது மரணத்துக்கு வைத்தியசாலையில் சட்டதிட்ட விளக்கங்களுக்கு உறவுகள் பதில் சொல்லவேண்டியிருந்தது. இதனால் சற்றுத் தாமதங்கள் ஏற்பட்டன. இறந்தவரின் சகோதரர் கொழும்பிலிருந்து வந்து இந்த விடயங்களுக்குப் பதில் சொல்லிச் சகோதரியின் உடலைப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. நண்பர் ஒருவர் எனக்கு இது பற்றிய தகவல்களை வழங்கிக்கொண்டு இருந்தார்.

"மாமா எப்ப இறுதிக் கிரியைகள் செய்யப்போகினம்?"

"பொடியை ஆஸ்பத்திரியிலதான் வைச்சிருக்கினம். வீட்டுக்குக் கொண்டுபோகேல்ல. கோயில் திருவிழா நடக்குதெல்லே... செத்தவான்ர வீட்டுக்கு முன்னால தண்ணிப்பந்தலாம். கோயில் திருவிழா நேரத்தில 'துடக்கு' பிரச்சினையாம். அயலட்டைக்குச் சிக்கலாம். அதால பொடியை இப்ப கொண்டு வராம ஞாயிற்றுக்கிழமை காலமை வெள்ளனக் கொண்டு வரப்போகினமாம்"

"கனநேரம் வைச்சிருக்காம உடனேயே எடுத்துப் போட வேணும்"

தண்ணீர்ப்பந்தல் காரர்களும் அயலவர்களும் போர்க்கொடி தூக்கினர்.

முடிவு தெரிந்தாகி விட்டது.

• • •

ஞாயிற்றுக்கிழமை காலை. மகனையும் கூட்டிக்கொண்டு இறந்தவர் வீடு சென்றேன். வீதிகள் மூடியிருந்தபடியால், சற்றுச் சுற்றிச் சுற்றியே இறந்தவரின் வீட்டுக்குப் போக வேண்டியதாயிற்று.

காலை நேரம் 7.45. இறந்தவருக்கு அஞ்சலிசெலுத்தினேன். இறந்தவரின் சகோதரர் கதறி அழுதார். ஒரே ஒரு சகோதரி. நான் அவரை ஆறுதல் படுத்தினேன். வீட்டுக்கு முன்னால் பிரமாண்டமான தண்ணீர்ப்பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் அருகில் சிலர் குழுமி நின்று இறந்தவர் வீட்டைப் பார்த்துக் கதைத்துக் கொண்டு நின்றார்கள். அவர்களின் முகங்களில் வெறுப்பு. சின்னதாகவே இறுதிக் கிரியைக்கான பூசைகள் நடந்தன. அதைச் செய்தவர் அதைக் கற்றுக் கொண்ட நபராக இருந்தார். "அதைக் கொண்டு வா.... இதைக் கொண்டுவா..." என்று வேலைகள் சொல்லிக்கொண்டு இருந்தார்.

ஆண்களும் பெண்களுமாகச் சுமார் இருபத்தைந்து பேருக்கு உட்பட்டவர்கள் அங்கு குழுமி இருந்தார்கள். கோயிலுக்குப் போகவேண்டும் என்பதால், அநேகமானவர்கள் வரவில்லை. அந்தப் பாதையை அவர்கள் தவிர்க்கவும் அதுவே காரணம்.

நேரம் அதிகரிக்க அதிகரிக்கச் சிலர் பொறுமை இழந்தார்கள்.

"என்ன செய்து கொண்டிருக்கினம்...?"

"உடனே தூக்கிக் கொண்டுபோறதை விட்டிட்டு, கிரியைகள் செய்துகொண்டு நிற்கினம்"

"அவன் தன்ர காசுக்காண்டி நேரத்தை இழுத்துக்கொண்டு போறான். அகால மரணம் என்றால் உதுகள் செய்யத்தேவையில்லை"

அந்தப் பந்தலுக்குக் கீழ் நின்று புறுபுறுத்தவர்கள் தமிழ்ப் பக்தர்கள். கதைத்துக்கொண்டு நின்றார்கள். பாவம், அவர்களுக்கு இப்போதுள்ள சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக மாணவர்கள் செய்யும் போராட்டமோ, நீதவான் இளஞ்செழியனைக் குறிவைத்ததாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூடோ, கேப்பாப்பிலவு மக்கள் நடாத்தும் போராட்டமோ... தெரிந்திருக்கவில்லை. தெரிந்ததெல்லாம் 'துடக்கு'ப் பிரச்சினையே. இறந்தவருக்கு இந்தப் பிரச்சினைகள் தெரியவில்லை. இருந்தாலும் பிரச்சினைகளை உருவாக்குவதில் தமிழர்கள் கெட்டிக்காரர்கள் தானே.

• • •

வெறும் உயிரற்ற உடலுக்கு முன்னால் ஒரு குறும்படம்போல் கிரியைகள் நடந்துகொண்டிருக்க, ஐயர் என்று சொல்லப்பட்டவர் அழைப்பு விடுத்தார்.

"பந்தம் பிடிக்க வேண்டிய ஆக்கள் வாங்கோ..."

பந்தங்களைக் கொழுத்தியவர் அவற்றைக் கையில்பிடித்தபடி கொடுப்பதற்கு ஆக்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். கிரியை செய்தவர் அழைப்பு விடுத்தார். எனக்கும் உறவுகள் யாரென்று தெரியவில்லை. 'துடக்கு' என்ற கயிறு அவர்கள் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டது. இறந்தவரின் சகோதரர் இப்போதும் கதறி அழுது கொண்டு இருந்தார். அங்கு வந்திருந்த எனது சகோதரர் என்னைப் பார்த்தார். விளங்கிக் கொண்டேன். ஆளுக்கொரு தீப்பந்தங்களை வாங்கிக் கொண்டோம். அதன் பின் சற்று வயதுபோன பெண்கள் இருவர் வந்து பந்தங்களை வாங்கிக் கொண்டனர்.

நேரம் 8.15ஐத் தாண்டியாகிவிட்டது.

"என்ன செய்துகொண்டிருக்கினம், பொடியை எடுக்க மாட்டினம் போல கிடக்கு" தெருவில் நின்ற ஒருவர் பெரிதாகக் கேட்டார். இப்போது வாய்க்கரிசி போட அழைத்தார் ஐயர். இறந்தவரின் மச்சாள் மாத்திரம் அந்தக் காரியத்தைச் செய்தார். அடுத்து இறந்தவருக்குப் பூக்கள் போட்டுக்கும்பிடும் நிகழ்வு. அதையும் நாங்களே செய்யவேண்டியிருந்தது. பந்தங்களை அரைகுறையாகப் போட்டுவிட்டு அந்தக் காரியங்களையும் செய்தோம். மறுபடியும் ஒருவர் "நேரம் போகுது..." என அந்தரப்பட்டார்.

"ஐயா...! எதிர்பாராத விதமா இறப்பு வந்திட்டுது. சுடலைக்குக் கொண்டுதான் போப்போயினம் என்னத்துக்கு அந்தரப் படுகிறியள். எல்லாரும் இறக்கத்தான் போயினம் இண்டைக்கு ஒருநாள் கோயிலுக்குச் சுணங்கிப் போனால் என்ன? எத்தனை நாள் திருவிழா நடக்கப்போகுது? இது மனுசன்ர கடைசி நாள். பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த வீட்டில கொஞ்ச நேரமாவது இருந்திட்டுப் போகட்டுமே" என்று பொறுமை இழந்து கத்தவேண்டும் போலிருந்தது.

• • •

'துடக்கு' என்ற விசயத்தைத் தூக்கிப் பிடித்து ஏனிப்படி அடாவடியாக நடக்கவேணும்? 'துடக்கு' என்ற சொல்லுக்குப் பின்னால் என்ன ஒளிந்திருக்கிறது. அரசாங்கம் வைத்திருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போல நாமும் சமயக்கோட்பாட்டை மாற்றி அமைத்துக்கொண்டோமா? ஒரு இறப்பு வீட்டில் கோயில் திருவிழா சூழ்நிலையில் வேண்டா வெறுப்பாக நாம் நிற்கும் நிலை ஏன் ஏற்பட்டது?


இதே இடத்தில் அயலில் வெற்று மதத்தவர்கள் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்கள்? 'துடக்கு' ஆயுதத்தைத் தூக்கியிருப்பார்களா? கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஆயிரக்கணக்குக்கும் மேலான இந்துக்கள் மதம் மாறிவிட்டனர் எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. தாய்ப்பாலோடு தொடங்கிய மதம் சார்ந்து ஒருவர் வளர்ந்த பின்னர், வேறு மதத்துக்கு எந்தவிதமான குற்ற உணர்வுகளும் இன்றி மாறிவிடுவதென்பது அவ்வளவு இலேசான காரியமா?

இறுதி ஊர்வலம் புறப்பட்டுவிட்டது. செம்மணி மயானத்தில் இறந்தவர் உடல் கிடத்தப்பட்டு சகோதரனால் கொள்ளி வைக்கப்படுகிறது. அவர் தரையில் விழுந்து கதறி அழுகிறார். தீ நாக்குகள் வேகம் கொள்ளத் தொடங்குகின்றன.

சகோதரரிடமிருந்து விடை பெற்றோம். நானும் மகனும் வெளியே வந்து புறப்படத் தயாராக நின்றபோது அந்தக் காட்சியினைப் பார்த்தேன்.

தரையில் இறந்து கிடந்த காகத்தைச் சுற்றிச் சில காகங்கள் கத்த. மெல்ல மெல்லக் காகங்களின் வரவு அதிகரித்தது. தம் இனத்தவன் இறந்துவிட்டான் என்ற சக தோழனின் குரலைக் கேட்டு மற்றக் காகங்கள் விரைந்து வந்துகொண்டிருந்தன. வந்த காகங்களின் எண்ணிக்கையை அளவி
முடியவில்லை. காகங்களுக்குத் 'துடக்கு' விடயம் தெரியாது. நா[illegible] புறப்பட்டு விட்டோம்.

அந்தப் பெண் உடனேயே இறந்துவிட்டார். ஆனால் அது இயற்கை மரணம் அல்ல. அகால மரணம். அவராகத் தனது மரணத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்



வீட்டில் தனியாக இருந்த பெண். உறவுகள் வெளியே இருந்தார்கள். திருமணமாக வில்லை முடிவு இப்படியாகிவிட்டது

ஐயா...! எதிர்பாராத விதமா இறப்பு வந்திட்டுது. சுடலைக்குக் கொண்டுதான் போப்போயினம் என்னத்துக்கு அந்தரப் படுகிறியள். எல்லாரும் இறக்கத்தான் போயினம் இண்டைக்கு ஒருநாள்.

# 'காசினி'யின் கடைசி மூச்சு...!



■ தவபாலன் திருநிலவன்

'காசினி' என்பது ஒரு விண்வெளி ஆய்வுக் கலம். இது 2004ஆம் ஆண்டிலிருந்து சனியைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது. இந்த ஆய்வுக் கலம் சனிக்கோளின் உபகோள்களில் ஒன்றான 'என்செலாடஸ்' இல் நீர் இருக்கிறதா...? என்பதை உறுதி செய்வதையும், சனிக்கோளுக்குப் புதிய உபகோள்கள் எவையாவது இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதையுமே இலக்குகளாகக் கொண்டு விண்வெளிக்கு ஏவப்பட்டது. தற்போது எரிபொருள் குறைவால் தற்கொலை வீழ்ச்சி ஒன்றைச் செய்யவிருக்கும் இந்த ஆய்வுக்கலம் சனிக்கோளிலேயே விழ இருக்கிறது. ஆகவே விழும்போதுகூட சனிக்கோளின் உள்ளகம் தொடர்பான சில தகவல்களையும் இது வழங்கும் என்று நம்பப்படுகிறது. இந்த ஆய்வுக் கலத்துக்கான திட்டத்தை நாசா, ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம் மற்றும் இத்தாலி விண்வெளி ஆய்வு நிறுவனம் என்பவை இணைந்தே நடத்தி இருந்தன.

**காசினியின் வரலாறு**

காசினி ஆய்வுக்கலம் சனியை ஆராய்வதற்காகவே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜியோவன்னி காசினி என்பவரது பெயரே இதற்குச் சூட்டப்பட்டது. காரணம், இவரே முதன் முதலாக சனி நான்கு உபகோள்களைக் கொண்டிருக்கிறது என்பதை அவதானித்தவர். அவை லபேடஸ்(1671), ரீயா(1672), ரெதீஸ்(1684) மற்றும் டையோன் (1684) என்பவையே.

காசினிக்கு முன்னதாகவும் ஒரு சில விண்கலங்கள் சனியை ஆராய முயற்சித்திருக்கின்றன. பயனியர் 11(1979), வொயேயர் 1(1980) மற்றும் வொயேயர் 2(1981) என்பவையே அவை. ஆனால், இவற்றால் பெரிதாக எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. சனிக்கோள் கொண்டுள்ள அடர்த்தியான வளிமண்டலம் காரணமாக மாறுபட்ட அதன் அலைநீள வேறுபாட்டால் இவை சனிக்கோளைச் சுற்றியிருக்கின்ற ஒரு சிலேவளையங்களைத் தவிர எதையுமே கண்டுபிடிக்கவில்லை.

இவற்றை மையமாக வைத்தே 1993ஆம் ஆண்டில் 'காசினி'யை உருவாக்கும் திட்டம் ஆரம்பமானது. இதற்கான செலவாக 3.3 பில்லியன் அமேரிக்க டொலர் கணக்கிடப்பட்டது (2017ஆம் ஆண்டு மதிப்புப்படி 5பில்லியன் அமேரிக்க டொலர்கள்). ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் நிதி உதவியாலும் நாசாவின் வேறு சில ஆய்வுகளுக்குரிய தொழில்நுட்பங்களின் இணைப்பாலும் காசினி உருவாக்கப்பட்டது.


**காசினி பூமிக்குப் பாதகமானது?**

காசினி ஏவப்படுவதற்கு முதல் கூடவே ஒரு பிரச்சினையும் தலைதூக்கியது. சில சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழுக்களால் காசினி பூமியினூடு பயணம் செய்யும்போது 'ரேடியோஸ்ரோப்' வெப்ப மின் உருவாக்கியில் இருந்து உருவாகும் அணுக்கதிர் அலைகள் பூமியைப் பாதிக்கும் எனக் கூறி காசினி ஏவப்படுவதற்கு எதிராக ஹவாய் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அது நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

பொதுவாகவே நாசாவினுடைய அனைத்துத் திட்டங்களிலும் இந்தத் தொழில்நுட்பமே பாவிக்கப்படுகின்றது. நாசா இது தொடர்பாக நீதிமன்றத்துக்கு அளித்த விளக்கத்தில், மில்லியனில் ஒரு வீதமே இப்படியான பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என்று கூறியிருந்தது. அதன் பின்னர் நீதிமன்றம் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்து காசினியை ஏவுவதற்கு அனுமதி அளித்தது.

**காசினியின் ஏவலும் பயணமும்**

காசினி ஆய்வுக்கலம் 5 ஆயிரத்து 700 கிலோகிராம் எடையுடன் 1997ஆம் ஆண்டு ஒக்டோபர் 15ஆம் திகதி பூமியில் இருந்து புறப்பட்டது. ஆனால், அது நேரடியாகச் சனியை நோக்கியதாகத் தனது பயணத்தை அமைக்கவில்லை. பூமியில் இருந்து புறப்பட்ட காசினி இரண்டுமுறை புதன் கோளையும் அதாவது ஏப்ரல் 1998 மற்றும் ஜூன் 1999 காலப்பகுதியில் புதன் கோளூடாகவும் ஒகஸ்ட் 1999ஆம் ஆண்டு பூமியின் ஊடும் டிசெம்பர் 2000ஆம் ஆண்டு வியாழன் ஊடாகவும் பயணம் செய்து ஜூலை முதலாம் திகதி 2004ஆம் ஆண்டு சனியின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்தது. காரணம், அதன் பயணப் பாதையில் காணப்படுகின்ற சிக்கலான சுற்றுப்பாதை இயக்கவியலே.



காசினியின் மிக முக்கிய இலக்காக இருந்தது சனிக்கோள் கொண்டிருக்கும் உபகோள்களைக் கண்டுபிடிப்பதும், சனிக்கோளைச் சுற்றியுள்ள வளையத்துக்கான காரணம், வளையத்தில் உள்ள நிறங்கள் பற்றிய ஆய்வு, அத்துடன் சனிக்கோளின் உபகோள்கள் தொடர்பான ஆராய்ச்சிகளே ஆகும்.

காசினியில் இருந்து மிகத்தெளிவான தகவல்கள் காசினியில் பொருத்தப்பட்டிருந்த குய்கென்ஸ் என்ற தரையிறங்கு ஆய்வுக்கலமானது சனியின் மிகப்பெரிய உபகோளான ரைட்டனில் இறங்கியதும் கிடைக்கப்பெற்றது. கிறிஸ்டியன் குய்க்கென் எனப்படும் டச்சு விஞ்ஞானி ஒருவருடைய பெயரையே இந்தத் தரையிறங்கு ஆய்வு கலத்துக்கும் சூட்டியிருந்தனர். இவர் 1654ஆம் ஆண்டு தொலைக்காட்டி ஊடாகச் சனியை அவதானித்து ஆய்வுக்குறிப்புக்களை விட்டுச்சென்றவர். இந்தத் தரையிறங்கு ஆய்வுகலம் ரைட்டனில் தை மாதம் 15ஆம் திகதி 2005ஆம் ஆண்டு வெற்றிகரமாகத் தரையிறங்கியது. அது தரையிறங்கி இரண்டரை மணித்தியாலங்களுக்குள் பூமிக்குத் தகவல் கிடைத்தது.

தொடர்ந்து ஒரு மணித்தியாலம் 12 நிமிடங்களில் ரைட்டனுடைய நிலப்பரப்பில் காண்பவை தொடர்பான தகவல்களை அனுப்ப ஆரம்பித்தது.

**அதிசயிக்க வைக்கும் உபகோள்கள்**

சனிக்கோளில் மிகக்குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவிடயம் அதன் உபகோள்களுடைய எண்ணிக்கை. அதன் வளையத்தை உருவாக்கி இருக்கும் ரில்லியன் கணக்கான கற்களைத் தவிர்த்து, சனிக்கோள் 62 உபகோள்களைக் கொண்டிருப்பதாக 2012 ஆண்டு செப்டம்பரில் கண்டறியப்பட்டது. அதில் 53 உபகோள்களுக்குப் பெயரிட்டுத் தன்னுடைய இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது நாசா.

சொல்லப்போனல் மேதோன், பல்லேன் எனும் இரண்டு உபகோள்களை காசினி சனிக்கோளின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்தவுடனேயே கண்டுபிடித்துவிட்டது. அதன் பின் இறுதியாக 2004ஆம் ஆண்டு பொலிடியூசஸ் எனும் உபகோளைக் கண்டுபிடித்தது. இவைதவிர என்செலாடஸ் எனும் உறைந்திருக்கும் உபகோளில் நீர் இருப்பதற்கான ஆதாரங்கள் மற்றும் ரைட்டனில் ஓடும் மீதேன் ஆறு சம்பந்தமான ஆதரங்களையும் சேகரித்திருந்தது.

**இலக்கு நீடிப்பும் முடிவும்**


காசினி உண்மையில் 2008ஆம் ஆண்டு வரையில் சனியை அண்மித்திருந்து ஆராய்ச்சில் ஈடுபடுவதற்கே திட்டமிடப்பட்டது. ஆனால் அதற்கான காலப்பகுதி நீடிக்கப்பட்டு இன்று வரைக்கும் காசினி சனிக்கோளின் சுற்றுப்பாதை யிலேயே இருக்கிறது. அதவாது சனிக்கோள் சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம் 29பூமி வருடங்கள். ஆகவே இப்போது காசினி கிட்டத்தட்ட சனிக்கோளினது அரைவருடத்துக்குரிய காலநிலையைக் கண்காணித்து விட்டது.

2016ஆம் ஆண்டு காசினி தனது இறுதிக்கட்டமாக சனிக்கோளின் வளையங்களை நெருங்கி இதுசார்ந்த ஒளிப்படங்களை வழங்கியது. இதன் பின்னர் ஒரு செயற்றிட்டம் நிர்ணயிக்கப்பட்டது. அதாவது செப்டம்பர் 15ஆம் திகதி 2017ஆம் ஆண்டு காசினியை சனிக் கிரகத்தில் வீழ்த்துவது. இதில் ஒரு வேளை என்கிலாடஸ் போன்ற உயிர் வாழச் சாத்தியமுள்ள உபகோள்கள் மீது காசினி மோதினால் பூமியில் இருந்த நுண்ணுயிர்கள் அந்த உபகோள்கள் மீது பரம்பலடைவதற்கு

> காசினி ஆய்வுக்கலம் சனியை ஆராய்வதற்காகவே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜயோவன்னி காசினி என்பவரது பெயரே இதற்குச் சூட்டப்பட்டது. காரணம், இவரே முதன் முதலாக சனிக்கோள் நான்கு உபகோள்களைக் கொண்டிருக்கிறது என்பதை அவதானித்தவர். அவை லபேடஸ் (1671), ரீயா(1672), ரெதீஸ் (1684) மற்றும் டையோன் (1684) என்பவை.

வாய்ப்புக்கள் கிடைக்கும். அதற்கான சாத்தியம் மிகச்சிறிய அளவே காணப்பட்டது. உச்சக் கட்டமாக அதாவது சினிமாக்களில் அமையும் 'கிளைமக்ஸ்' ஆகா ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி 2017ஆம் ஆண்டு சனிக்கோளின் வளையத்துக்கும் கோளுக்கும் இடையில் காசினி சென்றிருக்கின்றது. எதிர்வரும் செப்டம்பர் 15ஆம் திகதி காசினி சனிக்கிரகத்தில் குதித்து அல்லது மோதி ஒரு தற் கொலைக் காரியத்தைச் செய்யவிருக்கிறது.

இதற்குப் பின்னரே காசினி, எப்படியாக எம்முடனான தனது தொடர்பை வைத்துக்கொள்ளும் என்பதை அறிமுடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள். அது அந்தச் சம்பவத்துக்குப்பின்னர் காசினியில் பொருத்தப்பட்டுள்ள இயந்திர, தொழில்நுட்பங்களின் பாதிப்பு மற்றும் செயற்றிறனைப் பொறுத்தது. உலகம் சனிக்கோளை நெருங்கிவிட்டது.



### தேவையான பொருட்கள்

அரிசிக் குறுனால் (அரைச் சுண்டு)
அளவான தாச்சி
பத்துச் செவ்வரத்தம் பூக்கள்.
நீர் (தேவையான அளவு)

### செய்முறை -

அரிசிக் குறுணல்களைத் தாச்சிக்குள் போட்டு கருகும் வரைக்கும் வறுக்கவும். அவை முழுவதுமாகக் கருகியதும் செவ்வரத்தம் பூக்களையும் சேர்த்து வறுக்கவும். களித்தன்மையுடன் இருப்பதற்கு நீரைச் சேர்த்துக் கொள்ளவும். கரும் பாணியாக வந்ததும் அதைத் தூய்மையான துணியிலிட்டுப் பிழிந்து சிரட்டைக்குள் ஊற்றி உலர விடவும்.

அல்லிதேவி அமரசிங்கம்

# ‘பூச்சூடவா... முகப் ‘பூ’ச் சூ’டவா...



பழங்காலத்தில், குழந்தைப்பேறு நடந்தேறியதும் அந்த வீட்டில் நடக்கின்ற முக்கிய வேலை இது. சிரட்டைப்பொட்டு என்று அழைப்பார்கள். பிறந்த குழந்தை யின் சருமத்துக்குத் தீங்கிழைக்காத இயற்கைத் தயாரிப்பு. குழந்தையைக் குளிப்பாட்டிய பின்னர் தினமும் அதன் நெற்றியில் பெரியதொரு நிலாவாகச் சிரட்டைப்பொட்டு ஜொலிக்கும். பார்த்ததும் பார்வையை முதலில் ஈர்த்துக் கொள்வது நெற்றியிலிருக்கும் அந்தப் பெரும், கரும் நிலாவாகவே இருக்கும். “கண்ணூறு, நாவுறு படாது” என்று அதற்கு அவர்கள் விளக்கமும் சொல்லிக்கொள்வார்கள். ஆனால், இன்றைக்கோ குழந்தை கிடைக்கும் வீடுகளுக்கு விரைந்து வருகின்றன ‘பேபி செற்’கள். அனைத்தும் இயந்திரங்கள் தயாரித்த செயற்கைப் பொருட்கள். இதைப்போலவே நமது முன்னோர்கள் பயன்படுத்தியிருந்த பழமைகள் பலவும் இன்றைக்கு மறைந்து விட்டன. இரசாயனங்கள் நிறைந்த காலத்துக்குள் வந்துவிட்டோம் நாம். இந்த நிலையில்தான் குழந்தைகளுக்கெனத் தயாரிக்கப்படுகின்ற முகப்பூச்சால் (பவுடர்) புற்றுநோய் ஏற்படுகிறது எனும் செய்தி கிட்டியிருக்கிறது. இதனால் அந்த அமெரிக்கப் பவுடர் நிறுவனத்துக்கு நீதிமன்றம் தண்டமும் விதித்துள்ளது. கொஞ்ச நெஞ்சமல்ல 417 மில்லியன் அமெரிக்க டொலர்கள்...!

— — — — —

இயற்கையோடு மனிதன் ஒன்றித்திருப்பதே என்றைக்கும் ஆரோக்கியமானது. இதற்கு நவீன மனிதர்களின் தயாரிப்பில் உருவாகும் செயற்கைப் பொருள்கள் ஏற்படுத்தும் பக்கவிளைவுகள் நல்ல உதாரணமாகின்றன. இதை அண்மைய இந்தச் சம்பவம் நேரடியாகவே நமக்கு உணர்த்தியிருக்கிறது. அமெரிக்காவில் முகப்பூச்சுக்கள்(பவுடர்) சவர்க்காரங்கள், குழந்தைகளுக்கான பல பொருள்கள் என்று தனது உற்பத்திகளைப் பெருக்கி வருமானத்தில் உச்சங்கண்டுள்ள ‘ஜோன்சன் அன்ட் ஜோன்சன்’ நிறுவனமானது தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கமைய மேற்குறித்த பெரும்தொகை இழப்பீட்டைச் செலுத்தவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. அதாவது இந்த நிறுவனத்தின் முகப்பூச்சை நாற்பது வருடங்களாகத் தொடர்ந்து பயன்படுத்திவந்த பெண் ஒருவருக்குக் கர்ப்பப்பைப் புற்றுநோய் ஏற்பட்டிருக்கின்றது. தனக்குப் புற்றுநோய் ஏற்பட்டதற்கு குறித்த நிறுவனத்தின் முகப்பூச்சின் பக்கவிளைவே காரணம் என்று 62வயதுடைய அந்தப் பெண்மணி அந்த நிறுவனத்தின்மீது சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கு அமைய நீதிமன்று, ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நிறுவனத்துக்கு மேற்படித் தொகையை தண்டமாக விதித்துள்ளது.
இது குறித்த நிறுவனத்தின் செயற்கைப் பொருள் ஒன்றால் இன்றைக்கு வெளிவந்திருக்கும் பக்கவிளைவின் ஒரு பகுதி. இத்தகைய பல்லாயிரக்கணக்கான செயற்கைப் பொருள்கள் இன்னமும் பாவனையில் இருக்கின்றன. அவை அனைத்துமே ஏதாவதொரு பக்கவிளைவுகளை என்றைக்குமே கையில் தயாராகவே வைத்திருக்கின்றன. குழந்தைகளுக்கு என்று சிறப்பாகவும் மென்மையாகவும் பக்குவமாகவும் தயாரிக்கப்படும் இவ்வாறான பொருள்களே இவ்வளவு பாதகமுடையனவையாக இருக்கின்றன என்றால், எம்மைச் சுற்றி உலாவும் ஏனைய செயற்கைப் பொருட்களின் பாதகங்களை எப்படி அளவிடப்போகிறீர்கள். இந்தத் தளத்தில் நின்றுகொண்டே, எம்மில் பல பெண்களையும் ஆட்கொண்டிருக்கும் அழகுக் கலை, அழகுப்பூச்சுக்களின் பக்க விளைவுகள் எப்படியிருக்கும் என்பதையும் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்களேன்.

— — — — —

அன்றைய திருமண நிகழ்வுக்குத்தோழியுடன் செல்வதாக ஒப்பந்தம். அதிகாலை ஆறுமணிக்கே என்னை அழைத்துச் செல்வதற்கு வீட்டுக்கு வந்துவிட்டாள் தோழி. அவள் தான் என் தோழி என்பதை உறுதிப்படுத்துவதற்கு மாத்திரம் எனக்கு அரை மணி நேரம் வரையில் தேவைப்பட்டது. அவ்வளவு பூச்சுப் படைகளுக்குப் பின்னால் அவள் ஒளிந்திருந்தாள். கூந்தலில் எந்நேரமும் மல்லிகையைச் சூடிக்கொள்ளும் பழக்கமுடைய எனக்கு அந்தத் திருமணத்துக்கு வந்திருந்த அனைத்துப் பெண்களும் விசித்திர மானவர்களாகவே பட்டனர். அவர்களின் சுயரூபங்களைப் பார்க்கவேண்டுமானால், வேகமாகச் சீறிப்பாயும் குழாய் நீரை அவர்கள் மீது பீய்ச்சியடித்தாலே சாத்தியமாகும். ஒவ்வொருவருடனும் கதைக்கும்போது. “நீங்கள் யார்?” என்று கேட்கவும் தோன்றியது. இந்தச் செய்தியுடனாவது குழந்தைகளுக்கு முதல்படியாக என் சக தோழிகள் தம்மைச் சுதாகரித்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.
இயற்கையாகவே பெண்கள் அழகானவர்கள் என்பதை எம்மில் எத்தனைபேர் புரிந்து வைத்திருக்கிறார்கள். இயற்கை தந்த அழகை மெருகூட்டவே அது பல பொருள்களையும் படைத்திருக்கின்றது. பெண்களின் அழகை மேலும் மேம்படுத்தவே அன்பும், பண்பும், ஆதரவும், சிரிப்பும், வெட்கமும், மன உறுதியும், கனிவும், கட்டுப்பாடும் இயல்பாகவே அவர்களிடம் உள்ளன. இயற்கையான இவ்வளவையும் விட்டுவிட்டு பவுடர், முகப்பூச்சுக்களுக்குள் முகத்தை மறைத்து வெடு சுடு பேர் வழிகளாகப் பெண்கள் நடமாடுவது எத்துணை பொருத்தமானது...?

# நூல் அறிமுகம்

தொகுப்பு அயக்கிரீவன்

**நூல் : வழி தவறிப்போன ஓர் இளைஞர் தலைமுறை**
**ஆசிரியர்கள் : பேராசிரியர் தயா சோமசுந்தரம்**
**நா.நவராஜ்**
**வெளியீடு : ஆறுதல் வெளியீட்டுப் பிரிவு**
**விலை : 380/=**


வழி தவறிப்போன ஓர் இளைஞர் தலைமுறை

“இளைஞர்கள் பயன்படாதவர்கள் அல்லர், பயன்படுத்தப்படாதவர்கள்” என்ற அப்துல்கலாம் அவர்களின் கருத்து இக்காலத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். ‘வழி தவறிப்போன ஓர் இளைஞர் தலைமுறை’ என்ற இந்த அரிய நூல், இன்றைய இளைஞர்களின் நடத்தைக் கோலங்களால் வேதனையுறும் சமூகத்தின் கண்களைத் திறக்க வைக்கும் நோக்கத்தோடு தமிழில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.
இந்நூல் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற ஆனந்தராஜன் நினைவு நாள் பேருரையில் முன்வைக்கப்பட்ட பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் ஆங்கில உரையைத் தழுவிய ஆக்கத்தை உள்ளடக்கியதாகும்.
ஒவ்வொருவரின் வாழ்க்கைப் பயணமும் அவர் வாழுகின்ற சூழலினதும் சமூகத்தினதும் அசைவுகளோடு இயைந்தோ, இணைந்தோ செல்வது இயல்பானதாகும். எமது இளைஞர்கள் தான்தோன்றித்தனமாகச் செயற்படகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள அனுபவமும் வாழ்க்கை முறைமையும் வளர்ந்தோர் ஒவ்வொருவரதும் சிந்தனைகளோடும் செயற்பாடுகளோடும் பிணைந்தே இயக்கமுறுகின்றன. இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு மனிதத்துக்கும் உரியது.
(வெளியீட்டுரையிலிருந்து)

---

**நூல் :**
**ஆதவன் (நூற்றாண்டு மலர்- 2017)**
**வெளியீடு - ஆதவன் நூற்றாண்டு மலர்க் குழு, அளவெட்டி**




ஈழத்து இலக்கிய உலகிலே ‘கலைச்செல்வி’க்கு மதிப்புமிக்க ஓர் இடம் உண்டு. எழுத்தாளர்கள், வாசகர்கள், இலக்கிய விமர்சகர்கள் போன்றவர்களின் எதிர்பார்ப்பிற்கும் ஏகோபித்த பாராட்டுக்கும் இலக்காகும் வகையில் ‘கலைச்செல்வி’யை வெளியிட முடிந்ததற்கு, பொன்னம்பல வாத்தியார் எனக்களித்த ஊக்கமும் உதவியும் பெருமளவிற் காரணமாக இருந்தன என்பதை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன். சி.பொன்னம்பலம், ‘ஆதவன்’, ஜோதி வாத்தியார் ஆகிய பெயர்களில் எழுதியவற்றைவிட, பெயர் குறிப்பிடாமல் அவர் எழுதிய குறிப்புக்களும், ஆக்கங்களும் அதிக அளவில் ‘கலைச் செல்வி’யில் இடம்பெற்றன.
தழிழ் மக்கள் வந்தேறு குடிகளல்லர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்த நாட்டில் வாழ்ந்து வருபவர்கள் என்ற பேருண்மையைக் கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் உறுதியாக்குகின்றன. வரலாற்றாசிரியர்களினதும், அகழ்வாராய்ச்சியாளர்களினதும் கவனமும் அக்கறையும் கந்தரோடையின்பால் திரும்புவதற்கு, பொன்னம்பல வாத்தியார் சேகரித்துச் சேமித்து வைத்திருந்த பழங்கால நாணயங்களும் தொல்பொருட் சின்னங்களுமே தூண்டுகோலாக இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ‘நான், என் மனைவி, என் பிள்ளைகள்’ என்ற வட்டத்துக்குள் மட்டும் நிற்காமல், எனது பாடசாலை, எனது கிராமம், எனது மக்கள், எனது நாடு எனத் தன் ஆர்வத்தையும் அக்கறையையும் விரிவாக்கி, அவற்றின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் பல்வேறு நிலைகளில் நின்று தன் பங்களிப்பை வழங்கிய பொன்னம்பல வாத்தியார், பன்னூற்றுக்கணக்கான மாணவர்களின் நெஞ்சிற் பசுமையாக இருப்பார். கலா ரசிகர்களின் நினைவில் அழியா ஓவியமாக ஒளி விடுவார். ‘கந்தரோடை’யிலும் ‘கலைச்செல்வி’யிலும் கௌரவமான கணிப்பிற்கு உட்பட்டுக்கொண்டே இருப்பார்.
(சி.சரவணபவன் சிற்பி)



# பனைகள் பழுக்க ஆரம்பித்துவிட்டன...!

■ ஜெ.காயா

'தொப்... தொப்...' சப்தங்கள் ஜாமத்தை நிறைக்கின்றன. ஒருமித்து இரசிக்கத் தெரிந்தால், ஏக காலத்தில் இவை இதமான இசையாய்த் தெரியும்.
சாமச் சேவல்களின் செட்டையடிப்புக்களைப் பின்தொடரும் கூவல்களைப்போலசர சரத்த ஓலைச்சத்தங்களை அவைபின்தொடர்கின்றன. இயற்கை முதிர்ந்து, முளைகொள்ளத் தயாராவதன் படிநிலை ஒன்று ஆரம்பமாயிற்று.
கறுத்து, நெடித்து, உயர்ந்த பனைகளிலிருந்து ஓசையெழுப்பிவாறு வீழ்ந்துகொண்டிருக்கின்றன பனம் பழங்கள். அந்த ஒலி எழும் திசைகளைக் குறிவைத்து நகர்கின்றன கால்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பரந்து கேட்கும் சப்தங்களுக்குச் சமாந்தரமாக அவை தொடர்ந்தும் பயணிக்கின்றன. பசி தீர்க்கும் பருவகாலம் ஆரம்பமாயிற்று. மாந்தைகள் அனைத்தும் பசியாற்றப் புறப்பட்டுவிட்டன. மனிதர்களும் இடையிடையே ஒன்றிரண்டைத் தேடிக் கொள்கின்றனர். யாழ்ப்பாணத்துப் பனைகள் பழுக்க ஆரம்பித்துவிட்டன. பனம் பழங்களின் வாசனை யாழ்ப்பாணக் கிராமங்கள் எங்கும் காற்றோடு கலந்தாகிவிட்டது...

**பழங்காலத்தில் பனம் பழப் பருவம்**

அன்று வீடுகள் தவறாமல் மாடுகள் இருக்கும். வளர்ப்பது, பால், தயிர், மோர் என்று உணவெடுப்பது, மலசலங்களைப் பசளைக்குப் பக்குவப்படுத்துவது, போக்குவரத்து, செல்வச் செழிப்பு என்று நீண்டதொரு பட்டியல்போட்டு அவை பராமரிக்கப்படும். மாடுகள் மாத்திரமன்றி ஆடு, கோழி உள்ளிட்ட அனைத்து வளர்ப்புக்களும் வீடுகளை நிரப்பியி ருக்கும். அவை தரும் ஆரோக்கிய உணவுகளைப்பெற்று உடலைத் திடப்படுத்த அனைத்து வீடுகளிலும் கண்டிப்பாக இவற்றில் ஒன்றாவது நின்றிருக்கும். விலங்குகள் மாத்திரமன்றி இயற்கையும் அப்படித்தான். பனைகளும் பசளி வகைகளும் தரும் உணவுகள் அன்றைய எம்மவர் உடலைத் திடகாத்திரமாக்கின. பனம் பழக் களி பிழிந்து, தாச்சியிலிட்டுக் காய்ச்சி, பனம் ஓலைப் பாயில் ஊற்றி, வெயிலில் உலர்த்திப் பனாட்டாக்கினர். ஒரு தட்டு, இரண்டு தட்டு, மூன்று தட்டு என்பதாக நாளும் பொழுதும் களிகாய்ச்சி ஊற்றி அதைத் தடிப்பாக்கினர். பிற்காலங்களில் பழங்கஞ்சி, பாற்கஞ்சியுடன் கடித்துக்கொண்டனர். தனி ஒரு உணவாகவும்கூட அவை ஆகின. பனங்காய்ப் பணியாரமும் அவர்களுக்கு உணவுதான். மனிதர்களுக்கு மாத்திரமன்றி கால்நடைகளுக்கும் பசியாற்றக்கூடிய அளவுக்கு நிறைந்திருந்தது இயற்கை. அது பனை வடிவத்தில் நம்மவர்க்கே கிடைத்த பெருங்கொடை...

**மனிதர்களும் மந்தைகளும்**

பனம் பழத்தைப் பக்குவப்படுத்திப் பதப்படுத்தி உண்பது அன்றைய மனிதர்க்குக் கைவந்த கலையாயிற்று. அவர்களைப் போலல்லாமல் உடனடியாய் அவற்றை உண்டு பசியாறுவது எப்போதும் கால்நடைகளுக்கே உரியது. இக்காலத்தில் உற்சாகமாய் உணவு தேடும் படலமும் மாந்தைகளுடையதாயிற்று. உறக்கத்தைத் தொலைத்து பனையடிவாரங்களில் காத்துக் கிடந்து பசியாற்றும் இரவுகள் அவை வசமாயின. இரண்டு அல்லது மூன்று விதைகள்பூண்டு இறுகிப்போயிருக்கும் *பனம் பழத்தைச் சுவைத்து, பிற்பாடு மனிதர்கள் பாத்தியிலிட்டுக்* கிழங்கு விளைவித்துக் கொள்ள விதைகளைத் தனித்தனியாக்கிக் கொடுக்கும் திறன் இன்றைக்கும் மாந்தைகளிடம் இருக்கின்றது. ஆனால் அவற்றின் எஜமானர்களோ இன்றைக்குக் குறைந்தாகி விட்டனர். 'தொப்'பென்ற சத்தம் கேட்கின்றது. விரைந்து அந்தப் பனை அடியை அடைந்து பழம் சுவைக்கும் பக்குவம் அவற்றுக்கு இப்போதும் இருக்கிறது. மாடுகளைக் கைவிட்டதைப்போலவே இன்றைய மனிதர்களில் ஏராளமானோர் இந்தப் பனம் பழங்களையும் கைவிட்டுவிட்டனர். கைவிடப்பட்ட இரண்டையும் காலம் இணைக்கின்றது. ■

# பண்டாரவன்னியன்

10

## குருவி நாச்சியாரின் சாபமிது



கண்களில் வற்றிய நீரும்
கனவுகள் கரைந்த வாழ்வும்
நெஞ்சினில் எரிந்த தீயால்
நினைவுகள் உறைந்த முகமும்
வாள் பிடித்தே
வலிமையுற்ற கரத்தால்
பேய் போல் முகமறைந்து
அழுகின்ற வாழ்வும்
ஐயகோ
யார் கொடுத்துப் போனார்
இச் சாபம்...?
கண்ணிரில்
கரைந்துருகும் நாச்சியிவள்
ஆற்றினில் அலைகின்ற
சருகாகிப் போனாள் காண்
கோப விழியும்
கோமகள் மனமும்
அள்ளி வீசிய
சாபங்கள் அனைத்துக்கும்
காற்றும்

ஆற்று நீரும்
ஏற்றிட்ட சாட்சி என்றோ
வனத்திலே
இருக்கும் மரமெல்லாம்
தன் தலை முட்டி
ஏங்கி ஏங்கி
அழுது தீர்த்தாள்.

"காதல் கொண்டு
கனவுகள் வளர்த்து
கவிதை நூறு
பரிசாய்த் தந்து
இந்த
வாழ்தல் போதும்,
என்று மகிழ்ந்த
வாழ்க்கைப் பட்டத்தின்
நூலும் அறுந்து
சாதல் ஒன்றே எந்தன்
இலக்கென்று
கவலை தீரா
வாழ்வை வெறுத்து
அணைதல் இல்லா
வாழ்வை எனக்கு
தந்தவன் எவனோ
அவனே அழிக...!"

"வெறுத்த வாழவும்,
வெப்பப் பெருமூச்சும்
அந்தரிக்கும் இரவும்
அறுகின்ற கனவும்
அறுந்த நூலின்
முனை தெரியாமல்
அடிக்கடி மாறும்
அநாதை மனமும்
நிறுத்த முடியா
நினைவறாக் கவலையும்
கொடுக்க முடியா
உணர்வுக் கலசமும்
கறுத்த இரவில்
கலங்கும் உறவும்
கொடுத்தவன் எவனோ
அவனே அழிக...!"

"வைத்த குங்குமம்
காற்றினில் கரைய
வேதனைப் பெருந்தீ
பற்றிப் பிடிக்க
சாத்தான் ஓதும்
சாத்திரம்போல
சாக்கடையாய்
என் வாழ்வு நகர
கைத்தலம் பற்றிய
கணவன் காட்டிய
களங்கள் போன
கால்கள் கடுக்க,
எத்தனாய்
என் தாலியைப்
பற்றிய
எமனவன்
எவனோ அவனே
அழிக...!"

"காதலி இவளும்
காதலன் முகத்தை
பார்த்திடத் துடிக்கும்
பாவத்தை என்சொல்ல
கற்புடை என்னைக்
கண்டவர் கண்கள்
இனிக் காமமாய்ப் பார்க்கும்
காரணம் என்சொல்ல
சுற்றயல் உள்ள
சொந்தங்கள் எல்லாம்
சுடுசொல்லால் தாக்கும்
நாக்குக்கு என் சொல்ல
உற்றவன் இன்றி
நித்தம் துயர் நிலையை
தந்தவன் எவனோ
அவனே அழிக...!"

அள்ளி வீசினாள்
நாச்சி
தன் சாபங்களை.

விரிந்த கூந்தலை
அள்ளி முடித்தாள்
குலைந்த சேலையை
இறுக்கி அணிந்தாள்
இடையில் செருகிய
குறுவாள் எடுத்து
வானை நோக்கி
சாபமுரைத்தாள்

"சிவனே...!
பண்டார வன்னியனின்
பத்தினி
குருவி நாச்சியாரின்
சாபமிது...!"

■ *இராம. இராகவா*

# காமம் கடத்தல்

...பனிபடர்ந்த
...னிரவு.

...கூறுகளில்
மோகத்தின் சிதிலங்களை
...மறைக்கத் தெரியாமல்
மோதி விளையாடும் காற்று.

விரகத்தின் கூக்குரல்
நமக்கு மட்டும் கேட்க
நிசப்த அலைகளில்
நனைந்து கிடக்கிறது
இம் மண்ணுலகு.

சிலந்தி வலையில் சிக்குண்ட
சிள் வண்டென
கைகள் கோர்த்து
நடக்கின்றோம்
காமன் சந்நிதிக்கு.

சோம பானம் சொரிந்து
பாதை காட்டுகிறாள்
இருளைப் புணர்ந்த
நிலாப் பெண்ணாள்.

நெஞ்சக் குமிழிகளில் நீரருந்த
பாலையென கிடக்கிறது நாவு.

மன்மதப் பள்ளங்களில் நீந்தி
மரபணுப் பூக்களை
விதைத்துவிட
முகஞ்சிவந்தபடி
கிளைபரப்புகிறது
விரச விருட்சம்.

கற்பகதரு நிழலில்
தேவர்கள் அருந்திய கள்ளின்
தெறித்த ஒரு துளி
இன்று என்னருகில்.

எவர்க்கும் அரிதாம்
காமம் கடத்தல்.

■ வேல்.லவன்

## கல கலப்புச் சினிமா

### சினிமா





# பொதுவாக எம்மனசு தங்கம்

**கதைப் பார்வை**

ஊர்ப் பணக்காரரான பார்த்திபன் தன்னை எப்போதுமே மற்றவர்கள் புகழ்ந்துகொண்டு இருக்க வேண்டும் என விரும்புபவர். அவரது மகள் நிவேதா பெத்துராஜ். சிறு வயதில் தனது மகளுக்கு மொட்டையடிப்பதற்காகப் பக்கத்து கிராமக் கோவில் ஒன்றுக்குச் செல்கிறார் பார்த்திபன். மொட்டையடிப்பு நடக்கிறது. அப்போது அந்த ஊரில் ஒரு சாவு நிகழ்ந்துவிட சம்பிரதாயப்படி அந்தக் கோயிலை ஊர் மக்கள் பூட்டுகின்றனர். பிள்ளைக்குப் பாதி மொட்டை அடித்ததோடு பார்த்திபன் குடும்பம் வெளியேற நேரிடுகிறது. இதை அவ மானமாகக் கருதும் அவர், அந்த கிராமத்தினரைப் பழிவாங்கத் தீர்மானிக்கிறார். அவர்களை ஊரைவிட்டு வெளியேற்றத் திட்டமிடுகிறார். இந்த நிலையில், எந்த அடிப்படை வசதியும் இல்லாத அந்த ஊரை எப்படியாவது முன்னேற்ற வேண்டும் என்று தன் நண்பன் சூரியுடன் சேர்ந்து பல திட்டங்களை வகுக்கிறார் உதயநிதி. பணக்காரரான பார்த்திபனின் தங்கையைப் பக்கத்து ஊரைச் சேர்ந்த நமோ நாராயணன் காதலித்துத் திருமணம் செய்த விடயமும், புகழ்ச்சிக்கு ஆசைப்படும் பணக்காரரான பார்த்திபன் தன் தங்கை வசிக்கும் அந்த ஊருக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்த விடயமும் உதய நிதிக்குத் தெரியவருகிறது. பார்த்திபனின் மகள் நிவேதாவைக் காதலித்தால், பார்த்திபன் மூலமாக இந்த ஊருக்கும் நல்லது நடக்கும் என்ற யோசனையில், அவரைக் காதலிக்கத் தொடங்குகிறார். அந்தக் காதல் என்ன ஆனது? ஊர் மக்களை வெளியேற்ற நினைத்த பார்த்திபனின் திட்டம் என்ன ஆனது ? என்பதே படம்.

**பாத்திர வார்ப்புக்கள்**

பார்த்திபன் நக்கல் கலந்த வழமையான தனது நகைச்சுவையால் கலகலப்பை உண்டாக்குகிறார் இதனால் அவரது வில்லத்தனம் எடுபடாமல்போகிறது. நாயகன், நாயகி சந்திக்கும் முதல் காட்சியிலேயே காதல் பேசுவதும், அடுத்த காட்சியில் சண்டை பிடிப்பதும்அதுவே மாறி



மாறித் தொடர்ச்சியாக வருவதும் ஒரு கட்டத்தில் சலிப்பை ஏற்படுத்துகிறது. கிராமத் துக்கு நல்லது செய்யும் இளைஞனாக வரும் உதயநிதியின் நடிப்பில் நல்ல முன்னேற்றம். அப்பாவித்தனமான நடிப்பைச் சிறப்பாக வெளிப்படுத்துகிறார். நண்பன் ரைகர் பாண்டியாக வரும் சூரியின் நகைச்சுவைக் காட்சிகளில் திரையரங்கம் சிரிப்பலையில் அதிர்கிறது. முழுத் திரைப்படத்தையும் வலுவாகத் தாங்கி நிற்கிறார் பார்த்திபன். ஆட்சியர் வருவதைத் தெரிந்துகொண்டு, ஒரு குடிசைக்குத் தீ வைத்து விட்டு, அங்கிருந்தவர்களையும் அவரே மீட்டு ஆட்சியரிடம் பாராட்டு பெறும் காட்சியில் அவர் பலே! அவரது உதவியாளராக வரும் மயில்சாமி, ஒரு காட்சியில் மட்டும் தலைகாட்டும் மொட்டை ராஜேந்திரன் ஆகியோரும் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளனர்.

**கதையமைப்பு, ஒளித்தொகுப்பு, இசை**

'வருத்தப்படாத வாலிபர் சங்கம்', 'ரஜினி முருகன்' ஆகிய படங்களில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த தளபதி பிரபு அதே பாணியில் இந்தப் படத்தையும் எடுக்க முயற்சித்திருக்கிறார். கிராமம், காதல், நகைச்சுவை, வம்பு என்று வழக்கமான போக்காக இருந்தாலும், ஊருக்கு நல்லது நடக்க வேண்டும் என்ற கருவை மையமாக வைத்தே படம் நகர்கிறது. ஒரே பாணியிலமைந்த கதை கொண்ட படங்களையே தொடர்ச்சியாக தேர்வு செய்தாலும், ஒளிப்பதிவாளர் பாலசுப்ரமணியம் இதில் தனித்து நிற்கிறார். டி.இமான் இசை, யுகபாரதியின் பாடல்கள் இரசிக்கக்கூடியவாறு உள்ளன.

**வலுவற்ற கதை**

மாவட்டத்தில் கடைசி 3 இடங்களைப் பிடித்த மாணவர்களுக்குப் பரிசு கொடுக்கும் இடத்தில் நாயகி அறிமுகமாவது, ஊரைவிட்டு வெளியே அனுப்ப ஊர்க்காரர்கள் வாக்களிப்பது உள்ளிட்ட சில இடங்கள் இரசிக்கும்படி இருக்கின்றன. ஊருக்கு நல்லது செய்வதற்காக நாயகன் காலம் போக்குவது, தன்னை அவமானப்படுத்திய மக்களை வில்லன் பழிவாங்குவது எனக் கதையின் போக்கைத் தீர்மானிக்கிற காட்சிகள் நகைச்சுவையாக நகர்வதால், படம் வலுவிழந்து விடுகிறது. அதாவது திரைக்கதையில் இறுக்கம் இல்லாமல், மேம்போக்காக நகர்வது படத்தைச் சொதப்பி விடுகிறது.

### பேய்ப்பட ரசிகர்களுக்கு

'அன்னாபெல்' என்பது 2014ஆம் ஆண்டு திரைக்கு வந்த அமெரிக்க நாட்டு திகில் திரைப்படம் ஆகும். அந்தத் திரைப்படத்தை ஜோன் ஆர். லானெட்டி என்பவர் இயக்கியிருந்தார். இது 'த கான்ஜூரிங்' என்ற திரைப்படத்தின் 2ஆம் பாகம். 2014ம் ஆண்டில் வெளிவந்த 'அன்னாபெல்' படத்தின் கதைக்கு முன்பாக என்ன நடந்தது என்பதைச் சொல்லுகிறது தற்போது வெளிவந்துள்ள அன்னாபெல் கிரியேஷன். இதை இயக்கியிருக்கிறார் டேவிட் எவ். சாண்ட்பெர்க். அதாவது 'த கான்ஜூரிங்' பட வரிசையில் நான்காவது படம் இது. முதல் பாகத்திலிருந்து மேம்பட்ட படமும்கூட.

**கதைப்பார்வை**

1943ஆம்ஆண்டில் பொம்மை தயாரிப்பவரான சாமூவேல்- மல்லின்ஸ் எஸ்தர் தம்பதியின் ஐந்து வயது மகளான அன்னாபெல், கார் மோதிச் சாவடைகிறாள். 12 ஆண்டுகளுக்குப் பிறகு, மூடப்பட்ட ஆதரவற்றோர் இல்லத்தைச் சேர்ந்த சகோதரி சார்லட்டும் ஆதரவற்ற ஆறு குழந்தைகளும் மல்லின்சின் வீட்டில் வந்து வசிக்க ஆரம்பிக்கிறார்கள்.
அதில் ஜானிஸ் என்ற குழந்தை, திறக்கக்கூடாது என்றிருக்கும் அந்தக் கதவைத் திறந்து ஒரு அறைக்குள் செல்ல அங்கிருக்கும் அன்னபெல்லின் ஆவி ஜானிசைக் குறிவைக்கிறது.
பிறகு சாமூவேல் மல்லின்ஸ் தம்பதியும் கொடூரமாகக் கொல்லப்படுகிறார்கள். அதில் சார்லெட்டும் குழந்தைகளும் அங்கிருந்து தப்பினார்களா? அன்னாபெல்லின் ஆவி ஏன் பெற்றோரையே கொல்கிறது? என்பதுதான் கதை. படம் நிறைவடையும்போது, முந்தைய அன்னாபெல் படத்தின் ஆரம்பக் காட்சியுடன் நிறைவடைகிறது.

**திகிலூட்டுவதில் உச்சம்...!**

ஹொலிவூட் பேய்ப் படங்களில் 'த கான்ஜூரிங்' ஒரு திருப்புமுனையாக அமைந்



தது. ஆனால், அதற்குப் பிறகு வெளிவந்த தி கான்ஜூரிங் 2, அன்னபெல் ஆகிய படங்கள் முதல் படம் பேசப்பட்ட அளவுக்குப் பேசப்படவில்லை. ஆனால், இந்தப் படம் அதை மாற்றி அமைத்துள்ளது. அட்டகாசமான ஒரு திகில் திரைப்படத்தைப் பார்த்த அனுபவத்தைக் கொடுக்கிறது. நகர்ப்புறத்தை விட்டு தூரத்தில் ஒரு பெரிய வீடு. பேய் வசிப்பதற்கென்றே கட்டப்பட்டதைப்போல. பயமுறுத்தும் ஒரு பொம்மை. பாழடைந்த கிணறு. இத்தனையும் படத்தில் வந்ததும் பார்ப்பவர்களுக்கும் நடுக்கம் தானாகவே வந்துவிடுகிறது. மிகவும் நிதானமாக ஆரம்பிக்கும் படம், மெது மெதுவாக திகிலை அறிமுகப்படுத்துகிறது. அதன் உச்சகட்டத்தில் ரசிகர்கள் நடுங்கிப்போகிறார்கள்.

**காட்சியமைப்பு, இசை**

40கள், 50கள் காலப்பகுதியில் கதை நகர்வதால், அதற்கேற்ற வண்ணத்தில் படம் உருவாகியிருப்பது படத்துக்குக் கூடுதல் நம்பகத்தன்மையை அளிக்கிறது. இந்த நம்பகத்தன்மை, படத்தில் இடம்பெறும் சம்பவங்களுக்கும் கிடைப்பதால் இன்னும் அச்சமாக இருக்கிறது. படத்தின் ஒளிப்பதிவு, இசை ஆகியவை இந்தப் படத்தின் கூடுதல் பலங்கள். அன்னாபெல் படத்தின் முதல் பாகம் பேய்ப்பட இரசிகர்களுக்கு ஏமாற்றமளித்திருக்கலாம். ஆனால், இந்தப் பாகம் நிச்சயம் அப்படியிருக்காது.



# அன்னாபெல் கிரியேசன்



# செல்லும் வழியின் தூரம்... 16



பிரியமதா பயஸ்

வலைஞர் மடத்தின் ஒரு பகுதியில் குழந்தைகள் உள்ள குடும்பத்துக்கு ஒரு டம்ளர் சீனி கொடுப்பதாகத் தகவல். அந்தத் தகவல் சுழல் காற்றாய் அந்த மணல் தரையில் குடிகொண்ட அத்தனை கூடாரங்களையும் வந்தடைகின்றது. சூட்டோடு சூடாக எங்கள் கூடாரத்தையும் அந்தச் செய்தி கடந்தது. குழந்தையை அம்மாவின் கைகளுக்குள் திணித்துவிட்டு வழமைபோல் ஒரு துவாயை எடுத்துத் தலையில் போட்டுக்கொண்டு, பயசையும் அழைத்துக்கொண்டு அவ்விடம் நோக்கிப் புறப்படுவதற்கு ஆயத்தம். அந்த வெயில் தின்னும் மணல் வெளியில் எம் கால்கள் கொப்பளிக்க ஓட்டமும் நடையுமாக 500மீற்றர்கள் தூரம் வரைக்கும் நடந்து அந்த இடத்தை அடைகின்றோம். இன்னும் 500 மீற்றர்கள் தூரம் வரை நிரையாக மக்கள் நிற்கின்றனர். அந்த நிரையில் நாமும் இணைந்து கொள்கின்றோம். "ஸ்... ஸ்... ஸ்..." எனக் கடந்து போகும் ஏ.கே சன்னங்கள் உயிரை மிரட்டுகின்றன. ஆனாலும் பொருட்படுத்தாது அரைமணி நேரம் நான் நிரையில் நிற்பதும் பின்னர் எனது இடத்தில் பயஸ் நிற்க நான் அருகில் உட்காருவதுமாக மூன்று மணி நேரமாகக் காத்துக்கிடக்கிறோம். நிரை குறைவதாக இல்லை. இன்னும் கொஞ்சம் என்கின்ற மனநிலையில் அது ஊர்ந்து ஊர்ந்து நகர்ந்துகொண்டு இருக்கிறது.

**உயிரைப் பணயம் வைத்த வரிசை**

நின்ற இடத்தில் இருந்து முன்னூறு மீற்றர்கள் நகர்ந்திருப்போம். இன்னும் இருநூறு மீற்றர்கள் மட்டுமே மீதமிருந்தன. இப்போது ஒரு வளைவில் நாம் திரும்பவேண்டும் அந்த வளைவு கடற்கரைக்கு போவதற்கு அந்த மணல் வெளியை ஊடறுத்து கிரவல் போட்டு உயர்த்தப்பட்டு இருந்த பாதை. அது மற்றைய இடங்களை விட சற்று உயர்வான பகுதியாக மேடாக இருந்தது அந்த வளைவில் துப்பாக்கி சன்னங்கள் அதிகம் வந்து விழுகின்றன.
அந்த இடத்தை இப்போது நாம் கடக்க வேண்டிய நிலை. அது உயிரையும் பணயம் வைக்கும் இடம். இத்தனைக்கும் எமக்குக் கிடைக்கப்போவது ஒரு டம்ளர் சீனி மட்டுமே. அந்த நேரம் உயிரைவிட அது பெறுமதியாக இருந்தது.
கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் தலை முடி வெட்டாத பயஸின் தலை எண்ணையையும் அறியாமல் கிளர்ந்து ஜடாமுடியாகி இருந்தது. அவரின் உடலில் இரண்டு கண்களும் அந்த ஜடாமுடியும் மட்டுமே முழிப்பாகத் தெரிந்தன. மற்றையபடி ஒட்டி உலர்ந்து வறண்டு வலுவிழந்த தேகம் சோர்ந்து போகாத மனதைச் சுமந்துகொண்டு இருந்தது. நானும் அவ்வாறே இருந்தேன். இப்போது அந்த வளைவு அதைக் கடந்தால் ஒரு ஐம்பது பேர்தான் எமக்கு முன் நிற்கிறார்கள்.

**மயிரிழையில் உயிர் தப்புதல்!**

பத்துப் போராளிகள் பிக்கப் ரக வாகனம் ஒன்றில் இருந்து, சீனி மூடைகளை அவிழ்த்து, ஒவ்வொரு டம்ளர் சீனியை மட்டும் நாம் நீட்டும் பையிலோ, கையிலோ, பாத்திரத்திலோ போடுகின்றனர். அதைப் பார்க்கும்போது மனது ஏனோ மகிழ்வாகச் சிரித்தது. எமக்கும் அது கிடைக்கப்போகின்றது. 'சர்' என்று பாய்ந்து வந்த ஏ .கே சன்னம் ஒன்று பயஸின் சடாமுடியை ஊடறுத்து விர் என்று பறந்து சற்றுத் தொலைவுக்குப் போய் அந்த மணலில் குத்தி விழுந்தது. கைகால்கள் விறுவிறுத்து, தொண்டை அடைத்து, கண்கள் செருகி மயக்கமாக வந்தது எனக்கு. மயிரிழையில் உயிர் தப்புவதென்பது இதுதானோ...! என் கண்கள் கண்ணீரைக் கொட்டின. அந்தச் சன்னம் பாய்ந்து சென்ற ஜடாமுடியின் நுனிப்பகுதி கோள வடிவில் பொசுங்கி இருந்தது. சற்றுப் பதிவாக வந்திருந்தால் பயஸின் நெற்றிப்பொட்டைத் துளைத்துக்கொண்டு போய் இருக்கும் அந்தச் சன்னம்.
உடல் வியர்த்து விறுவிறுத்து இதயம் பதறியது. பயஸின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டேன். யாரென்றே முகம் அறியாத விரோதி ஒருவனின் துப்பாக்கி சன்னம் எம் பிணைப்பை இறுக்கியது. அருகில் நின்றவர்கள் திகைத்துப் போனார்கள். வளைவு வந்ததும் எல்லோரும் அதில் மண்டியிட்டு இருந்துதான் அந்த இடத்தைக் கடக்கின்றனர். நாம் அண்மிக்கும் போதும் எல்லோரும் எச்சரித்தனர். "இந்த மூலையில் ரவுன்ஸ் அதிகம் அடிக்குது கீழே குந்தி இருந்து நகர்ந்து போங்கள்" என்று. பயஸ் அதைக் கணக்கில் எடுக்காமல் நின்றதற்காகப் பெரியவர்களிடம் மனவருத்தத்தைச் சொல்லிக்கொண்டார். அவர்கள் பயசைக் கடிந்து கொண்டனர்.

**சாவதற்கு முதல் நல்லதா ஒரு தேநீர்**

மயிரிழையில் தப்பிய உயிரைக் கொண்டு சற்று நேரத்தில் போராளிகள் நிற்கும் இடத்துக்கு வந்துவிட்டோம். அவர்கள் கடற்புலிப் போராளிகள் என்பதைக் கிட்டே நெருங்கியதும் புரியக்கூடியதாக இருந்தது. அதிஸ்டவசமாகப் பயஸின் பைக்கும், எனது பைக்குமாக இரண்டு டம்ளர் சீனி கிடைத்தது. இரண்டையும் சேர்த்தால் கால்க்கிலோ வரும். மிக்க மகிழ்வோடு அந்த இடத்தில் இருந்து போனதிலும் வேகமாக ஓடி வருகின்றோம். இத்தனைக்கும் இப்போது நேரம் மாலை ஆறு மணியைக் கடந்து கொண்டு இருந்தது. வரும்போதே பயஸ் சொன்னார் 'கொண்டு போனதும் நல்லதா ஒரு தேத்தண்ணி போடும் சாகமுன்னம் குடிக்க வேணும்போல இருக்கு'' என்று. அந்த வார்த்தைக்காக அவரைக் கடிந்துகொண்டு நான் கூடாரத்தை அடைந்ததும் உடனடியாக தேநீர் தயாரித்தேன் அமிர்தம் சுவைக்கும் தோரணையில் எல்லோரும் தேநீர் பருகினோம். என் பாலகன் தேநீரைப் பருகிய விதமும் அதைச் சுவைத்த விதமும் இப்போதும் என் மனதுக்குள் குழைந்துகொண்டே இருக்கிறது.

(தொடரும்)



உடல் வியர்த்து விறுவிறுத்து இதயம் பதறியது. பயஸின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டேன். யாரென்றே முகம் அறியாத விரோதி ஒருவனின் துப்பாக்கி சன்னம் எம் பிணைப்பை இறுக்கியது. அருகில் நின்றவர்கள் திகைத்துப் போனார்கள். வளைவு வந்ததும் எல்லோரும் அதில் மண்டியிட்டு இருந்துதான் அந்த இடத்தைக் கடக்கின்றனர்.

## காதலி



பூஞ்சோலை கிராமம்
வருடும் தென்றல்
சலசலக்கும் நீரோடை
இரசிக்கக்கூடிய இயற்கை
கோழியின் கொக்கரிப்பு
அதிகாலைப் பொழுது......
சிட்டுக்குருவியின் கூடாக வீடு
சாய்ந்து கொள்ள ஒரு மடி
தாங்க ஒரு தோள்
தூய்மையான காதலுடன்
என் அழகான இராட்சசி...

செல்லச்சண்டைகள்
சின்ன அரட்டைகள்
மாதம் ஒரு நிலாச்சோறு

எப்போதும் கேட்கும்
சிதறல் சிரிப்பொலிகள்
அங்கத்தவர்களின்
கணக்கெடுப்பு
சாப்பாட்டு மேசையில்.


ஊர்ப்புதினத்துடன்
வளையோசை சைகை.
எதிர்பார்த்திருப்பது ஒரு
குட்டி தேவதைக்காக

சறோன்



# 2500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்து தலை நாக வழிபாடு 8

அருணா செல்லத்துரை



வாவெட்டிமலையில் சிதைந்த சிவலிங்க தலம்

பெருநிலப்பரப்பின் மத்திய பகுதியில் உற் பத்தியாகி மேற்கு நோக்கிப் பாயும் அருவி ஆற்றங்கரைகளில் கட்டப்பட்ட நீர்த்தேக்கங்களுக்கு அருகே இருக்கின்ற ஐந்து தலை நாக சிலைகளை ஒத்தவை கிழக்கு நோக்கிப் பாயும் ஆறுகளை மறித்துக் கட்டப்பட்ட நீர்த்தேக்கங்களின் கரைகளிலும் இருக்கின்றன. கிழக்கு நோக்கிப் பாய்ந்து இந்து சமுத்திரத்தில் கலக்கும் பல ஆறுகள் உள்ளன. அவற்றில் முக்கிய மானது பேராறு ஆகும். இது நயினாமடுப் பகுதியில் உற்பத்தியாகி நீண்ட தூரம் வடக்கு நோக்கிப் பாய்ந்து ஒட்டுசுட்டான் பிரதே சத்திலுள்ள வாவெட்டி மலையைக் கடந்து சென்று கிழக்கு நோக்கித் திரும்பிப் பாய்கிறது.

### வாவெட்டிமலைத் தொடர்

ஒட்டுசுட்டானுக்கு மேற்கே வாவெட்டி மலைத் தொடர் இருக்கிறது. இங்கு இலிங்க வழிபாடு இடம்பெற்றமைக்கான அடையாளங்கள் இருக்கின்றன. இந்த மலையை ஆய்வு செய்த ஆங்கிலயர்கள் குன்றுக்கடவுள் (Rock God) இருக்கும் குன்று எனக் குறிப்பிட் டுள்ளார்கள். மலையின் மறுபக்க அடிவாரத்தில் கருங்கற்களைப் பொளிந்து கட்டப்பட்ட கேணி அமைந் திருப்ப தற்கான புராதன பொளிவுகள் இருக்கின்றன. மலைத்தொடரின் பல இடங்களில் கருங்கற்களில் பொளியப்பட்ட தூண்கள் விழுந்து கிடக்கின்றன. மலையின் உச்சியில் இருக்கும் சிவலிங்கத் தலத்துக்குச் செல் வதை அடையாளப்படுத்துமாறு தொடராக அம்புக்குறி பொளியப்பட்ட சதுரமான கருங்கற்கள் வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 1610களின் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்த பரராசசேகர மன்னனும், சங்கிலி அரசனும் வன்னிப் பிரதேசத்தில் இருந்தபோது வாவெட்டிமலையில் இருந்த சிவலிங்க ஆலயத்தை பராமரித்து, வழிபாடுகளில் ஈடுபட்டனர் என்று வையாபாடலிலும், வரலாற்றுக் குறிப்புகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு செங் கற்களால் கட்டப்பட்டிருந்த கட்டடங்கள் உடைந்து செங்கல் பிட்டிகளாகக் காணப்படுகின்றன. மலையின் உச்சியில் இருந்த சிவலிங்கம் அகற்றப்பட்டுள்ளதற்கான அடையாளங்கள் உள்ளன. இலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இடம் மட்டும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

வாவெட்டி மலைக்கு நேர் கிழக்கே உள்ள ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் புராதன இலிங்கம் இருக்கின்றது. கி.பி.1783களில் ஒல்லாந்த நிர்வாகத்தில் கப்டன் தோமஸ் நாகெல், வன்னிப் பிரதேசத்தைத் தனது நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்காக இடம் பெற்ற தாக்குதல்களின்போது வவுனிக்குளம் (பாலிக்குளம்), பனங்காமம் (பாணன்கமம்), ஒட்டுசுட்டான் போன்ற இடங்களில் இருந்த சிவலிங்கங்களைச் சேதப்படுத்தியமை வரலாற்றின் மூலம் தெரிய வருகின்றது. ஒட்டுசுட்டானில் இருந்த இலிங்கம் மண்ணினுள் இருந்து தானாகத் தோன்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இலிங்கத்தின் மேல் பகுதியில் சேதம் ஏற்பட்ட அடையாளம் இருக்கின்றது. இதற்காக பலவித வாய்வழி வரலாறுகளும் பிரதேசத்தில் உள்ளன. இலிங்கத்தை வெளியே எடுக்க விரும்பாத பக்தர்கள், இலிங்கத்தை இருந்த நிலையிலேயே பிரதிஷ்டை செய்திருப்பதால் நிலமட்டத்திலிருந்து சற்று உயரமாக மட்டும் அது தெரிகிறது.

வாவெட்டி மலையில் சிவலிங்கத்துக்கான பூசைகள் இடம்பெற்ற பின்னரே தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் பூசைகள் ஆரம்பமாவது பாரம்பரியம் என்று முன்னோர்கள் தெரிவித்ததை முதியவர்கள் நினைவு கூருகின்றனர்.



ஒட்டுசுட்டான் இலிங்கம்

வடக்கு நோக்கிப் பாயந்த பேராறு, ஒட்டுசுட்டானுக்கு வடக்கே உள்ள தட்டயமலைக்கும் அதற்கு அருகே இருக்கும் மண்மேட்டுக்கும் இடைப்பட்ட பகுதியினூடாகத் திரும்பிக் கிழக்கு நோக்கிப் பாய்கின்றது. கருங்கல் தட்டயமலையையும் மறுபக்கத்தில் இருக்கும் மண்மேட்டையும் குறுக்காக மண் நிரப்பி பேராற்றை மறித்து நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இது மண்மேட்டையும் மலையையும் இணைத்துக் கட்டப்பட்டுள்ளபடியால் 'மண்மலைக் குளம்' என அழைக்கப்பட்டுள்ளது.

தட்டயமலைக்கு அருகாகச் சாளம்பன் ஆறு பாய்கிறது. இந்த ஆற்றையும் மறித்துக் குளம் கட்டப்பட்டுள்ளது. 'தட்டயமலைக் குளம்' என இது அழைக்கப்பட்டது. இதிலிருந்து வடிந்து பாயும் நீர் சாளம்பன் ஆற்றின் ஊடகப் பாய்கிறது. இந்தச் சாளம்பன் ஆற்றின் கரையில் உள்ள தட்டயமலைச் சாரலில் புராதன தியான நிலையம் அமைக்கப்பட்டிருந்ததற்கான கருங்கல் பொளிவுகள் காணப்படுகின்றன. இந்தத் தியான நிலையத்தின் பாதுகாவலுக்கென கருங்கல் பொளிவுகளால் மதில் அமைக்கப்பட்டிருந்தது. அத்தோடு கருங்கல் மதிலுக்கு வெளியே சுமார் ஏழு அடி தூரத்தில் செங்கற்களால் மதில் கட்டப்பட்டுள்ளது. இவை இரண்டு காலத்தைக் குறிக்கும் அடையாளங்களாகும். கருங்கல் மதிலும், செங்கல் மதிலும் சாளம்பன் ஆற்றின் கரையோரம்வரை சுற்றிக் கட்டப்பட்டுள்ளன.

ஆற்றிலிருந்து உச்சிக்கு ஏறிச் செல்வதற்காக யானைத்தலை வாசல் கற்களுக்கு இடையே பொளியப்பட்ட கருங்கல் படிகள் அடுக்கப்பட்டுள்ளன. தற்போது ஆற்றின் அரிப்புக் காரணமாக செங்கற்களால் கட்டப்பட்ட மதில் அரிக்கப்பட்டு செங்கற்கள் ஆற்றில் விழுந்துள் ளன.

செங்கல் மதில் விழுந்துள்ள காரணத்தினால் கருங்கல் மதிலின் பொளிவுகள் ஆற்றின் கரையில் வெளியே தெரிகின்றன. ஆற்றின் மறுபக்கத்தில் இருந்த தட்டயமலைக் குளக்கட்டிலிருந்து ஐந்துதலை நாகசிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆலயம் அமைத்து பிரதேச வாசிகள் நாகதம்பிரான் என வழிபட்டு வருகின்றனர். இந்த நாக சிலையின் அமைப்பு மிகவும் செம்மையானதாக இருக்கிறது.

நாகத்தின் கழுத்தடியில் நாக ரத்தினம் இருக்குமாறும் பொளியப்பட்டுள்ளது.



தட்டயமலை ஐந்துதலை நாகம்

ஐந்து தலைநாகம் வாலைச் சுருட்டி எழுந்து நிற்பதுபோல சிலை பொளியப்பட்டுள்ளது. நாகத்தின் வால் பகுதி இடது பக்கம் திரும்பிச் சுருட்டியிருப்பது தெரிகிறது. இந்த நாகசிலைகளின் அமைப்பு முறைகள் ஏதாவது ஒரு தகவலை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதிலும் நாகர்களுடைய பிராமிக் எழுத்துக்கள் இருப்பதை பேராசிரியர் சி.பத்மநாதன் உறுதி செய்திருந்தமை சிறப்பு அம்சமாகும்.

(தொடரும்)


## கண்ணாடி

விழித்திரையின் முன்னே ஒரு விம்பம்
விளித்தெழவே மனவறையின்
முகத்தில் பிரதிபலிப்பின் பிரதிவிம்பம்
நிழல் காட்டா நிலைக் கண்ணாடி

கண்ணாடி முன்னின்றே கண்விளித்தே
அனுதினமும் அணுவணுவாய் இரசிப்பார்
உச்சி முதல் பாதம் வரை மருக்கொண்டு நோக்க
உருக்கொண்டதை உள்ளபடியே காட்டும்
எட்டடி வைத்து நடக்கும் குழந்தை முதல்
எண்பது பாட்டி வரை அலங்கரித்தே
அடிக்கடி நோக்கியே அழகை இரசிக்க
அத்தியவசியப் பொக்கிசமிது.
சூட்சுமமாய் உரைத்திடவே
காத்திருந்தே சுழியிழுக்கும்
பார்த்திருப்போர் முன்னே படிப்பினையாய்
சமூகத்தின் கண்ணாடி இலக்கியம்.

உள்ளதை உள்ள படியே
உணரவைக்கும் உன்னத
உள்ளத்தனையது உயர்வானது
என் நாடி யதுவே கண்ணாடி.

-கோவை திரு.





# மழை

மழை பொழியுது
மழை பொழியுது
மகிழ்ந்து ஆடுங்கள்
விளை நிலங்களில்
பயிர் செழிக்குது
வியந்து பாடுங்கள்

வெள்ளம் பாயுது
வெள்ளம் பாயுது
வேகம் விரையட்டும்
உள்ளம் குளிரும்
உவகை சே
உலகம் மகிழட்டும்

மக்கள் உயிர்கள்
மரங்கள் வளர
மழையே பொழியட்டும்
அக்கம் பக்கம்
அனைத்தும் நனைய
அழகாய்ப் பெய்யட்டும்



# புத்திக்கூர்மை

பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர் பிரான்ஸ்வா ரபலே. அவர் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன், மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்தவர். கிறிஸ்தவமத போதகராகவும், அங்கத எழுத்தாளராகவும், நகைச்சுவை எழுத்தாளராகவும் திகழ்ந்தவர். அவர் எழுதிய "கார்காங்டுவா" என்ற நூல் பிரெஞ்சு அரசியலையும் வாழ்க்கை முறையையும் கிண்டல், கேலி செய்யும் புகழ்மிகு புத்தகம் ஆகும்.



ஒருமுறை அவர் தெற்கு பிரான்ஸின் ஓரிடத்தில் பணமே இல்லாமல் மாட்டிக்கொண்டார். தலைநகரான பரிஸுக்குத் திரும்புவதற்கு அவர் கையில் ஒரு சதமும் இல்லை. அந்தக் கிராமத்திலுள்ள ஒரு சத்திரத்தில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்தார். அதை நடத்தும் பெண்மணியிடம் தான் முக்கிய விடயங்களை எழுதவிருப்பதால், தனக்கு ஒரு எழுத்தாளர் தேவை என்றார். அப்பெண்ணும், "அதற்கென்ன? என் மகன் கெட்டிக்காரன் 12 வயது என்றாலும் அச்சுப்பொறித்தாற்போல எழுதிக்கொடுப்பான். அவனைச் சம்பளத்துக்கு வைத்து க் கொள்ளுங்கள்" என்று அனுப்பிவைத்தார்.

அந்தச் சிறுவனும் வந்தான். அவனிடம் ரபலே, "டே பையா! மிக முக்கியமான ஒரு காரியத்தைச் செய்யப்போகிறேன். ஆகையால், கவனமாகக் கேட்டு எழுது" என்றார். அவனும் எழுதினான்.

"ராஜாவுக்கான விஷம்
இதையும் எழுது
மஹாராணிக்கான விஷம்
ஆர்லியன்ஸ் நகரப் பிரபுவுக்கான விஷம்
இதையெல்லாம் கொட்டை எழுத்தில் எழுது. ஏனென்றால், இவையெல்லாம் டப்பா மீது ஒட்டும் அடையாளத் துண்டுகள்" என்றார். சிறுவனுக்குப் பயம் வந்துவிட்டது. இருந்தாலும், அச்சுப்பொறித்தாற் போல பெரிதாக எழுதினான்.

இதற்கிடையில் ரபலேயோ ஒரு பெட்டிக்குள்ளிருந்து சாம்பலை எடுத்தார். அதைத் தன் மூக்குப்பொடி டப்பிக்குள் போட்டுக் குலுக்கினார். முகத்தை மிகவும் கடுமையாக வைத்துக்கொண்டு காகிதத்தில் போட்டார்.

இதைப் பார்த்த சிறுவனுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. அலறியடித்துக்கொண்டு மாடியிலிருந்து இறங்கி, "அம்மா, அம்மா... இவன் ஒரு கொலைகாரன், ராஜா, ராணியைக் கொல்ல விஷம் தயாரித்துக்கொண்டிருக்கிறான்" என்று சொல்லி முடித்தான்.

உடனே அந்தப் பெண் பொலிஸாருக்குத் தகவல் அனுப்பினாள். அவர்களும் விரைந்தோடி வந்து ரபலேயை கையும் களவுமாகப் பிடித்து, "யாரடா நீ, அயோக்கியா?" என்றனர்.

பிரபல ரபலேயை அவர்களுக்குத் தெரியவில்லை. அவரும் பதில் சொல்லாமல் பேந்தப் பேந்த முழித்தார். ஆளை அலாக்காகத் தூக்கி இறுகக் கட்டி வண்டியில் ஏற்றிப் பரிஸுக்குக் கொண்டு சென்றனர். பொலிஸாருக்கு மிகவும் பெருமிதம். பிரான்ஸ் நாட்டின் ராஜத்துரோகியைக் கண்டுபிடித்து விட்டோம். எமக்குப் பரிசு கிடைக்கும் இவனுக்கு சாவுத் தண்டனை கிடைக்கும் என்று கணக்குப் போட்டனர்.

ரபலே பரிஸ் நகரத்துக்கு வந்து சேர்ந்தவுடன் அவசரமாக மன்னர் தலைமையில் நீதிமன்றம் கூடியது. மன்னருக்கோ ரபலேயைப் பார்த்தவுடன் அதிர்ச்சி! திகைப்பு! ரபலே நடந்தவற்றை அப்படியே விவரித்தார். மன்னரும் புன்சிரிப்புடன் ரபலேயை விடுவித்தார்.

**நீதி :"வாயுள்ள பிள்ளை பிழைக்கும்!"**

# நாடுகளின் பழைய பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. இந்தோனேசியா | - | பத்தேவியா |
| 2. ஈராக் | - | மொசப்பத்தேமியா |
| 3. தாய்லாந்து | - | சயாம் |
| 4. சிம்பாப்வே | - | தென்றொடீசியா |
| 5. இலங்கை | - | சிலோன் |
| 6. மியன்மார் | - | பர்மா |
| 7. நியூசிலாந்து | - | மலாவாய் |
| 8. தாய்லாந்து | - | சயாம் |
| 9. ஈரான் | - | பெர்சியா |
| 10. தைவான் | - | பார்மோசா |




# அறம் செய்ய விரும்பு



அறம் என்றால் தருமம் என்பது பொருள். தருமம் என்பது என்ன? பிறருக்கு உதவி செய்வது, அவர்களுடைய துன்பங்களை அகற்றுவதற்கான நல்ல செல்களில் ஈடுபடுவதே தருமம் ஆகும். என்ன செயல்கள்? எத்தகையவர்களுக்கு? ஏழை எளியவர்களின் பசியாற அவர்களுக்கு உணவளிப்பதே தலை சிறந்த தருமம் ஆகும். உடுக்க ஆடை கொடுப்பதும் தருமம். இப்படித் தருமம் செய்வாயானால் ஏழைகளின் துன்பம் நீங்கும். அவர்களுடைய முகத்தில் மகிழ்ச்சி மலரும். உன் உள்ளத்திலும் இன்பம் பொங்கும். இந்த மகிழ்ச்சியையும் "இன்பத்தையும்" நீ அடைய வேண்டாமா? ஆகவே துன்பப்படுபவர்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு உழைத்து வாழ இயலாத உடல் ஊனமுற்றவர்களுக்கு உன்னால் இயன்ற அளவு அறம் செய்ய ஆசைப்படு.

# சில பறவைகள் பற்றி...



Night jar என்ற பறவை பறக்கும்போது எப்போதும் வாயைத் திறந்து வைத்துக் கொண்டேயிருக்கிறது. பூச்சிகளைப் பிடிக்கவே இவ்வாறு செய்கிறது.



Ostrich பறவைகளுக்குப் பற்கள் கிடையாது. எனவே அவை உணவை அரைத்து உண்பதற்காகக் கற்களை விழுங்குகின்றன.



Grebe என்னும் பறவை தன் சிறகுகளையே உண்ணும் பழக்கம் கொண்டது.




பின் பக்கம் பறக்கும் தன்மையுடைய Humming பறவைகளுக்கு 'பறக்கும் நகைகள்' என்ற பெயரும் உண்டு.




Skylark பறவை காற்றில் ஒரே இடத்தில் நீண்ட நேரம் மிதக்கும் திறனுடையது.



Jackdaw என்ற பறவை தன்னுடைய கூடு கட்ட மின்னும் பொருள்களை மட்டுமே பயன்படுத்துகிறது.



பி.நிக்ஷிகா



க. அன்றியா,
தரம் - 1 இ
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

# தென்கிழக்கு திசையில் இருந்து...

அனார்கலி

## கண்டியானும்... வன்னியானுமா...?


குதிரையில் அரசியல் செய்துவரும் அந்த முஸ்லிம் கட்சியின் தலைவரான முன்னாள் அமைச்சர் கடந்த வாரம் தமது கட்சி சார்பிலான பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றினார். அட்டாளைச் சேனையில் நடந்த அந்தக் கூட்டத்தில் குதிரைத்தலைவர் கர்ஜிக்கத் தொடங்கினார்...
முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீமையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீனையும் விளாசு, விளாசெனப் பேசித் தள்ளிய அந்தத் தலைவர் ஒரு கட்டத்தில் ஆத்திரம் உச்சிக்கு ஏறி, "கண்டியானும், வன்னியானுமா நம் முஸ்லிம் மக்களுக்கு (கிழக்கு) அரசியல் தலைமை தருவது?" எனும் ஆக்ரோசத்துடன் கூறினார். பிரதேச வாதத்தை அடியோடு வெறுத்த மாமனிதர் மறைந்த தலைவர் அஷ்ரபின் பாசறையில் வளர்ந்தவர்கள் நாமென இன்னும் மார்தட்டிக் கொள்பவர்கள் "என்னங்கோ! இப்படிப் பேசுறிங்களே? இந்த லட்சணத்தில் எப்படிக் கிழக்கில் உருவாகவிருக்கும் முஸ்லிம் கூட்டமைப்பு வெற்றிய ளிக்கும்..." எனக் கேட்க ஆரம்பித்துள்ளனர்.

## மீண்டும் கையில் தூக்கப்பட்டது கரையோரம்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளை உள்ளடக்கிய கரையோரமாவட்டத்தைப் பெற்றுத்தருவோமென்ற வாக்குறுதி தேர்தல் காலம் வந்துவிட்டால் கையிலெடுக்கப்படுவது வழக்கமானதாகும்.
இந்த நிலையில், கல்முனையை மையமாகக் கொண்ட கரையோர மாவட்டத்தை உருவாக்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்து வருவதாக, விளையாட்டுத்துறைப் பதில் அமைச்சர் எச்.எம்.எம்ஹரீஸ் கடந்தவாரம் கல்முனையில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்திருக்கிறார்.
"நீண்டகால துருப்புச்சீட்டான கரையோரமாவட்டம் கனியும் நாள்தான் எந்நாளோ?" எனப் பலரும் அங்கலாய்ப்பதுடன் "அம்பாறை மாவட்ட செயலகத்துக்குத் தமிழ் பேசும் குடிமகன் ஒருவரை அரச அதிபராக நியமிக்க வக்கற்ற நிலையிலிருக்கும் எமது அரசியல் தலைமைகளா கரையோர மாவட்டத்தைப் பெற்றுத்தரப் போகின்றனர்?" என்று கேள்வியும் எழுப்புகின்றனர்.
"ஏமாறாதே ஏமாறாதே...
ஏமாற்றததே ஏமாற்றாதே..." பழைய சினிமாப் பாடல் தூரத்தே கேட்கிறது.

## 100வீதம் வெற்றியாம்...!

கிழக்கின் முஸ்லிம் அரசியல் களத்தில் பரபரப்பாகப் பேசப்படும் முஸ்லிம் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர்களுக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரிசாத் பதியுதீனுக்கும் இடையே இரண்டாவது தடவையாகவும் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.
கிழக்கில் இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பிலும், முஸ்லிம் கூட்டமைப்பு மூலம் இந்தத் தேர்தல்களை எதிர் கொள்வது தொடர்பிலும் இந்தச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகவும், முற்று முழுதாக இந்தச் சந்திப்பு வெற்றிகரமாக அமைந்ததாகவும் முஸ்லிம் கூட்டமைப்பின் முதன்மை ஏற்பாட்டாளர் எம்.ரி. ஹஸனலி தெரிவித்திருக்கிறார்.




## சரியாய் சொன்னார் விக்ரர் ஐவன்

ராவய பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் விக்ரர் ஐவன் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்து புத்திஜீவிகள் பொதுமக்களுடனான சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.
'தேசத்தைக் கட்டியெழுப்புதல்' எனும் தலைப்பில் 'என்ன நடக்கிறது? நாம் என்ன செய்யவேண்டும்?, என்பன பற்றி விக்ரர் ஐவன் விளக்கமளித்துள்ளார்.
நிந்தவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, சம்மாந்துறை, ஆலையடி வேம்பு, பாலமுனைப் பிரதேசங்களில் இந்தச் சந்திப்புக்களும், கலந்துரையாடல்களும் இடம்பெற்றுள்ளன.
நிந்தவூர் நலன்புரிச்சங்கம் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் உரையாற்றிய விக்டர் ஐவன், "மகிந்த, மைத்திரி இரு தலைவர்களுக்கும் நாட்டின் பிரச்சினை பற்றித் தெளிவுமில்லை அதை வெற்றி கொள்ளவும் முடிய வில்லை" எனக்கூறினார்

## களை கட்டுகிறது ஹஜ்ஜுப் பெருநாள்

கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் ஹஜ்ஜுப் பெருநாளைக் குதூகலமாகக் கொண்டாடுவதற்கு முஸ்லிம் மக்கள் தயாராகிவருகின்றனர்.
பெருநாளையொட்டி உடுதுணிகள் மற்றும் முக்கிய பொருள்களின் விற்பனைகளும் களை கட்டி வருகின்றன.
அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல்அறுவடை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், பணப்புழக்கமும் அதிகரித்து பெருநாளைக் குதூகலமாகக் கொண்டாடும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.
இதேவேளை பல பிரதேசங்களுக்கும் வெளியூர்களிலிருந்து நடைபாதைப் புடவை வியாபாரிகள் பெருமளவில் படையெடுத்துள்ளதால், மலிவுவிலைகளில் உடுதுணிகளைப் பொதுமக்கள் வாங்க ஆரம்பித்துள்ளனர். செப்டம்பர் 2ஆம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள் கோலாகலமாகக் கொண்டாடப்படவிருக்கின்றது.




## 'நீயா...? நானா...?' தலைவர்களின் கவனத்துக்கு...

கல்முனை மாநகரசபையின் கீழுள்ள சாய்ந்தமருது பிரதேச மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான தனியான உள்ளூராட்சிசபை விடயம் விரைவில் கனிந்துவிடுமென எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தலைமை அமைச்சரின் அறிவிப்பு பேரிடியை ஏற்படுத்தி சாய்ந்தமருது மக்களைக் கவலையிலாழ்த்தியுள்ளது.
முஸ்லிம் காங்கிரசும், அகில இலங்கை மக்கள் காங்கிரசும்
'நியா? நானா...?' போட்டிக் களத்தில் நிற்கும் வேளையில் "தேர்தல் முடியும் வரைக்கும் புதிதாக உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதில்லை" எனத் தலைமை அமைச்சர் அறிவித்துள்ளார்.
எனினும் தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசனின் வெளிநடப்பு விவகாரம் நுவரேலியா மாவட்டத்தில் மேலும் சில பிரதேசசபைகளை உருவாக்குவதற்குத் தற்போது வழிவகுத்திருக்கிறது.
இதனை அடியொற்றியாவது சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை அறிவிப்பு வர்த்தமானி வெளியிடப்பட 'நியா? நானா?' தலைவர்கள் காத்திரமான நடவடிக்கையை உடன் எடுப்பார்களா? அல்லது கனிந்து வந்த விடயம் எட்டாக்கனியாகுமா? காலம் பதில் சொல்லட்டும்.



## லண்டன் பறந்தார் ஹஸனலி

தூய முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் கூட்டமைப்பு என்பவற்றின் முதன்மை ஏற்பாட்டாளரான முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரீ.ஹஸனலி தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்றுள்ளனர். ஆனாலும் அவர் லண்டனிலுள்ள இலங்கை முஸ்லிம்களைக் கொண்ட அமைப்பு ஒன்று விடுத்துள்ள அழைப்பொன்றில் அவர்கலந்து கொள்ள விருப்பதுடன்.
முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தனக்கிழைத்த துரோகங்கள் அநீதிகள் பற்றியும், தூய முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் கூட்டமைப்புப்பற்றியும் அந்த அமைப்பினருக்கு விளக்கமளிப்பார் எனத் தெரியவருகின்றது.
"அநீதிக்கு எதிரான குரல் அங்கும் ஒலிக்கும்போல...!"

அ. அஜந்தன்

நீங்கள் அடையவேண்டிய இலக்குகள்பற்றிய குறிப்புக்களை குறைந்தது 15 நிமிடங்கள் ஒதுக்கி நாளாந்தம் எழுதிவைத்துக்கொள்வது நன்று. அவ்வாறு செய்கின்றபொழுது உங்கள் இலக்கு மீதான கவனம் அதிகரிக்கும். அதை அடைவதற்கான சாதக, பாதகக் காரணிகளும் ஆராயப்படும். உங்கள் இலக்கை அடைவதற்கான பாதையைத் திட்டவட்டமாகத் தீர்மானிப்பதோடு, அந்தப் பாதையை வகுப்பதற்கான உங்கள் திறன்களையும் ஆளுமைகளையும் வளர்க்க முடியும்.

# இலக்குகளை அடைந்து வெற்றி பெறுவோம்



நாம் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமாயின் இலக்கும் அதை நோக்கிய பயணமும் அவசியம். நாம் எப்படியான வாழ்வை விரும்புகின்றோம் என்பதற்கேற்ப எமக்கான இலக்குகளை அமைக்கவேண்டும். அப்பொழுதான் எமது வாழ்வு அர்த்தமுள்ள திருப்புமுனைகளுடன் அமையும். எமது வாழ்க்கைப் பயணம் எப்பொழுதும் ஒரு திசையையும் பல நோக்கங்கள் அல்லது இலக்குகளையும் கொண்டது. அந்த இலக்குகளை அடைந்தவுடன் வாழ்வில் ஒரு புதிய நம்பிக்கை பிறக்கும், நாம் சாதித்து விட்டோம் என்ற தன்னிறைவு கிடைக்கும். அத்துடன் இன்னும் பல வெற்றிகளைப் பெறவேண்டும் என்ற உந்துதலும் அதிகரிக்கும். நாம் இலக்குகளை அடைவதற்கு அதனைப் பலமுறை நினைவுபடுத்தி தினசரி கவனம் செலுத்தவேண்டும். உங்கள் இலக்குகளை அடைந்து வாழ்வில் நிறைவுபெற கீழே தரப்படும் ஐந்து படிமுறைகளைக் கையாளலாம்.

**கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை**

சாதகமான பலனைத் தரக்கூடிய இலக்குகளை அடையவேண்டுமாயின் புயலில் அகப்பட்ட சருகுகள்போல் வாழ்வில் நாம் பல திசைகளிலும் இழுக்கப்படுகிறோம். இந்த அங்கலாய்ப்பு சிறு இலக்கைக்கூட அடையவிடாது தடுக்கும். எங்களது இலக்குகளை அமைத்து முன்னுரிமைப்படுத்த குடும்பம், உடல் நிலை, நிதி, வாழ்வின் கடினநிலை மற்றும் ஓய்வு நடவடிக்கைகள் போன்ற எல்லா அம்சங்களையும் கவனத்தில் எடுக்கவேண்டும். பின்னர் ஒவ்வொரு பகுதிகளிலும் என்னென்ன இலக்குகள் உள்ளனவோ அவற்றை ஊக்குவிப்பதால் உங்கள் வாழ்வைச் சாதகமானதாக அமைக்க முடியும்.


மனித இலக்குகள் பற்றி ஆய்வுசெய்ததில் முதன்மை பெறுகிறார் நிபுணர் 'பிரையன் ரேசி'. அவர் தனது 'Flight Plan' என்ற புத்தகத்தில் இலக்குகளை அடையும் வெற்றிச் சூத்திரம் பற்றிப் பேசுகிறார். முதலில் 10 இலக்குகளை எழுதி, அவற்றுள் மிகவும் சிறந்த, நேர்மறையான தாக்கத்தைத் தரவல்ல ஒரு இலக்கை அடையாளம் காட்டி, உங்கள் முக்கிய, திட்டவட்டமான நோக்கங்கள், முதன்மை இலக்கு, வாழ்க்கைப் பயணத்தில் அடையவேண்டிய அடுத்த முக்கியமான நகர்வு என்பவற்றைக் குறிக்கச் சொல்கிறார். பின் ஒரு புதிய தாளில் இலக்கை அடையத் தடையாக இருக்கக்கூடிய காரணிகளையும் அதற்கான தீர்வுகளையும், அந்த இலக்கை அடைவதற்குவேண்டிய மேலதிக தகவல்கள், தேவையான திறன்கள் மற்றும் மற்றவர்களின் உதவிகள் என்பவற்றை பட்டியல்படுத்தி பின்பு அதன் அடிப்படையில் இலக்கு நோக்கிய செயற்பாட்டைத் தொடருங்கள் என்கிறார். சிறந்த முடிவுகளுக்கான SMART இலக்குகளை உருவாக்குங்கள்

S - Specific - குறிப்பிடத்தக்க இலக்கு
M- Measurable - அளவிடக்கூடியதான இலக்கு
A - Achievable - அடையக்கூடிய இலக்கு
R - Realistic - தத்ரூபமான இலக்கு
T - Timelimited - நேரவரையறைக்குட்பட்ட இலக்கு

உதாரணமாக 'சொந்தமாக வியாபாரத்தை ஆரம்பிக்க விரும்புகிறேன்' என்று ஒரு இலக்கை எடுத்தால், அது SMART இலக்காக அமைவது நன்று. "வரும் 2018ஆம் ஆண்டில் பொலித்தீன் பாவனையைக் குறைக்குமுகமாகவும் எமது பிரதேசத்தில் வாழும் துணையிழந்த பெண்கள் தயாரிக்கும் பனையோலைக் கூடைகள், தட்டுக்கள் மற்றும் அழகுசாதனங்களை விற்பனை செயவதன்மூலம் எனது புதிய சொந்த வியாபாரத்தை ஆரம்பிக்கவுள்ளேன்' என்பது கேள்விகளுக்கு இடமின்றி குறிப்பிடத்தக்கதாகவும், அளவிடக்கூடியதாகவும், அடையக்கூடியதாகவும், தத்ரூபமானதாகவும் நேரவரையறையுடனும் உடைய ஒரு முழுமையான இலக்காக அமையும். இங்கே நேரவரையறை இந்த இலக்கின் பயணத்தைத் தூண்டும் ஒரு விடயமாக அமையும். அத்துடன் அடையக்கூடிய இலக்கா தத்ரூபமானதா என்பதிலும் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**முக்கியம் வாய்ந்த இலக்குகளை எழுதிவைப்பது அவசியம்**

நீங்கள் அடையவேண்டிய இலக்குகள் பற்றிய குறிப்புக்களை குறைந்தது 15 நிமிடங்கள் ஒதுக்கி நாளாந்தம் எழுதிவைத்துக்கொள்வது நன்று. அவ்வாறு செய்கின்றபொழுது உங்கள் இலக்குமீதான கவனம் அதிகரிக்கும். அதை அடைவதற்கான சாதக, பாதகக் காரணிகளும் ஆராயப்படும். உங்கள் இலக்கை அடைவதற்கான பாதையைத் திட்டவட்டமாகத் தீர்மானிப்பதோடு. அந்தப் பாதையை வகுப்பதற்கான உங்கள் திறன்களையும் ஆளுமைகளையும் வளர்க்க முடியும்.



**வரக்கூடிய தடைகள் மற்றும் தீர்வுகள்பற்றி சிந்தியுங்கள்**

வின்ஸ்டன் சர்ச்சில் என்பவர் வெற்றி தொடர்பாகக் கருத்துக் கூறுகையில் "வெற்றி என்பது தோல்வியிலிருந்து உற்சாகமிழக்காமல் தோற்பது" என்கிறார். வெற்றிகரமான வாழ்வை அனுபவிப்பவர்கள் எனக் கருதுபவர்கள் தோற்றுப்போனவர்களைவிட பல தோல்விகளைச் சந்திப்பவர்களாகவும் இருப்பர். காரணம் அவர்கள் வெற்றியில் காட்டும் கவனத்தை அதற்கு ஏற்படக்கூடிய தடைகள்மீது காட்டுவதில்லை.

**இலக்கை அடைவதில் தடைகள்**

இலக்கை அடைவதற்கான தடைகளாக தோல்வி பற்றிய பயம், வெற்றிபற்றிய பயம், தாழ்வான தன்னம்பிக்கை என்பன அமையலாம். வெற்றிப்பாதையில் ஏற்படும் தடைகளை தகர்க்கக்கூடிய சாதகமான தீர்வுகள்பற்றிய சிந்தனை இருக்க வேண்டும். இலக்கையடையத் தூண்டும் உந்துசக்தியை அல்லது நிர்ப்பந்திக்கும் விடயங்களில் எமது பார்வையைப் படரவிடவேண்டும். இலக்கை அடைவதற்கான மனப்பாங்கை உருவாக்குதல் உங்களுடைய மனப்பாங்கே உங்கள் வாழ்வைத் தீர்மானிக்கிறது.

எனவே உங்கள் மனப்பாங்கை மாற்றுவதன்மூலம் உங்கள் வாழ்வை மாற்ற முடியும். உங்கள் சாதனை அல்லது இலக்கு என்னவாக அமையும்? இதன்மூலமாக உங்கள் வாழ்வில் நிகழப்போகும் மாற்றங்கள் எவை? என்பதுபற்றிய எண்ணவோட்டம் எப்பொழுதும் உங்கள் மனதில் இருத்தல் அவசியம். அப்பொழுதுதான் எதிர்காலம் பற்றிய ஒரு விம்பத்தினை உங்கள் மனக்கண்ணில் தோற்றிவிக்கமுடியும். அதுவே இலக்கு மீதான ஆர்வத்தைத் தூண்டிக்கொண்டிருக்கும்.


**மற்றவர்களின் ஆலோசனைகளுக்கு செவிசாய்த்தல்**

சிலர் தமக்கு எல்லாம் தெரியும் அதனால் பிறரது கருத்துக்கோ ஆலோசனைகளுக்கோ செவிசாய்க்கவேண்டியதில்லை என்ற தவறான கருத்தோட்டத்தில் உள்ளனர். தாம் எல்லாவற்றிலும் தேர்ச்சிபெற்றவர்கள் என்ற நம்பிக்கை பிறரது அறிவுரைகள், கருத்துக்களை நிராகரிக்கச் செய்கின்றன. ஆனால் யதார்த்தம் என்னவென்றால் இங்கு எவரும் முற்றும் அறிந்தவர்களல்ல. மாறாக வாழ்வில் நாம் அனைவருமே கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள். எனவே நாம் வெற்றிகொள்ள வேண்டுமானால் மற்றவர்களுடைய கருத்துக்கள், ஆலோசனைகளைத் திறந்த மனதுடன் செவிமடுத்து அதுதொடர்பாக ஆராய்வதும் மீளாய்வு செய்வதும் அவசியம். இது இலக்கை அடைவதற்குப் பல பாதைகளை காண்பிக்கும்.

**உறுதியான மனநிலையை அமைத்தல்**

இலக்கை அடைவதென்பது அவ்வளவு இலகுவானதொன்றல்ல என்பதை உணர வேண்டும். இதற்கான பயணத்தில் உறுதிநிலை அவசியம். அதற்கு உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் தொடர்ந்து உறுதியாக உள்ளீர்களா ? உங்கள் உறவுகளை மேம்படுத்துவதில் நீங்கள் தொடர்ந்தும் உறுதியாக உள்ளீர்களா ? நீங்கள் விரும்பும் வேலையைச் செய்து முடிப்பதில் தொடர்ந்தும்உறுதியாகஉள்ளீர்களா? இவை அனைத்திலும் வெற்றி காண்கிறீர்களா ? என்ற வினாக்களை உங்களிடம் நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். இலக்கை எட்டாத வரை தொடர்ந்து செல்லுகின்ற மற்றும் தேவையான விடயங்களைப் பெற்றுக் கொள்ளுகின்ற உறுதியான மனநிலை உங்களுக்குத் தேவை. உங்கள் இலக்கை அடைவதற்குப் பல கட்டங்களில் நிலைபேறு தேவை. வாழ்க்கையில் முக்கிய இலக்குகளை அடைவதென்பது இலகுவானதல்ல என்பதைப் புரிந்துகொண்டிருப்பீர்கள். உற்சாகம், சுய ஒழுக்கம், அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சி ஆகியவை உங்கள் இலக்கை நீங்கள் அடைவதற்கு சிறப்பாகத் தேவைப்படுகின்ற விடயங்களாகும்.

# டியிற்றல் றெக்கோர்டிங்



சி.சிவபாலன்

தற்போது ஒலிப்பதிவுத்துறையில் இலக்கமுறை ஒலிப்பதிவு(டியிற்றல் றெக்கோர்டிங்) மிகவும் பிரபல்யமடைந்து முன்னைய ஒத்திசை ஒலிப்பதிவு(அனலொக் றெக்கோர்டிங்) முறைக்குப் பதிலானதாகவும் மாறிவருகிறது. இலக்கமுறை ஒலிப்பதிவுத் தொழில்நுட்பமானது இலகுவாகப் பதிவுசெய்ய, சேமித்துவைக்க, உருவாக்கம் செய்ய, தேவையானவாறு மாற்றியமைக்க, மீளக்கேட்க இலகுவுடையதாக, வசதிபொருந்தியதாக இருப்பதே அது பிரபல்யமடைவதற்குக் காரணமாக அமைகிறது.

நாம் பேசும்போது அல்லது பாடும்போது உருவாகும்; ஒலி அலைகளை நுணுக்குப்பன்னி (மைக்) ஒத்திசை முறையிலான மின் சமிக்ஞைகளாக மாற்றுகிறது. அவற்றை மாற்றியமைக்கக்கூடிய கருவி அதைஇலக்க முறைமைக்கு மாற்றுகிறது. இந்த இலக்க முறைமை சமிக்ஞைகள் அதற்குரிய ஒலிப்பதிவுக் கருவிகளால் பதிவுசெய்ய, சேமித்து வைக்க, மாற்றம்செய்யக் கூடியவையாக இருக்கின்றன. இவற்றை மீண்டும் கேட்க விரும்பும்போது மறுவளமாக இலக்கமுறை சமிக்கைகள் ஒத்திசை மின் சமிக்ஞைகளாக மாற்றப்பட்டு ஒலிபெருக்கியினூடாக நாம் கேட்கக் கூடியவாறு ஒலி அலைகளாக மாற்றப்படுகின்றன.

**டியிற்றல் றெக்கோர்டிங் வளர்ச்சியின் வசதிகள்**

இலக்கமுறை ஒலிப்பதிவானது உரிய கருவிகளின் துணையுடன் நாம் விரும்பியவாறு மற்றியமைக்க, திருத்தியமைக்கக்கூடியவாறு இருக்கிறது. அதன் ஒலிப்பதிவுத் தரமானது மாற்றமடையாது இருப்பதும் ஒரு சிறப்பம்சமாகும். உதாரணமாக முன்னர் பயன்படுத்தப்பட்ட ஒத்திசைமுறை ஒலிப்பதிவில் திரும்பத் திரும்ப நாம் பதிவு செய்தவற்றைக் கேட்கும்போது அதன் தரம் சிறிது சிறிதாகக் குறைவடையும் ஏனெனில் ஒலிப்பதிவு செய்யப்படும் ஊடகமும் அதனைக் கேட்க நாம் பயன்படுத்தும் கருவியும் தொடுகையுடன் இருப்பதனாலாகும்.

அதாவது நாம் ஒலிப்பதிவு நாடாவில் பாடலைப் பதிவுசெய்து வைத்திருப்போமேயானால், அதனைக் கேட்கும்போது நாம் பயன்படுத்தும் கருவியின் ஒரு பகுதியுடன் ஒலிப்பதிவு நாடா உரசியவாறு செல்லும். இதனால் ஒலிப்பதிவுப் பிரதியின் தரம் குறைவடையும். ஆனால் இலக்கமுறை ஒலிப்பதிவில் அவ்வாறு நடைபெறுவதில்லை.

**இலகுவாகக் கையாளக்கூடிய வசதி**

அத்துடன் இலக்கமுறை ஒலிப்பதிவில் நாம் எவ்வளவு பிரதிகளை அதற்குரிய கருவியின் துணையுடன் எடுத்தாலும் அவற்றின் தரம் மாறுபடுவதில்லை. ஒத்திசை முறை ஒலிப்பதிவுகளை பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய சிறிய பிழைகள் பௌதிக ரீதியான சேதங்கள் சீர்செய்யமுடியாதவை. அதே வேளை இலக்கமுறையில் சிறிய தவறுகள் சேதங்கள் திருத்தியமைக்கக் கூடியவை. 2010ஆம் ஆண்டிலிருந்தே இந்த இலக்கமுறை ஒலிப்பதிவு முறை மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது.

இதன் மூலம் ஒலிப்பதிவில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ள அதேவேளை ஒலிப்பதிவுகளை இலகுவாகக் கையாளவும் இடத்திற்கிடம் அனுப்பிவைக்கவும், இணையத்தினூடாக ஒலிபரப்புச்செய்யவும், ஒலிப்பதிவுசெய்யப்பட்ட பெருமளவு பாடல்களைச் சேமித்து வைக்கவும் முடிகிறது.

**கொள்ளளவைச் சுருக்கினால் மாத்திரம் தரம் குறையும்**

மிகவும் சிறிய கருவிகளில் பெருமளவு ஒலிப்பதிவுகளைப் பதிவுசெய்ய முடிவதால் செலவு குறைந்துள்ளதுடன் அவற்றை விநியோகிப்பதும் இலகுவாக்கப்பட்டுள்ளது. பாடல்கள், ஒலிப்பதிவுகளை இணையவழியாக விநியோகிப்பது இலகுவாக்கப்பட்டுள்ளது. இப்பொழுது பழைய ஒலிப்பதிவுகள் கூட இலக்கமுறைமைக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீண்டகாலச் சேமிப்புக்கு உகந்த வகையில் குறைந்த செலவுடன் அவற்றை பல்வேறு இடங்களில் ஆவணப்படுத்தி வைக்க முடிவதும் இதன் மற்றொரு சிறப்பம்சமாகும். எனினும் இவ்வாறான வேளைகளில் பதிவு செய்யப்படும் கருவிகளின் கொள்ளவுக்கேற்ப ஒலிப்பதிவுகளின் கொள்ளவைச் சுருக்க முற்படும்போது ஒலிப்பதிவின் தரம் குறைவடையக் கூடிய நிலை உள்ளது.

எவ்வாறாயினும் இலக்கமுறைத் தொழில்நுட்பமானது பல்வேறு துறைகளிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திவருவதுடன் பிரபல்யம் அடைந்துவருவதும் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகவே இருக்கிறது.



சகம்தனை முன்னர் படைத்த முதல்வன்
நகம் சதைபோல நேசமாய் மனிதர்
இகம்பரம் மதித்து இயற்கையிற் பொருத்தி
சுகம்தனைக் கண்டு சுவைத்திட வைத்தான்
போர்க்குணம் கொண்டவர் பார்முகம் சிதைத்து
ஊர்க்கொரு குழுவாய் உடைந்து போயினர்
ஆர்க்கெனை அடக்கும் தைரியம் உண்டென
ஆணவக் கொடியை முறுக்கிய மரமாய்
வீணரும் தலைமேல் வளர்ந்து நின்றனர்
அறிவைத் தவறாய் அவரும் நடத்தி
நெறிமுறை தவறிப் படுகுழி வீழ்ந்தனர்
'தான்'எனும் நினைப்பைத் தம்முள் வைத்து
வான்தரை எங்கும் வன்மமே வளர்த்தனர்
மற்றவர் தனை மதிப்பதை மறந்தனர்
உற்றவர் தமக்கும் உபத்திரம் செய்தனர்
கற்றவர் தாமும் கடைகெட்டுப் போயினார்
பொல்லார் எல்லாம் போதிக்கும் குருவாய்
நல்லவர் வேடம் கட்டி நடித்தனர்

கல்வியும் கடையில் சரக்காய்ப் போனது
கள்ளினை அருந்துதல் கௌரவம் தருமென
பள்ளிக்குச் செல்லும் காளையர் நினைத்தனர்
கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கைநன்றே
என்பதை அவரும் கொள்ளை யடித்தும்
கள்ளைக் குடியென மாற்றிக் கொண்டனர்
இளமையில் கல்லென்பது இளமையிற் கள்ளாச்சு
நாளைய நாட்டின் தலைவர்கள் எல்லாம்
சாலை யோரத்தில் சரிந்து கிடந்தனர்
சரித்திரம் படைக்கப் பிறந்தவர் எல்லாம்
தரித்திரம் இவரென்று நொந்திடக் கிடந்தனர்
தந்தைதாய் சொல்லைத் தட்டியே இவர்கள்
மந்தைகள் போலவே எங்கும் மேய்ந்தனர்




விலங்குகள் கூட நகைக்கும் படியாய்
நலங்கொள் மனிதர் நலிந்து போயினார்
உதவி செய்திட ஊதியம் கேட்டனர்
பதவி பெற்றிட மானம் விற்றனர்
சொல்வது ஒன்று செய்வது ஒன்றாய்
மல்லுக் கட்டிக் காரியம் முடித்தனர்
யாரினை நம்பி வாழ்வது என்று
யாவரும் ஒருங்கே சொல்லிக் கொண்டனர்
கறுத்த மனமும் கடுஞ்சின வெறியும்
சிறுமை செய்யும் சின்னத் தனங்களும்
உள்ளே வைத்து உதட்டில் சிரித்தனர்.
மதத்திலும் வெறியைக் கலந்தனர்
அகத்தினை அழுக்கினில் அமிழ்த்தி வைத்தனர்
மனிதர்கள் தாமே கடவுளாய் ஆயினர்
காமத்தின் களிப்பினில் ஆடிக் கிடந்தனர்
போகப் பொருளாய்ப் பெண்ணை நோக்கினர்
நோகும் வார்த்தைகள் சொல்லிச் சுட்டனர்
பெண்களும் பேதையாய் ஆகிப்போயினர்

நல்லார் ஒருவர் உளரோ என்று
எல்லோரும் உரக்கச் சொல்லிக் கொண்டனர்
தன்னை அறிந்து தன்பிழை களைந்து
பின்னவர் தமக்கு முன்னவனாக யாருமில்லை
பிள்ளையை வளர்த்தலும் பெரும் பாடாச்சு
கைபேசிகள் காதல் தூதுவனாச்சு அதனால்
பொய்பேசும் மனிதரும் பெருகி விட்டனர்
சொல்லித் திருத்தவும் மார்க்கமில்லை
காதில் ஈயர் போனைச் சொருகி இருப்பார்
எதற்கும் சிரித்தே எரிச்சல் செய்வார்
எதற்கு நமக்கு வீண்வம்பு என்றே
எவரும் இருக்கார் நாமும் இருப்போம்
அப்படி யென்றால் இதற்குக் காரணம்
போரெனும் புயலா? மனமெனும் பேயா?
காரணம் வினாவிடில் கோழி முதலா?
முட்டை முதலா? என்பதன் முடிவே.

நா. நவராஜ்



# விஜயதாச ராஜபக்சவுக்கு பகிரங்க மடல்!

*அன்புள்ள முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு,*

வணக்கம்! நீங்கள் நலமாக இருப்பீர்கள் என்று நான் கருதவில்லை. ஆனாலும், அரசியலில் நிலைப்பதற்காக அடுத்த கட்ட வியூகங்களை வகுத்துக்கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். கூட்டு அரசில் அண்மையில் நிகழ்ந்த சலசலப்புக்களில் நீங்கள் கதாநாயகனா, வில்லனா அல்லது நகைச்சுவை நடிகனா என்பதில் எனக்குப் பலத்த சந்தேகம் இருக்கிறது. கடந்த வியாழக்கிழமை வெளிவந்த பத்திரிகைகள் எல்லாமே உங்கள் புகைப்படத்தைத்தான் தமது முகப்படமாகச் சித்தரித்து செய்தி வெளியிட்டிருக்கின்றன. ஆனால் நீங்களோ கூட்டு அரசில் வகித்த அமைச்சுப் பதவியிலிருந்து தூக்கப்பட்டிருக்கிறீர்கள். அதுவும் தலைமை அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் அரச தலைவரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வட மாகாணத்தில் தான் அமைச்சரவை மாற்றம் நடந்திருக்கிறதென்றால் அந்தத் தொற்றுநோய் மத்தியின் கூட்டு அரசிலும் பரவியிருக்கின்றது.

நீங்கள் மகிந்தவிடம் சரணடையப் போகிறீர்களா இல்லை ரணிலை விட்டு மைத்திரியை நோக்கி பெட்டி படுக்கையைக் கட்டப்போகிறீர்களா அல்லது கூட்டு அரசின் பார்வையாளராகத் தொடரப் போகிறீர்களா என்பதனை விரைவிலேயே தீர்மானிப்பீர்கள்

ராஜபக்ச என்ற பெயரைக் கேட்டாலே அது நமது முன்னைநாள் பெரியவரின் பட்டாளத்தைத் தான் குறிக்கிறது என்ற சிந்தனையில் குறுக்கீடு நிகழ்த்திக் கொண்டிருந்த உங்களை அமைச்சுக் கதிரையிலிருந்து கடாசியிருக்கிறார்கள். நீதி மற்றும் புத்தசாசன அமைச்சராக விளங்கிய உங்கள் சீட்டைக் கிழிக்கும் அளவுக்கு விவகாரம் போயிருக்கிறதே என்று கிண்டிக் கிளறிப் பார்க்க ஆரம்பித்தால் முன்னுக்குப் பின்னாக உதைக்கிறது.

உங்கள் பெயரில் ராஜபக்ச என்னும் விகுதி இருப்பதனால் உங்களை விலக்கி வைக்கவில்லை. உங்கள் கட்டுப்பாட்டில் வரும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முன்னைய ஆட்சிக்கால பிரமுகர்கள் மீதான இலஞ்ச ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் வேகத்தில் காட்டப்பட்ட கஞ்சத்தனத்தில் உங்களுக்கு பங்கிருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். இது' பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' நிலைப்பாடு எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்குவது தொடர்பில் அரசை விமர்சித்ததன் மூலம் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பாண்மையை நீங்கள் மீறி விட்டதாக குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். இதனைவிட உங்களுக்கு வழங்கப்பட்ட தவறுகளைத் திருத்துவதற்கான காலத்தையும் நீங்கள் கணக்கில் எடுக்கவில்லை என்கிறார்கள்.

கூட்டு அரசுக்கான அங்குரார்ப்பணம் நடந்த ஆரம்பத் தருணங்களை நினைத்துப் பார்க்கிறேன். பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால அரச தலைவர் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்தபோது கோட்டும் சூட்டுமாக அவரைச் சூழ வந்தவர்களில் நீங்களும் ஒருவர். அமையப்போகின்ற கூட்டு அரசு தொடர்பில் கற்பனையில் மிதந்த காலங்கள் அவை. ஆனால் இப்போதோ தமக்குள் இருக்கும் கறுப்பாடுகளைக் கணக்கிட்டுக் களையெடுக்கும் சுய பரீட்சையை கூட்டு அரசு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. நடக்கட்டும்!

தற்பொழுது நீங்களோ மகிந்த ராஜபக்ச நம்பித் தோற்றுப் போன அதே ஆயுதத்தைக் கையில் எடுத்திருக்கிறீர்கள்.



உங்களைச் சிங்கள பௌத்த தேசியவாதியாகக் காட்டிக்கொள்ள முயல்கிறீர்கள். அதனை உறுதிப்படுத்தும் விதமாக புத்த குருமார் சிலரும் உங்கள் பதவி இறக்குதலைக் கண்டித்துப் போர்க்கொடி தூக்கியிருந்தார்கள். ஆனால் இந்த தேசிய வாதி எனும் தத்துவம் ஒரு மண்குதிரை. உண்மையில் இந்த வாதத்துக்கான ஆரம்பத்தைத் தந்தது உங்களுக்கு கிடைத்த புத்த சாசன அமைச்சாக இருக்கலாம். ஆனால் நிறவெறி, இனவெறி, மதவெறி என்பன நீண்டகாலப்போக்கில் தாக்குப் பிடிக்கும் என்பதை நான் நம்பத் தயாரில்லை.

**இந்தப்பழம் புளிக்கும்**

அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டபின் அந்த அமைச்சரவையில் இருந்ததற்காக வெட்கித் தலைகுனிவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். இதனை விட பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பிலான விடயங்களையும் அம்பலத்துக்குக் கொண்டுவர இருப்பதாக தெரிவித்திருக்கிறீர்கள். சபாஷ்! நடக்கட்டும்! ஊர் இரண்டுபட்டால் தானே உண்மை வெளிவரும்!

**ஞானசார தேரருடனான கூட்டு**

மட்டக்களப்பு மங்களாராம விகாரையிலிருந்து கொண்டு அமங்கலமான காரியங்கள் புரியும் சுமணரத்ன தேரரை மகிழ்ச்சிப்படுத்த, ஞானசார தேரரை மட்டக்களப்புக்கு தடைகள் இன்றி அழைத்துச் சென்றபோதே நீதி அமைச்சரான நீங்கள் அநீதி அமைச்சராக மாறி வருகிறீர்களோ என்னும் சந்தேகம் வலுத்திருந்தது. பின்னர் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஞானசார தேரரை மறைத்து வைத்திருக்கும் அமைச்சரவையின் கறுப்பாடு நீங்கள் தான் எனவும் கருதப்பட்டது. முன்னொரு முறை இதே நீங்கள் தான் மதத்தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருவதனைத் தடுக்கும் வகையிலான தனிநபர் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற விதத்தில் கொண்டு வந்திருந்தீர்கள். ஆனால், அது பின்னர் நிறைவேறவில்லை. மதத்தலங்கள் மீதான தாக்குதல் தொடர்பில் மனித உரிமை செயற்பாட்டாளர் சட்டத்தரணி லக்சான் டயஸ் விவகாரத்திலும் நீங்கள் நடந்து கொண்ட விதம் சர்ச்சைக்குரியதாக இருந்தது. இது சமூக ஆர்வலர்கள் மத்தியிலும் விசனத்தைத் தோற்றுவித்திருந்தது.

**ஐ.நா. பிரதிநிதியுடனான குதர்க்கம்**

கடந்த ஜூலை மாதமளவில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த.நா. வின் விசேட அறிக்கையாளர் பென் எமர்சன் பல தரப்பினருடனும் கலந்துரையாடியபின் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் உங்களுக்கும் அவருக்கும் நிகழ்ந்த தர்க்கம், ஊடகங்களில் பேசுபொருளாகியிருந்தது. ஐ. நா. தரப்பு இலங்கையிடம் எதிர்பார்த்த போருக்குப் பின்னான நிலைவர முன்னேற்றங்கள், திருப்திக்குரிய தாக அமைந்திராதமையே அந்த வாக்குவாதத்தர்க்கத்துக்குப் பின்னால் இருந்த காரணமாகும். நீதி அமைச்சராக நீங்கள் மேற்கொண்டிருக்க வேண்டியஎதிர்பார்க்கப்பட்டகருமங்களை நீங்கள் ஆற்றியிருக்கவில்லை என்பது இங்கேயும் தெளிவு.

ஐ.தே.க. வின் நாடாளுமன்ற உறுப்பினரான உங்களை அமைச்சுப் பதவியில் இருந்து நிறுத்தியிருந்தாலும், கட்சியின் உறுப்புரிமையில் கைவைக்கப்படவில்லை. நீங்கள் மகிந்தவிடம் சரணடையப் போகிறீர்களா இல்லை, ரணிலை விட்டு மைத்திரியை நோக்கிப் பெட்டி படுக்கையைக் கட்டப்போகிறீர்களா அல்லது கூட்டு அரசின் பார்வையாளராகத் தொடரப் போகிறீர்களா என்பதனை விரைவிலேயே தீர்மானிப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் வளர்த்தெடுத்த சிங்கள பௌத்த தேசியவாதி விம்பம் தெம்பாகி இதற்கப்பாலும் உங்களைச் செயற்பட வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

*நன்றியுடன்,*
*ஸூடோ ஸ்வாமி*

ராஜபக்ச என்ற பெயரைக் கேட்டாலே அது நமது முன்னைநாள் பெரியவரின் பட்டாளத்தை தான் குறிக்கிறது என்ற சிந்தனையில் குறுக்கீடு நிகழ்த்திக் கொண்டிருந்த உங்களை அமைச்சுக் கதிரையிலிருந்து கடாசியிருக்கிறார்கள்.

# அரசியலில

## இதெல்லாம் சாதாரணமப்பா!



எம்.ஐ.முபாறக்



### எனக்கும் லஞ்சம் கொடுக்க வந்தார்கள்

மத்திய வங்கி பிணை முறி ஊழல் விவ
காரமானது ரவி கருணாநாயக்க அமைச்
சுப் பதவியைத் துறந்ததுடன் ஓய்ந்துவி
டவில்லை. இதுதான் ஆரம்பம். இதனு
டன் தொடர்புபட்ட இன்னும் பலர்
வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படவுள்
ளனர்.
இந்த ஊழலுடன் தொடர்புபட்ட பேர்பேச்சுவல்
நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன அலோ
சியஸ் ரவி கருணாநாயக்கவுக்கு வீடு ஒன்றை வாட
கைக்கு எடுத்துக் கொடுத்ததுபோல் ஐக்கிய தேசிய கட்சி
யில் உள்ள இன்னும் பலருக்குப் பணம் மற்றும் காணி
போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளாராம்.
ஆனால் அவர்களது குடும்பத்தில் உள்ள வேறு நபர்க
ளின் பெயரில்தான் இந்தச் சொத்துக்கள் உள்ளனவாம்.
ஜே.வி.பி. இவற்றைத் தேடுகிறதாம்.
இந்த நிலையில்,ரஞ்ஜன் ராமநாயக்கவுக்கும் அலோசி
யஸ் லஞ்சம் வழங்க முற்பட்ட செய்தி கசிந்துள்ளது. அதா
வது. மத்திய வங்கி பிணை முறி தொடர்பான கோப் அறிக்
கையை வலுவிழக்கச் செய்யும் வகையிலேயே அதில்
ஐ.தே.க. உறுப்பினர்கள் அடிக்குறிப்பிட்டனர். இந்த
அடிக்குறிப்பை இட வைத்தவர் அலோசியஸ் தானாம்.
இதற்காக ஒவ்வொருவருக்கும் அவர் இரண்டு லட்சம்
ரூபா லஞ்சம் வழங்கியதோடு ரஞ்ஜன் ராமநாயக்காவுக்
கும் வழங்க முற்பட்டாராம். ஆனால், அவர் அதனைப்
பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டாராம்.
அண்மையில்,நிகழ்வு ஒன்றில் ரன்ஜனும், ஜே.வி.பியின்
வட மத்திய மாகாண சபை உறுப்பினர் வசந்த
சமரசிங்கவும் சந்தித்துக்கொண்டனர். ஊழல்
கள் தொடர்பில் அவர்கள் பல விடயங்களை
பேசிக்கொண்டனர். அப்போது ரஞ்ஜன், மேற்
படி சம்பவத்தை வசந்த சமரசிங்கவிடம் கூறி
இருக்கின்றார். ஆனால்,யார் யார் இவ்வாறு
பணம் பெற்றார்கள் என்ற விவரத்தைக் கூற
வில்லை யாம்.

"அப்போ, இன்னும் நிறைய நம்பிக்கை இல்லாப் பிரேரணைகளைக் காணலாம்போல..."

### சே...! ஜஸ்ட்டு மிஸ்...



ஒருவர் அமைச்சுப் பதவியில் இருந்து விலகினால் அல்லது விலக்கப்பட்டால் கட்சியில் அவருக்கு அடுத்திருப்பவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். காரணம் அந்தப் பதவி தமக்கு வரும் என்ற நப்பாசைதான்.

அண்மையில் ரவி கருணாநாயக்க அமைச்சுப் பதவியைத் துறந்தபோது அந்தப் பதவியைக் குறி வைத்துப் பலர் ஓடித் திரிந்தனர். நவீன் திஸாநாயக்கவும் அதற்குள் அடக்கம். ஆனால்,அந்தப் பதவி கிடைத்ததோ திலக் மாரப்பனவிற்கு.

அதேபோல்,விஜயதாஸவின் நீதி அமைச்சுக்கும் இவ்வாறே பலர் குறி வைத்தனர். அஜித் பீ பெரேரா, சுஜீவ சேரசிங்க மற்றும் ரஞ்ஜன் ராமநாயக்க போன்றோர் அந்தப் பட்டியலில் அடங்குவர்.

அவர்களுள் கடும் நம்பிக்கையுடன் முயற்சி செய்தவர் அஜித் பீ பெரேராதான். விஜயதாஸவுக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணையைக் கொண்டு வருவதற்கு அடிப்படைக் காரணகர்த்தாவாக இருந்தவர் அவர்தான்.

விஜயதாஸ பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கு முன்பிருந்தே அந்தப் பதவியைக் குறி வைத்து அஜித் முயற்சி செய்யத் தொடங்கினார். இறுதியில் போட்டியில் கலந்து கொள்ளாத தலதா அத்துக்கோரளவிற்குத்தான் அந்தப் பதவி சென்றது.

அஜித் பெரேராவின் பெயர் தலைமை அமைச்சர் ரணிலிடம் பரிந்துரைக்கப்பட்டபோது அவர் சட்டத்தரணியாக இருந்தாலும் அவருக்கு அனுபவம் போதாது என்று கூறி ரணில் தட்டிக்கழித்துவிட்டாராம்.

"சே..! ஜஸ்ட்டு மிஸ்..." என்கிறாராம் அஜித் பீ பெரேரா..."

### பல் உள்ளவன் பக்கோடா சாப்பிடுகிறான்...



"பல் உள்ளவன் பக்கோடா சாப்பிடுகிறான். அவ்வளவுதான் சொல்ல முடியும்..."

திருமணம் முடிக்காது பிரம்மச்சாரிகளாக காலத்தைக் கடத்தும் அரசியல்வாதிகளுள் அமைச்சர் ரஞ்ஜன் ராமநாயக்கவும் ஒருத்தர். அவர் ஒரு நடிகர் என்பதால் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புவார். அந்த மகிழ்ச்சி திருமண பந்தத்தில் அவரை இணையவிடாமல் தடுத்திருப்பதுதான் கவலைக்குரிய விடயம்.

ஆம்,சிங்கள திரைப்படத் துறையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளவர் ரஞ்ஜன். அந்தத் துறையின்மூலம் கிடைத்த பிரபலத்தின் ஊடாகவே அவர் அரசியலுக்குள் நுழைந்தார். வயது 54ஐத் தொட்டுவிட்டது. ஆனால், இன்னும் அவருக்கு திருமணம் செய்துகொள்ளும் ஆசை வரவில்லை. குடும்பங்கள்,நண்பர்கள் தினமும் திருமணத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆனால்,அவருக்கோ அதில் சிறிதளவேனும் நாட்டமில்லை. அதற்கு அவர் கூறும் காரணம் என்ன தெரியுமா? இப்போது அனுபவித்து வரும் சுதந்திரம் திருமணத்தால் பறிபோய்விடும் என்பதுதான்.

திரைப்படத்தில் விரும்பிய ஒரு பெண்ணுடன் கட்டிப்பிடித்து ஆடிப்பாட முடிகிறது. விரும்பிய ஒரு பெண்ணுடன் பழக முடிகிறது. சினிமா புதுமையான ஒரு சுதந்திரத்தை எனக்குத் தந்துள்ளது. திருமணம் இந்தச் சுதந்திரத்தை எல்லாம் பறித்துவிடும். ஆகவே,எனது சுதந்திரத்தைப் பறிக்கும் திருமணம் எனக்குத் தேவை இல்லை என்று அவர் கூறுகிறார். திருமணத்தின் மூலமாக கிடைக்க வேண்டிய எல்லாம் இப்போது தனக்கு தாராளமாக கிடைக்கின்றது என்று அவர் மறைமுகமாகக் கூறுகின்றார்.

## மகிந்த அணியின் கறுப்புப் பணம்; வெளிநாடுகளில் விசாரணை



மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் சிக்கி ரவி கருணாநாயக்க அமைச்சுப் பதவியை இழந்ததைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி மீது திருட்டுப் பட்டம் கட்டப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் மகிந்தவின் திருடர்களை பிடிப்பதற்கான நடவடிக்கையை ரணில் துரிதப்படுத்தாமைதான்.

ரவியின் பதவி விலகலைத் தொடர்ந்து ரணிலைச் சந்தித்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக்கு ஏற்பட்டியிருக்கும் அவப் பெயர் பற்றி அவருக்கு எடுத்துக் கூறினர். மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற மிக முக்கியமான ஊழல்கள் பற்றியும் வெளிநாடுகளில் கறுப்புப்பணம் பதுக்கி வைத்திருக்கின்றமை பற்றியும் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறினர். அதன் அடிப்படையில் இப்போது வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் மகிந்த அணிகளின் கறுப்புப் பணம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றனவாம்.

அந்த அடிப்படையில் 25 நாடுகளில் 86 கோப்புகள் தொடர்பில் விசாரணை நடத்தவதற்கு அந்த நாடுகளிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாம். பிரிட்டனில் 39 கோப்புகள் தொடர்பிலும்,சிங்கப்பூரில் 13 கோப்புகள் தொடர்பிலும் ,அமெரிக்காவில் 8 கோப்புகள் தொடர்பிலும் விசாரணை நடத்துவதற்கு அந்த மேற்படி நாடுகளிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாம். இது போக,39 கோப்புகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்.

"இனியாவது திருடர்கள் சிக்குவார்களா எனப் பார்ப்போம்..."

# யசாலை

## வேத வைத்தியசாலை)

## விழாவும்

வை நேரம் : காலை 7.00 முதல்
மை விடுமுறை நாள். வெளிமாவட்ட
கொண்டு வரவும்.

**5333**

.12128.
ரயாளர்
கல்லூரி


Dr. K.I. இராஜரட்ணம்
அரச பதிவு இல.6067
24ஆவது பரம்பரை



சமய வழிபாடுகள்








Mrs.சியாமா துரைரட்ணம் அவர்கள் (ஆணையாளர், சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்)





Dr.N.யோகராஜன் அவர்கள் (பணிப்பாளர்-தொழில்நுட்ப கல்வி பயிற்சி திணைக்களம் தலைமைச் செயலகம்

சட்டத்தரணி மு.றெமீடியஸ் அவர்கள்








r. க. ராஜரட்ணம் அவர்கள்

திருமதி பவானி அவர்கள் (பிரான்ஸ்)

திரு.இ.ரதீஸ்வரன் அவர்கள்
பணிப்பாளர் Vethesta Vission for Differnlyable

திரு.சி.செந்தூரன் அவர்கள்
VB.Sc Agriculture ஜனாதிபதி செயலகம்









திருமதி.செ.நவீனா அவர்கள் (MLT France)

சி.சிந்தியா அவர்கள் மருத்துவப்பீட மாணவி (France)








தி அவர்கள்
-உரும்பிராய்.

திரு.மா.சிதம்பரநாதன் (முன்னாள் விரிவுரையாளர் இராமநாதன் அக்கடமி

திரு. க.தங்கராஜா அவர்கள்

ஜெ.யுகன்யா அவர்கள்

Dr. ஜெ. ஜெயலன் அவர்கள்








லன்

சுதேச வைத்தியர்
திருமதி இ.சுசிலா அவர்கள்

திருமதி த. சிவகங்கை அவர்கள்

து. விவேகானந்தக் குருக்கள்

திரு.[illegible] அவர்கள்
[illegible]

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 27.08.2017 தொடக்கம் 02.09.2017 வரை

### மேடம்

சுக்கிரன், புதன், சந்திரன் அனுகூல பலன் தருவர். புதிய வாய்ப்புக்களைச் சரிவர பயன்படுத்திக் கொள்வது அவசியம். உடன்பிறந்தவர்கள் உங்கள் ஆலோசனைப்படி செயற்படுவர். வாகனப் பயன்பாடு அளவுடன் இருக்கும். புத்திரர்களின் கவனக்குறைவான செயலால் சிரமம் எதிர்கொள்ள நேரிடலாம். கடன் தொந்தரவு குறையும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் முயற்சி தேவைப்படும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றுவது நல்லது. பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

### இடபம்

செவ்வாய், ராகு, குரு சுக்கிரனால் தாராள நற்பலன் கிடைக்கும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். முக்கியமான பணிகள் சிறப்பாக நிறைவேறும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் உங்கள் எண்ணங்களை உணர்ந்து செயற்படுவர். அக்கம் பக்கத்தினரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவியின் செயற்பாடு வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தொழிலில் உற்பத்தி பெருக்கத்தால் லாபம் அதிகரிக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. பணியாளர்கள் கடமையை உணர்ந்து பணிபுரிவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற விடாமுயற்சி தேவைப்படும்.

### மிதுனம்

சூரியன், சனீஸ்வரர், சுக்கிரனால் அளப்பரிய நன்மை உண்டாகும். வசீகரப் பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். பலரும் வியந்திடும் வகையில் செயற்படுவீர்கள். சகோதர வழியில் சுப விடய பேச்சு நடக்கும். தாய்வழி உறவினர்கள் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். வீடு, வாகன வகையில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும். பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். விவகாரம் அணுகாத மகிழ்ச்சிகரமான வாழ்வு அமையும். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகையும், வெகுமதியும் கிடைக்கும். பெண்கள், உறவினர்களை நன்கு உபசரிப்பர்.

### கடகம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை அதிகரிக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகள் சில விடயங்களில் பிடிவாதம் கொள்ள நேரிடலாம். பூர்வீக சொத்து மூலம் வருமானம் கிடைக்கப் பெறுவீர்கள். ஒவ்வாத உணவு வகைகளை தவிர்க்கவும். உறவினர்களின் குடும்ப விழாவில் கலந்துகொள்வீர்கள். மனைவியின் பெருந்தன்மை குணம் கண்டு மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டியை மாற்று உபாயத்தால் சரி செய்யவும். இலாபம் ஓரளவாகவே காணப்படும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்றுக்கொள்வர். மாணவர்கள் கூடுதல் பயிற்சியால் சிறப்பாக படிப்பர்.

### சிங்கம்

சுக்கிரன், குரு, கேது அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை விலகும். வாழ்வில் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். பேச்சும், செயலும் வாழ்வின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் அறிவு, செயல்திறனில் மேம்பட்டு விளங்குவர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். கடன் தொந்தரவு குறையும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் அக்கறையுடன் படிப்பது நல்லது.

### கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளன. முன்னேற்றப்பாதையில் வெற்றி நடை போடுவீர்கள். உங்களை இகழ்ந்து பேசியவரும் அன்பு பாராட்டுவர். புதிய வீடு, வாகனம் விரும்பியபடி வாங்க வாய்ப்புண்டு. பிள்ளைகள் உங்கள் சொற்கேட்டு நடந்து பெருமை சேர்ப்பர். குடும்பத்தினருக்காக தாராளமாகப் பணம் செலவழிப்பீர்கள். நோய் தொந்தரவு குறையும். மனைவி வழி சார்ந்த உறவினர் அன்பு பாராட்டுவர். தொழிலில் புதிய உத்தியால் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். லாபம் உயரும். பணியாளர்கள் பணித்திறனில் மேம்படுவர். விரும்பிய இட, பணிமாற்றம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்புடன், விளையாட்டிலும் ஈடுபடுவர்.

### துலாம்

சூரியன், புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். புதியவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கப் பெறுவீர்கள். சொல், செயலில் புத்துணர்ச்சி வெளிப்படும். திட்டமிட்ட பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் அன்பு பாராட்டுவர். வெளியூர் பயணம் மூலம் விருப்பம் நிறைவேறும். பிள்ளைகள், பெற்றோரிடம் அதிக பாசம் கொள்வர். சீரான ஓய்வு உடல்நலனை பாதுகாக்கும். மனைவியின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவை பணம் வசூலாகும். பணியாளர்கள் மனநிறைவுடன் பணிபுரிவர். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

### விருச்சிகம்

சூரியன், குரு, சுக்கிரன், கேது அளப்பரிய நற்பலன் தருவர். மனதில் உற்சாகம் பிறக்கும். செயல்களில் இருந்த தாமதம் விலகும். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். நிலுவைப்பணம் வசூலாகும். எதிரியால் உருவான தொல்லை மறையும். மனைவியின் அறிவார்ந்த செயல் குடும்பநலன் சிறக்க உதவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை குறித்த காலத்தில் நிறைவேற்றுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவுவர்.

### தனுசு

சுக்கிரன், புதன், சந்திரனால் நன்மை உருவாகும். நேர்மையான வழியில் செயற்படுவீர்கள். அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றுவது நல்லது. பிள்ளைகள் ஆடம்பர செயல்களில் நாட்டம் கொள்வர். ஆரோக்கியம் மேம்படும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் மனதில் உங்கள் மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

### மகரம்

குரு, சனீஸ்வரர் வியத்தகு நற்பலன் தருவர். நண்பர்களின் மனம் அறிந்து உதவி செய்வீர்கள். திட்டமிட்ட செயல்கள் சிறப்பாக நிறைவேறும். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் எதிர்கால [illegible] தேவையான பணிபுரிவீர்கள். பூர்வீகச் சொத்தில் பணவரவு அதிகரிக்கும். சத்தான உணவு உண்பதால், ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் [illegible]த்தைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க அதிக உழைப்புத் தேவைப்படும். பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், நகை இரவல் கொடுக்க வேண்டாம். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்வது கூடாது

### கும்பம்

ராகு, செவ்வாய், புதன் அனுகூலமாக உள்ளனர். மனதில் துணிச்சல் வளரும். தம்பி, தங்கையர் அதிக அன்பு பாராட்டுவர். வாகனத்தின் பராமரிப்புச் செலவு கூடும். பிள்ளைகள் தமது கடமையை உணர்ந்து செயற்படுவர். உறவினர்கள் வீட்டு விருந்து, விழாவில் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்வீர்கள். கடன் தொந்தரவு குறையும். குடும்பத் தேவை குறையின்றி பூர்த்தியாகும். மனைவியின் குணம் அறிந்து விட்டுக் கொடுப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படும். இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிவர். மாணவர்களுக்குப் படிப்பில் அதிக கவனம் தேவை. பாராட்டுகளும், கௌரவமும் கிடைக்கும்.

### மீனம்

சூரியன், குரு, சுக்கிரன், கேது நற்பலன் வழங்குவர். சொல்லிலும், செயலிலும் நேர்மை நிறைந்திருக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். புதிய முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். வாகனப்பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகள் கல்வி, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். பூர்வீக சொத்தில் பணவரவு அதிகரிக்கும். மறைமுக எதிரிகள் சொந்த சிரமங்களால் விலகுவர். மனைவியின் ஆலோசனை வாழ்வில் புதிய மாற்றத்தை உண்டாக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி செய்வீர்கள்.

# பார்வதி

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

இட்டுச் சென்ற சைக்கிள் அவளது வீட்டுப் படலைக்கு முன்பாக நிற்க, கால்களை நிலத்தில் ஊன்றியபடி நின்றவாறே ஒருகணம் சிந்திக்கிறேன்.

மனமோ முன்தள்ள உந்தப்பட்ட என்னால் இருதடவை பெல்லும் அழுத்தப்பட்டு விடுகிறது.

"யாரொ படலேக்கை வந்து நிண்டு பெல்ல டிக்கினம் ஆரெண்டு போய்ப் பாரடி..."

கையில் ஒரு குழந்தையுடன் வந்த நடுத் தரப் பெண் என்னை விசாரிக்கிறாள். அவளை நன்றாக உற்றுப் பார்க்கிறேன். அது அவளது அக்காள் தான். என்னைப் பற்றி அவளிடம் கூறுகிறேன்.

"எத்தினபேர் உப்புடி வந்து நிண்டிட்டுப் போயிருக்கினம் தம்பி... ஆரெண்டு நினைவு வைச்சிருக்கிறது? சின்னப் பெடியளாக இருந்ததுகளெல்லாம்... ஆக்களைவிடப் பெரிய மீசையும், தாடியும் வைச்சுக் கொண்டு இளந்தாரியள் ஆகிட்டுதுகள்..."

என்னைப் பார்த்து இப்படிச் சொன்னதும் எனது மீசையையும், தாடியையும் மனதால் நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு வெட்கம் எங்கிருந்தோ வந்து ஆட்கொண்டு விடுகிறது. சைக்கிளைப் பிடித்துக் கொண்டு அப்படியே நின்ற என்னைப் பார்த்து.

"ஏன் தம்பி... அப்புடியே நிக்கிறா... இங்கால வாவன்..."

கூறியவாறே திண்ணையால் ஏறி தலைவாசலுக்கு நடுவால் மறுபக்கம் முற்றத்துக்குச் சென்ற அவளின் அக்காவைப் பின்தொடர்ந்து சைக்கிளை ஸ்ராண்ட்டில் நிறுத்திவிட்டு நானும் நுழைந்து செல்கிறேன்.

எனது கண்கள் அவளைப் பார்க்கும் ஆவலால் அங்கும் இங்குமாக எங்கெல்



லாமோ சென்று மீண்டன. அடுக்ககளை விறாந்தையில அவளது தாயும், இன்னொரு புதிய றெஷிங்கவுண் பெண்ணும் கட்டைகளில் குந்தி இருந்து சமையலுக்கான அடுக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

என்னைப் பற்றிக் கூட்டிப்போன அவளின் அக்காள் விவரித்தாள். நானும் சேர்ந்து சிலவற்றைக் கூறி அறிமுகம் செய்து கொண்டேன். பலகதைகளுக்கு இடையில் சமயத்தை பயன்படுத்திக்கேட்டேன்.

"என்னோட... நான் முந்தி நிக்கேக்க விளையாடுமே... பார்வதி... அவ எங்கை..."

மூவரும் என்னைப்பார்த்து தமக்குள் மெதுவாகச் சிரித்தார்கள். சிறிது தாமதித்து அவளின் அக்காள்

"இவதான் ...."

துருவலை மீதமர்ந்து தேங்காய் துருவிக்கொண்டு தாய்க்குப் பக்கத்தில் இருந்த றெஷிங்கவுண் பெண்ணைக் காட்டிச் சொன்னாள். அவளை முதலில் நான் பார்த்திருந்தாலும், ஆவலுடன் புதிதாகப் பார்க்கிறேன்.

றெஷிங்கவுணுக்கு மேலால் எடுத்துவிடப்பட்டிருந்த தாலிக்கொடி என்கண்களில் துருத்தியது. எனக்கோ கண்கள் கலங்கி விடும் போலிருந்தன. என்னுடைய இக்கட்டான நிலைமையை என்னைப் பார்த்த அவளுக்குப் புரிந்திருக்கவேண்டும்.

துருகுவலையால் எழுந்து அப்பால் செல்கிறாள். அவளைப் பற்றிய நினைவுகள் எனக்குள் இருந்ததுபோல் அவளுக்கும் என்னைப் பற்றிய நினைவுகள் இருந்திருக்க வேண்டும். அவளது அந்தப் பார்வையில் உணர்ந்து கொண்டேன்.

அப்பால் சென்று மறைவாக நின்று சைகையால் தமக்கையை அழைத்து மெதுவாக அவள் குசுகுசுத்ததும் என்னுடைய காதுகளில் விழுந்தன.

"இவரைத்தான்... அண்ணர் எனக்குக் கல்யாணம் பேசினவர்..."

தன்னுள்ள விருப்பை அண்ணர் மீது சுமத்தி வெளியிட்டாளா? எனக்காகத் தயாரித்த தேனீரைப் பருகி அவர்களிடம் விடைபெற்று சைக்கிளில் பயணத்தைத் தொடர்கிறேன்.

காலத்தால் பிந்திவிட்ட என்னை அவள் எப்படி நினைத்தாளோ? எனக்குத் தெரியாது என்னுள்ளமோ தெளிந்த நீரோடைபோலாகி விட்டிருந்தது.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 486

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | | ■ |
| 5 | | | | ■ | ■ | ■ | 6 |
| | ■ | 7 | | | ■ | 8 | |
| ■ | 9 | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | | ■ | |
| 13 | | | ■ | 14 | | | ■ |
| 15 | | ■ | 16 | | | ■ | 17 |
| | ■ | 18 | | | ■ | 19 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:...................................................

- - - - - - - - - - - - - - - -

### இடமிருந்து வலம்

1. குண்டு துளைக்காத வாகனம்
5. வணக்கம் செலுத்துதல்
7. காதுக்கினிய ஒலி
8. மூடை
9. முயற்சி செய் / ஒரு மிருகம்
10. (கண்ணீர்) சிந்த
11. குடிக்க
12. மதிப்பீடு
13. ஒரு பிரபல்யமான விளையாட்டு
14. பகுதி
15. தேனீக்கள் மூலம் பெறப்படுவது
16. சிறு நீர்
18. அகதிகள் தற்காலிகமாகத் தங்க வைக்கப்படும் இடம்
19. ஓர் உரிச் சொல்

### மேலிருந்து கீழ்

1. துயரம்
2. பாதை
3. நாடாளுமன்றத் தலைவர்
4. செடி, கொடி காய்தல்
6. அந்தணன்
8. புகையிலையால் தயாரிக்கப்பட்ட ஒரு பொருள்
9. பழனியில் குடியிருக்கும் கடவுள்
10. வியாபாரம்
11. பிச்சைக்காரன்
12. மண்டையோடு
16. தோழன
17. நதி

---

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 484 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) தவிடு (3)சாதகன் (5)குரு (6)பசு (7)திட்டம் வகு (10)பதவி (11)சம்சாரம் (12)பாகு (13)சாதி (15)கறுப்பி (17)குமுறுதல் (18)புரி

**மேலிருந்து கீழ்**

(1)தகுதி (2)விருட்சம் (3)சாசுவதம் (4)கணை (6)பம்பரம் (8)குவி (9)மிளகு (11)சவுக்கு (12)பாதிப்பு (13)சாறு (14) நாறு (15)கல் (16)பிரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=

பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.486**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (16.09.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.486இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 10.09.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

---

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 484 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

திருமதி. ஸ்ரீகிருஷாந்தி உமாபதிசிவம்,
இல.18 வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**

சியாமளா கிறிஸ்ரோப்பர்,
கன்னியர் மட வீதி,
பெற்றா, மன்னார்.

**3 ஆம் பரிசு**

ஞா. துரை,
இல.85/4, கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**

கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை

**5 ஆம் பரிசு**

த. நிர்மலம்,
இல.2, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

யூ. ஹெவன்லி பச்சேக்,
வங்காலை - 01. மன்னார்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில் போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவை பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 484 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**




## இணுவில் பருத்தியடைப்பு

# திருவருள் மிகு ஸ்ரீ செகராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்

## ஜீர்னோத்தாரன அஷ்டபந்தன சமர்ப்பன

# பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

**இன்று (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை**

**காலை: 6.11 முதல் 7.21 வரை**

### ஐங்கரன் அடியார்களே!

இந்து சமுத்திரத்தின் முத்தாகவும் திருமூலரால் சிவபூமி என்று போற்றப்பட்டதுமான இலங்கை தீவின் வடபால் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாண நகரில் வடக்கே கந்தபுராணக் கலாச்சாரமும் கலைகளும் சிறந்து ஓங்கி நிற்பதமான இணுவையம் பதியிலே செகராஜசேகர மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டு பூஜிக்கப்பட்டதுமான செகராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு புதிய சிற்பங்கள் அழகிய வர்ண வேலைகள் செய்யப்பட்டு நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் ஹீரீஷ் மருது ஆவணி மாதம் 11 ஆம் நாள் (27.08.2017 ஞாயிற்றுக்கிழமை) சுவாதி நட்டத்திரமும் பூர்வபட்ச ஷஷ்டி திதியும் சித்த யோகமும் கூடிய நன் நாளில் காலை 6.11 மணிமுதல் 7.21 மணிவரையுள்ள சிம்மலக்கின சுபமுகூர்த்த வேளையில் ஸ்தூபிகள் விநாயகப்பெருமான் முதல் சண்டேஸ்வரர் வரையான அனைத்துத் தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற செகராஜசேகரப் பெருமான் திருவருள் கைகூடியுள்ளது. கிரியா ஆரம்பம் முதல் கும்பாபிஷேகம் வரை நடைபெறும் கிரியைகளை ஆலயம் வந்து பங்குபற்றி விநாயகப் பெருமான் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**ஆலய கட்டுமான வேலை**
**சிற்பவேலைகள் மற்றும் வர்ண வேலைகள்**
**ஸ்தபதி க. பரமானந்தம் (தென்இந்தியா)**
**076 729 9911**

**மாலை 5.00 மணியளவில் பஞ்சமுகார்ச்சனை நடைபெற்று சுவாமி வீதியுலா இடம்பெறும் எம்பெருமானின் இஸ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.**

**தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்**

சங்கரப்பிள்ளை - சின்னத்துரை குடும்பம்
ஆலய மணியகாரர்

# கூர்ம அவதார மகத்துவம் பேணும்
# பொன்னாலை சிறி வரதராஜப்பெருமாள் ஆலயம்

இ.உமணகேனன்



திருவுருட்பெருமையும்,வரலாற்றுப் பழமையும் கொண்ட திருமால் ஆலயங்களில் பொன்னாலை சிறி வரதராஜப்பெருமாள் கோவில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாகத் திகழ்கிறது. இலங்கையின் பிரசித்தி பெற்ற ஆலயங்களின் தோற்றம், அவற்றின் பெருமை என்பன குறித்துப் பேசும் தட்சண கைலாய புராணத்தில் இவ்வாலயத்தின் தோற்றம்,மகிமை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**மகோற்சவம்**

ஆவணி கிருஷ்ண ஜெயந்தியைத் தேர் உற்சவமாகக் கொண்டு பத்தொன்பது தினங்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. அத்துடன் வைகுண்ட ஏகாதசியைத் தேர் உற்சவமாகக் கொண்டு மார்கழி உற்சவம் நடைபெறுகிறது. இத்தகைய வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட சிறிதேவி, பூமிதேவி உடனுறையும் கூர்ம அவதார ஷேத்திரமான பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று ஆரம்பமாகிறது.

**தல வரலாறு**

முன்பொரு காலத்தில் மீன்பிடித் தொழில் கொள்ளும் ஒருவன் 'பொன்னாலயம்' என்னும் ஆலயத்திற்கு மேற்கிலிருக்கும் சமுத்திரத்தில் மீன்பிடிப்பதற்காக வலையை வீசினான். அப்போது அவன் வலையில் அந்த அதிசய ஆமை பிடிபட்டது.

பொன் போல் மின்னிப் பிரகாசிக்கின்ற ஆமையைத் தந்தமைக்கு ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி அதனைப் பிடிக்க முனைந்த போது அது ஓடத் தொடங்கியது. பின் ஒருவாறு அந்த ஆமையைத் தனது கைகளால் பிடித்துக் கொண்டான். என்ன அதிசயம் ஓடிய ஆமை கல்லாமை ஆகியது. ஆமையைத் தொட்ட இளைஞனோ தேவ வடிவம் பெற்று விட்டான். அங்கே பொன்.விமானம் என்பன தோன்றியதுடன் அவனை ஏற்றியும் சென்றது. கூர்ம அவதாரம் கொண்டு ஆடல் செய்தது நாராயணனே என்று எல்லோரும் வியந்து வணங்கினர். கல்லாமை உருவம் கொண்ட கண்ணனுக்கு முறைப்படி ஆலயம் அமைத்தனர். அந்தக் கல்லாமை தற்போதும் ஆலயத்தின் கற்பக்கிரகத்தில் உள்ளது. மூல விக்கிரகத்துக்கான தீப ஆராதனையின் பின் இந்தக் கல்லாமைக்கும் தீபம் காட்டப்பட்டு வருவது இன்று வரை தினமும் நடைபெறும் ஒரு வழிபாடு இயற்றல் நடைமுறையாக இருந்துவருகிறது.

**நாராயணன் அவதாரம்**

மேலும் தட்சண கைலாய புராணம் பின்வருமாறு கூறுகின்றது. "முன்னொரு காலத்தில் துருவாச முனிவர் இட்ட சாபத்தால் சபிக்கப்பட்ட இந்திரன் சாப விமோசனத்தின் பொருட்டு அந்த முனிவரின் திருவடிகள் பணிந்தான். தனது பிழையைப் பொறுத்தருள்க என வேண்டவும் இரக்கமடைந்த முனிவர் கவலை கொள்ள வேண்டாம். சேது மத்தியில் இருக்கும் இலங்கை தேசத்தில் பொன்னாலை எனும் இடத்தில் வலைஞர் குலத்திலே நீ பிறப்பாய். நாராயணன் ஒரு காலத்தில் கூர்ம அவதாரம் செய்வார். வலையினால் அந்தக் கூர்மம் கட்டப்பட்டு நீ ஆமையைத் தொட்டதும் சாபம் நீங்கப் பெறுவாய்." என்று கூறித் துருவாச முனிவர் தன் இருப்பிடத்துக்குச் சென்றார். துருவாச முனிவர் இட்ட சாபத்தால் இந்திரனே வலைஞனாகப் பிறந்தான். கூர்மவேடம் கொண்ட மகா விஷ்ணுவே வலையால் கட்டப்பட்டார். வலைஞனின் சாபம் விஸ்ணுவாகிய ஆமையின் அங்கம் தீண்டப்பட்ட உடனேயே நீங்கிவிட்டது. இந்த வேளையில் கூர்ம அவதாரம் கொண்ட விஸ்ணு வலைஞனுக்குத் தன் திருச்சொரூபத்தைக் காட்டி ஆசீர்வதித்து மறைந்தருளினார். இப்போதும் விஸ்ணுவின் திருவடிச்சு வடு அந்த இடத்திலே இருக்கிறது. மிகப் பரிசுத்தமான அருள்நிலையாக வணங்கப்படுகிறது. இதற்கு 'திருவடி நிலை' என்று பெயர் குறிப்பிடுகின்றனர்.



இந்த ஆலயத்தின் பத்ததி சுருவில் சோ.நடராஜர் குருக்களால் எழுதப்பட்டதாகும். ஏழு வீதிகளைக் கொண்டு ஆலயம் அமையப்பெற்றிருந்தமையும்.டச்சுக்காரர்களால் ஆலயம் உடைக்கப்பட்டு அதன் கற்கள் ஊர்காவற்றுறை கடல் கோட்டை மற்றும் சங்கானைக் கோட்டையைக் கட்டுவதற்கு உபயோகப்படுத்தப்பட்டது என்பதும் இன்று வரையுள்ள கர்ணபரம்பரைக் கதைகளாகும். தவிர ஆலயம் வருகை தந்து மனமுருகி நாராயணனை வழிபட்டால் சகல துன்பங்களும் நீங்கிச் சிறப்பான வாழ்வைப் பெறலாம் என்ற அற்புத அனுபவத்தைப் பெற்ற அடியார்கள் நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பெரும் திரளாக வருகை தருகின்றனர். ஆலய வளாகத்தில் அவர்கள் தங்கி நின்று பூஜைவழிபாடுகளில்பங்குபற்றுகின்றதன்மை பல கால வழமையாக இருந்து வருகிறது.

ஆவணி மாதம் கிருஷ்ணபட்ச அட்டமியாகிய விசேட தினத்தில் அவதரித்தவரும், பொன்னாலையத்திலே வாசம் செய்பவரும்,லோகரட்சரும் ஆகிய அச்சுதப் பெருமாளை எவன் ஒருவன் அன்புடையவனாய்த் தன் ஜென்ம காலத்தில் தரிசனம் செய்கிறானோ அவனுடைய பாவங்கள் அழிந்து போகும். அவன் புத்திர பௌத்திரர்களோடு கூடியவனாயும், தீர்க்காயுளை அடைந்து இம்மையிலே சகல போகங்களையும் அனுபவிப்பான். மறுமையிலே வைகுண்ட லோகத்தை அடைந்து விஷ்ணுவின் பாதக் கமலங்களைப் பணிந்து இன்பக் களிப்புற்று வாழ்வான்.

**ஆலய நிர்வாகம்**

ஆலய நிர்வாகத்ததைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்களால் நிர்வாகச் செயற்பாடுகளில் மக்கள் பங்களிப்பு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் பரிபாலன சபை உருவாக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டில் அரச தலைவர் அறிவுறுத்தலின்படி நிர்வாக சபையில் மாற்றம் கொண்டுவரப்பட்டது. அக்காலத்தில் அறிமுகம் பெற்ற இந்தப் பரிபாலன சபை முறைமை தற்போதும் நடைமுறையில் இருந்துவருகிறது. இந்தக் காலப்பகுதியிலே இரு தடவைகள் மகாகும்பாபிசேகமும், ராஜகோபுர மற்றும் தேர்த்திருப்பணிகளும் நிறை வேற்றப்பட்டன. ஆலயம் சார்ந்த ஏனைய பல திருப்பணி வேலைகளும் பூர்த்தியாகியுள்ளது.

**வழிபாடும் பயனும்**

ஆவணி மாதம் கிருஷ்ணபட்ச அட்டமியாகிய விசேட தினத்தில் அவதரித்தவரும், பொன்னாலையத்திலே வாசம் செய்பவரும்,லோகரட்சரும் ஆகிய அச்சுதப் பெருமாளை எவன் ஒருவன் அன்புடையவனாய்த் தன் ஜென்ம காலத்தில் தரிசனம் செய்கிறானோ அவனுடைய பாவங்கள் அழிந்துபோகும். அவன் புத்திர பௌத்திரர்களோடு கூடியவனாயும், தீர்க்காயுளை அடைந்து இம்மையிலே சகல போகங்களையும் அனுபவிப்பான். மறுமையிலே வைகுண்ட லோகத்தை அடைந்து விஷ்ணுவின் பாதக் கமலங்களைப் பணிந்து இன்பக் களிப்புற்று வாழ்வான். மகோற்சவ காலத்திலே பெருமானின் மீளா அடியவர்கள் ஆலயம் வருகை தந்து பக்தி சிரத்தையோடு வழிபாடு இயற்றி அருள் இன்பப் பேற்றினைக் கண்டு வாழ்வில் மகிழ்வுற்றிருங்கள்



# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விண்ணப்பப் படிவம் இணையத்தளத்தில் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம்

## 2018 / 2019 கல்வியாண்டுக்கான

## கல்வி முதுமாணி (Coursework)

## பட்ட நிகழ்ச்சித்திட்டதிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மேற்கண்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்படிவங்கள் 27.08.2017 இலிருந்து 28.09.2017 வரை ஏற்றுகொள்ளப்படும். இந்நிகழ்ச்சிதிட்டமானது கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய நிலையங்களில் மட்டும் நடத்தப்படும். குறித்த நிலையங்களுக்கான உத்தேச மாணவர் தொகை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

| நிலையம் | ஆகக்கூடிய மாணவர் தொகை | | |
|---|---|---|---|
| | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| கொழும்பு | 100 | 100 | 50 |
| கண்டி | 50 | - | - |
| யாழ்ப்பாணம் | - | 50 | - |

- நுழைவுத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள், 15 ஒக்டோபர் 2017 இல் நடாத்தப்படும் தெரிவுப் பரிட்சைக்கு தோற்றுதல் வேண்டும். தெரிவுப் பரிட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகள் நிகழ்ச்சித்திட்டத்தில் அனுமதிக்க முன்னர் நேர்முகப் பரிட்சைக்கும் சமூகமளிக்க வேண்டும்.
- குறிப்பு : நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் முன்னர் தமது தகைமைகளை நுழைவுத் தகைமைகளுடன் சரிபார்த்துக்கொள்ளுவது விண்ணப்பதாரிகளின் பொறுப்பு ஆகும். தெரிவுப் பரிட்சையில் சித்தி பெற்றமையானது நிகழ்ச்சித்திட்டதுக்கான அனுமதியாக கருத்திற் கொள்ளப்படமாட்டது.

### நுழைவுத் தகைமைகள்

1. இலங்கை திறந்த பல்கலைகழக அல்லது வேறு அங்கீகரிப்பட்ட பல்கலைக்கழகத்தின் கல்வியியலில் இளமாணிப் பட்டத்தில் குறைந்தது GPA 3.0 உடனான சித்தியுடன் பின்வரும் பாடங்களில் அல்லது அதற்கு நிகரான பாடங்களில் B+ சித்தியையும் கொண்டிருத்தல் வேண்டும்: கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும். **அல்லது**
2. அங்கீகரிப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்கல்வி டிப்ளோமா பாட நெறியில் குறைந்தது GPA 3.0 உடனான சித்தியுடன் பின்வரும் பாடங்களில் அல்லது அதற்கு நிகரான பாடங்களில் B+ சித்தியையும் கொண்டிருத்தல் வேண்டும்: கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும். **அல்லது**
3. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா பரீட்சையில்
   (அ) குறைந்தது 2½ திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A அல்லது B தரங்கள் உடனான சித்தியுடன் கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B தர சித்தியினையும் (2001 இற்கு முன்னான பழைய பாடத்திட்டம்) பெற்றிருத்தல் **அல்லது**
   குறைந்தது 1½ திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A அல்லது B தரங்கள் உடனான சித்தியுடன் கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B தர சித்தியினையும் (புதிய பாடத்திட்டம் 2001 முதல் 2010 வரை) பெற்றிருத்தல் **அல்லது**
   (ஆ) கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B+ தர சித்தியுடன், குறைந்தது 27 திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A+ அல்லது A அல்லது A- அல்லது B+ தர சித்தியினைப் (புதிய பாடத்திட்டம் 2010 ன் பின்னர்) பெற்றிருத்தல் **அல்லது**
4. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் கல்விமாணிப்பட்ட (இயற்கை விஞ்ஞானம்) பரீட்சையில்:
   (அ) ஆகக் குறைந்தது 5, 6 மட்டங்களில் 2 திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறியில் A, அல்லது B சித்தி உள்ளடங்கியதாக 4 திறமை மட்டங்களுடன் கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B சித்தியினையும் பெற்றிருத்தல் (2011 இன் முன்னர்) **அல்லது**
   (ஆ) ஆகக் குறைந்தது 5, 6 மட்டங்களில் 36 திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகள் உள்ளடங்கியதாக 72 திறமை மட்டங்களில் A+, அல்லது A- அல்லது A அல்லது B+ பெற்றிருப்பதுடன், கல்வி உளஷியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B+ சித்தியினையும் பெற்றிருத்தல் (2011 இன் பின்னர்) **அல்லது**
   (இ) மட்டம் 5,ல் 2 திறமை மட்டங்கள் அளவிற்கு விதிவிலக்குப் பெற்ற மட்டம் 6,ல் குறைந்தது 1½ திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A அல்லது B தரங்களைப் பெற்றிருத்தல் (2011 இன் முன்னர்) **அல்லது**
   (ஈ) மட்டம் 5,ல் 36 திறமை மட்டங்கள் அளவிற்கு விதிவிலக்குப் பெற்று மட்டம் 6,ல் குறைந்தது 27 திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A+ ,அல்லது A- அல்லது A அல்லது B+ தரங்களைப் பெற்றிருத்தல் (2011 ,ன் பின்னர்) **அல்லது**
5. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விசேட தேவைகள் கல்வியில் பட்டமேற்படிப்பு டிப்ளோமாவில் குறைந்தது திறமைச் சித்தி பெற்றிருத்தல். **அல்லது**
6. அல்லது பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சமனான தகைமையைப் பெற்றிருத்தல **அல்லது**

### விண்ணப்ப விதிமுறைகள்.

விண்ணப்பப் படிவம் இணையத்தளத்தில் மட்டும்

**https://payment.ou.ac.lk** என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசித்து வருவழி (online) முறையின் மூலம் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள்: **27.08.2017 தொடக்கம் 28.09.2017** வரையான காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவக் கட்டணம்:
தெரிவுப் பரீட்சைக் கட்டணம் உள்ளடங்களாக ரூபா 1050/=

**www.ou.ac.lk** என்ற இணையத்தளத்தினுள் பிரவேசித்து இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள் அடங்கிய மாணவர் கைந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

பற்று/கடன் (debit /credit / eZ Cash ) அட்டை மூலம் பணம் செலுத்த முடியாத விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுடன் தொடர்புகொண்டு பணத்தைச் செலுத்தலாம். இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பித்தல் தொடர்பான தகவல்களை அருகிலுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் கீழ்வருமாறு பெற்றுக்கொள்ளலாம்.

பின்வரும் பிராந்திய நிலையங்களுள் ஏதாவதொன்றுக்கு வருவழி விண்ணப்ப விதிமுறைகளுக்கான உதவியைப் பெற விஜயம் செய்யவும். கொழும்பு (நாவல), அநுராதபுரம், மட்டகளப்பு, யாழ்பாணம், கண்டி (பொல்கொல்லை), மாத்தறை (நுபெ), பதுளை, குருணாகலை, அம்பலாங்கொடை, அம்பாரை, பண்டாரவளை, கம்பஹா, காலி, அம்பாந்தோட்டை, ஹற்றன், திருகோணமலை, கிளிநொச்சி, முலலைத்தீவு களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், இரத்னபுரி, வவுனியா.

1. நாவல, நாரஹேன்பிட்ட வீதியிலுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுத்தொடர்பு அலுவலகத்தில் அரசாங்க விடுமுறைத் தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப 3.30 மணி வரை:
2. ஏனைய பிராந்திய/கற்கை நிலையங்களில் (அரசாங்க விடுமுறைத் தினங்கள் தவிர்ந்த) செவ்வாய்க்கிழமை முதல் சனிக்கிழமை வரையிலான நாட்களில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 3.30 மணி வரை:

**பொது தகவல் அலுவலகம் 0112881327 / 0112881256**
**தலைவர் / இடைநிலை, மூன்றாம் நிலை கல்வித்துறை : 0112881425**
**ஒருங்கிணைப்பாளர் / கல்வி முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன் / செல்வி கௌசல்ய பெரேரா 0112881279**

**தெரிவுப்பரீட்சை**
சகல பிராந்திய நிலையங்களிலும் தெரிவுப் பரீட்சை 15.10.2017 இல் நடாத்தப்படும்.

கற்றல் நடவடிக்கைகள் கொழும்பு பிராந்திய நிலையத்தில் மூன்று மொழி மூலங்களுக்கும் கண்டி பிராந்திய நிலையத்தில் சிங்கள மொழி மூலத்திற்கும் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் தமிழ் மொழி மூலமும் நடாத்தப்படும்.

பதிவாளர் – இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட

## நடுக்குடா காலிறுதியில்


யாழ்ப்பாணம்,ஒக.27
மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில், நடுக்குடா அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், அல் பாதா அணியை எதிர்த்து நடுக்குடா அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அல் பாதா விளையாட்டுக் கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் தவராஜ் 2 இலக்குகளை வீழ்த்தினார். 65 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நடுக்குடா அணி 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. (ம-23)

## இமையாணன் மத்தியின் கால்பந்து முடிவுகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.
நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில், யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது. இதில் கரவெட்டி பிரதேச செயலக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அல்வாய் மனோகரா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் திருயாத்திரை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



ஜேர்மன் நாட்டு கேவலார் நகர் மடு அன்னையின் திருயாத்திரையின் முப்பதாவது ஆண்டு நிறைவு முத்துவிழா (1988 - 2017) யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கொண்டாடப்பட்டது. அது குறித்து இந்தக்கட்டுரை பேசுகிறது.

### தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகங்கள்

இலங்கையில்இருந்துதமிழ்மக்கள்புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளிலும், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் வாழத் தொடங்கியபோது தமிழ்க் கத்தோலிக்க மக்கள் தமது ஆன்மிகத் தேவைகளைக் கவனிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதன் வழியே தமிழ் மறைமாவட்ட ஆயர்கள் ஆங்காங்கு தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகங்களை உருவாக்கினர். அவற்றுக்கு ஆன்மிக இயக்குநர்களாக குருக்களை இலங்கையிலிருந்து அனுப்பினர். இவர்களில் லண்டன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிப் பணியகத்தில் இயக்குநராகப் பணியாற்றிய ரீ.இ.தேவராஜன் அடிகளார் மற்றும் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தில் இயக்குநராகப் பணியாற்றிய எவ்.ஜெயசேககரம் அடிகளார் ஆகியோர் இந்தப்பணியின் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். இவர்களின் ஆரம்பகால அர்ப்பணிப்புமிக்க பணியின் காரணமாக இன்று லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து, டென்மாக், இத்தாலி, நோர்வே, கனடா ஆகிய நாடுகளில் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகங்கள் சிறப்புற இயங்குகின்றன.

### ஜேர்மன் கேவலார் திருயாத்திரையின் ஆரம்ப கர்த்தா ஜெயசேகரம் அடிகளார்

ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் ஒழுங்கமைப்பில் இவ்வாண்டு கொண்டாடப்பட்ட ஜேர்மன் கேவலார் திருப்பதியை நோக்கிய தமிழர்களின் திருயாத்திரையை ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் தற்போதைய இயக்குநர் நிரூபன் தார்சீசியஸ் அடிகளார் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் இவ்வாண்டு தனது 30 ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் கேவலார் பதியின் 30 ஆவது வருட யாத்திரையையும் கொண்டாடியுள்ளது. இந்த இரண்டினதும் ஆரம்ப கர்த்தாவாக எவ்.ஜெயசேகரம் அடிகளார் (19872000) விளங்குகிறார்.

அவரைத் தொடாந்து பேணாட் றெக்னோ அடிகளார் (2000 - 2005), சி.ஜே.அன்ரனி பாலா அடிகளார் (2006 - 2010), ஏ.எவ். பெனற் அடிகளார் (2010 - 2016) ஆகியோர் ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் இயக்குநர்களாக பணியாற்றியுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போதைய இயக்குநர் நிரூபன் தார்சீசியஸ் அடிகளார் பணியாற்றி வருகிறார். ஜேர்மன் கேவலார் திருப்பதியை நோக்கிய தமிழர்களின் திருயாத்திரை 1988 ஆம் ஆண்டு அப்போதைய ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியக இயக்குநர் எவ். ஜெயசேகரம் அடிகளாரால் ஏறத்தாழ 50 தமிழர்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிறிய குழுவாக ஆரம்பிக்கப்பட்டாலும் முன்னாள் இயக்குநர்கள், பங்குத் தொடர்பாளர்கள், பங்குமக்கள், ஜேர்மன் ஆய ஒன்றியம், கேவலார் திருப்பதி நிர்வாகம், நகர நிர்வாகம் ஆகிய தரப்புக்களது ஒத்துழைப்போடு இன்றும் தமிழர் யாத்திரை கேவலார் பதியில் இடம்பெற்று வருகிறது. கேவலார் பதியில் இடம்பெறும் ஏனைய யாத்திரைகளுள் மிகப் பெரிய யாத்திரையென ஜேர்மன் தமிழ்க்கத்தோலிக்க ஆன்மிக பணியகத்தால் நடத்தப்படும் திருயாத்திரை அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### தமிழர்களின் திருயாத்திரையில் யாழ். ஆயர்

ஜேர்மன் கேவலார் புலம்பெயர் தமிழர்களின் திருயாத்திரை 1988ஆம் ஆண்டு தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப்பணியகத்தால் ஆரம்பிக்கப்பட்ட முப்பதாவது ஆண்டு நிறைவு முத்துவிழா (1988 - 2017) யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கடந்த 13 ஆம் திகதி மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இலங்கை மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள மருதமடு அன்னையின் பெயரால் இலங்கை நாட்டின் நிரந்தர அமைதிக்காக வேண்டுதல் செய்யும் மேற்படி பெருவிழா ஜேர்மன் கேவலார் புலம்பெயர் தமிழர்களால் இவ்வாண்டும் கொண்டாடப்பட்டபோது பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்து சிறப்பித்தனர்.





> இலங்கை வாழ் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் பரவலடைந்து வாழ்ந்தாலும், தாம் வாழும் நாடுகளில் தமது ஆழமான விசுவாசத்தையும், பாரம்பரியங்களையும் விட்டு விடாது தொடர்ந்தும் தாய் மொழியில் இறைவழிபாடுகளிலும், யாத்திரைகளிலும் உற்சாகமாகப் பங்கேற்று வருகின்றனர்.

கேவலார் திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த 11 ஆம் திகதி செபமாலை பவனியோடு ஆரம்பமாகியது. சேபமாலை பவனியோடு மாதாவின் திருச்சொரூபமும் கேவலார் புகையிரத நிலையத்திலிருந்து பவனியாக எடுத்து வரப்பட்டமை இவ்வாண்டின் சிறப்பம்சமாகக் காணப்படுகிறது. செபமாலை பவனியின் பின்னர் நற்கருணை ஆராதனை இடம் பெற்றது. திருவிழாத்திருப்பலி கடந்த 13 ஆம் திகதியன்று காலை 10.45 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை "மரியன்னை வழி இயேசுவிடம்" என்ற விருது வாக்குடன் பணி ஏற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### கேவலார் திருவிழா ஆன்மிக வாழ்வில் அடுத்த நிலை காணட்டும்

இலங்கையில் இருந்து மேற்படி விழாவில் கலந்து கொள்வதற்காகச் சென்ற யாழ். மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது மறையுரையில், "அன்னை மரியாள் தன்னை இழந்து இறைவனில் சித்தத்தைத் தனது வாழ்வில்நிறைவேற்றினாள். நாமும் எம்மை இழக்க வேண்டும். நான், எனது என்ற எண்ணக்கருத்து எம்மிலிருந்து ஒழிய வேண்டும். பேதுரு, தான் என்ற எண்ணத்தில் இருந்தபோது தனது ஆன்மிக வாழ்வில் வீழ்ந்து போனார். ஆனால் அவர் எப்போது தன்னை இழந்து இறைசித்தத்துக்குத் தன்னைக் கையளித்தாரோ அப்போது அவர் ஆண்டவரால் உயர்த்தப்பட்டார்.

இறைவனின் சித்தத்தைத்தனது வாழ்வில்நிறைவேற்றினார். அதே போல நாமும் எம்மை இழக்க வேண்டும். ஒவ்வொரு திருவிழாக்களும் எம்மை ஆன்மீக வாழ்வின் அடுத்த நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும். இந்தக் கேவலார் திருவிழாவும் எம்மை ஆன்மிக வாழ்வின் அடுத்த நிலைக்கு இட்டுச்செல்லவேண்டும். எம்மை இழந்து ஆண்டவரின் சித்தத்துக்கு எம்மைக் கையளிப்போம். 'உமது சித்தம் நிறைவேறட்டும்' என்று ஆண்டவரின் சித்தத்துக்கு எம்மைக் கையளிப்போம்." எனத் தெரிவித்தார்.

கடந்த 13 ஆம் திகதி காலை 10.45 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட திருவிழாத் திருப்பலியை விட, யாத்திரிகர்கள் வசதி கருதி காலை 9 மணிக்கும் மதியம் 2 மணிக்கும் தமிழில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பிற்பகல் 3.30 மணிக்கு நற்கருணை ஆசீரும் அதனை தொடர்ந்து மருதமடு அன்னை திருச்சொரூபப் பவனியும் இடம் பெற்றது.

ஜேர்மன் கேவலார் புலம்பெயர் தமிழர்களின் திருயாத் திரை முப்பதாவது ஆண்டு நிறைவு முத்துவிழா (1988 - 2017) கொண்டாட்ட நிகழ்வுகள் அனைத்தையும் ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப்பணியக இயக்குநர் தார்சீசியஸ் நிரூபன் அடிகளார் சிறப்புற மேற்கொண்டமை இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும்.

இவ்வாண்டு நடைபெற்ற ஜேர்மன் கேவலார் திருப்பதியை நோக்கிய தமிழர்களின் திருயாத்திரை ஜேர்மன் நாட்டு ஊடகங்களில் சிறப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தமை இங்கு சிறப்பு முக்கியத்து வத்துடன் நோக்கப்பட வேண்டியது. "ஐரோப்பாவில் பரம்பலடைந்து வாழும் தமிழர்கள் சந்தித்து வழிபடவும், உறவாடவும் தமக்குத் தேவையான தாயகப் பொருள்களை வாங்கிக் கொள்ளவும் கேவலார் திருப்பதி ஏற்ற இடமாக உள்ளது. தமிழர்கள் இறைபக்தி மிகுந்த வர்களாகக் காணப்படுகின்றனர். ஜேர்மன் கேவலார் திருப்பதியை நோக்கிய தமிழர்களின் திருயாத்திரையில் இளையோர்கள் அதிகம் பங்கேற்பது சிறப்பம்சமாகும். இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசிக்கும் கிறிஸ்தவ மக்களும், இந்து மக்களும் மதவேறுபாடுகளை மறந்து அன்போடும், மகிழ்வோடும் இவ்விழாவில் பங்கேற்பது வியப்பளிக்கிறது." எனத் தெரிவித்த ஜேர்மன் நாட்டு ஊடகங்கள், பல படங்களுடன் செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டு மேற்படி தமிழர் விழாவையும், தமிழ் மக்களையும் பெருமைப்படுத்தின. இலங்கை வாழ் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் பரவலடைந்து வாழ்ந்தாலும் தாம் வாழும் நாடுகளில் தமது ஆழமான விசுவாசத்தையும், பாரம்பரியங்களையும் விட்டு விடாது தொடர்ந்தும் தாய் மொழியில் இறைவழிபாடுகளிலும், யாத்திரைகளிலும் உற்சாகமாகப் பங்கேற்று வருகின்றனர். இதில் முக்கியமாக ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் இவ்வாண்டு தனது 30 வருட நிறைவையும், கேவலார் பதியில் 30 ஆவது யாத்திரையையும் கொண்டாடியுள்ளது.

### காணிக்கைகள் மற்றும் நன்கொடைகள்

கொழும்புத்துறை புனித வளனார் வயோதிபர் இல்லத்தின் புதிய கட்டுமானப் பணிகளுக்காக நன்கொடைகள் வழங்கப் படவுள்ளதாக ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குநர் நிரூபன் தார்சீசியஸ் அடிகளாரால் அறிவிக்கப்பட்டமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.



மருதமடு அன்னையின் யாத்திரைத்தலமானது சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை இன வேறுபாடுகளை மறந்து ஒன்றுகூடும் ஒரே ஒரு யாத்திரைத்தலமாக விளங்கி வந்துள்ளது. தமிழ், சிங்கள மக்கள் மடு அன்னையை தம் அன்னையாகவே ஏற்று செல்லும் இடம் எல்லாம் மடு அன்னையை கொண்டு சென்று விழாக் கொண்டாடி வருகின்றனர். அது போன்ற ஒரு விழாவுக்கே ஜேர்மன் கேவலார் நகருக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அண்மையில் சென்று வந்துள்ளார்.

### மடுப்பதியின் தற்போதைய பரிபாலகரா[க] எமிலியானுஸ்பிள்ளை அடிகளார்

மடுப்பதியின் தற்போதைய பரிபாலகராக எமிலியானு[ஸ்]பிள்ளை அடிகளார் பணியாற்றி வருகிறார். மடுப்பதி[க்கு] யாத்திரிகர்களாகச் சென்று தங்க விரும்புவோர் குறை[ந்]த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக 'பரிபாலகர், மடுத்தி[ருப்]பதி, மடு' என்னும் முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்புகொ[ள்]ளலாம். மடுப் பரிபாலகரின் தொலைபேசி இலக்கம் 02[3] 228 0001 ஆகும்.

இலங்கைவாழ் தமிழ் மக்களையும், சிங்கள மக்களை[யும்] இன மத பேதங்களைக் கடந்து தனது பாதங்களில் ஒ[ன்று] சேர்க்கின்ற மருதமடு அன்னை இலங்கை மண்ணில் எ[ல்லா] மக்களும் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் வ[ாழ] வழிசமைப்பாராக. இலங்கை வாழ் தமிழ் சிங்கள மக்களை இன மத பேதமின்றித் தனது பாதங்களில் ஒன்று சேர்க்கின்ற மருதமடு அன்னை தனது பக்தர்கள் அனைவரையும் அவர்கள் உலகின் எந்[த]ப் பகுதியில் இருந்தாலும் பாதுகாத்து வழி நடத்துவாராக.

## மரண அறிவித்தல்கள்

### சிற்றம்பலம் சின்னத்தம்பி




தம்பாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் பூதர்மடம், கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பம் சின்னத்தம்பி 25.08.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - நல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நல்லபிள்ளை தம்பதியரின் மருமகனும் குணத்தின் அன்புக் கணவரும் தனுஜா, தர்சிகா, தர்சீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமல்ராஜ், ஆதுஷன் ஆகியோரின் மாமனாரும் கவிதாஸ், தாருஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கந்தசாமி காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் செல்வராஜா (ஜேர்மன்), ருக்குமணி, நவமணி, தங்கமணி, தபோநிதி, தவமணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பூதர்மடம்,**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



தோற்றம்
11 . 11 . 1951

மறைவு
22 . 08 . 2017

### கந்தையா நவரத்தினராசா

**(முன்னாள் தொழில்நுட்பவியலாளர் - காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை)**

யாழ்.இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும், இடைக்காடு, பருத்தித்துறை, தும்பளை, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினராசா 22.08.2017 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதிகளின் பாசமிகு மகனும், கார்த்திகேசு - கமலரத்தினம் (கனடா) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், மீனலோஜினியின் (கனடா) அன்புக் கணவரும், நிசாந்திக்கா, நிசாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசரத்தினம் (கனடா), உதயநாயகி (கனடா), செல்வரத்தினம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சீவேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற சுந்தரவேல் மற்றும் சீதா (இலங்கை), தேவலோஜினி (கலிபோர்னியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனன், கறீமா (Karima) ஆகியோரின் அன்பு மாமனாரும், டெக்கார்ட்டின் (Decard) பாசமிகு தாத்தாவும், இராசேந்திரம், தயாபரன் ஆகியோரின் அன்புச் சகலனும், விஜேந்திரா குணேஸ்வரி தம்பதிகள், Mohez Nilofer தம்பதிகளின் அன்புச் சம்பந்தியும், நாகநந்தினி, நாகநளினி, நாகநிமலினி, விசாகன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அகிலன், நகுலன், சுமதி ஆகியோரின் தாய்மாமாவும், வருணின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீட்டு முகவரி:-**
**1276 Danforth Rd,**
**Scarborough,**
**On M1J 1E8, Canada.**

தகவல்
**கந்தையா செல்வரத்தினம்**
**ஆத்தியடி, பருத்தித்துறை.**

# இன்றைய மோதல்கள்

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கணேஷ் புனிதவதி**

மலர்வு
15.06.1942

உதிர்வு
19.08.2007

வருடங்கள் 10 சென்றாலும் இன்னும் உன் நினைவோடு
குடும்பத்தின் பொற்குடமாய் செயலில் நிறைகுடமாய்
வாழ்வில் வற்றாத ஊற்றாய் வாழ்ந்தீர்

**முதலாம் குறுக்கு வீதி,**
**ஊரெழு கிழக்கு**

**ஆ.கணேஷ் குடும்பத்தினர்**
**021 224 0803**

## மரண அறிவித்தல்

### திருமதி அற்புதராணி வேதிங்டன்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அற்புதராணி வேதிங்டன் 23.08.2017 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி K.P. வேதநாயகம் தம்பதிகளின் அன்புப் புத்திரியும், காலஞ்சென்ற Dr.W.J.வேதிங்டன் அவர்களின் பாசமிகு மனைவியும், கிளஷ்டன், ஜோன், றொபேட், ராஜி, எதேல், டானியல் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷாந்தி, நிலாந்தி, பமிலா, றோய், லக்கி, தயாளினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹெலினா, லூக், அனிஷ்கா, நவீன்,நிதுஷா, டொறின், சஞ்ஜோ, ஷேன், திமொத்தி, சாரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அற்புதமணி சொலமன்ஸ், வேதநாயகம் அற்புதராஜன், வேதநாயகம் அற்புதநாதன் மற்றும் அற்புதமலர் சண்முகநாதன், காலஞ்சென்ற வேதநாயகம் அற்புதஜெயம் ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (28.08.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**78/25, தோமஸ் கார்டினல் குரே மாவத்தை,**
**அவரிவத்தை வீதி, வத்தளை.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**விஜயரட்ணம் றோய் - 077 731 2189**

யாழ்ப்பாணம், ஓக. 27

**கனகபுரம் வி.கழக**
**கால்பந்துத் தொடர்**

கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் திருவையாறு விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியும், ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சந்திரன் விளையாட்டுக் கழக அணியும், கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கில்லறி விளையாட்டுக் கழக அணியும், செந்தாரகை விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழக அணியும், ஜொலி போய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழக அணியும், பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியும், இரணைமாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒலிம்பிக் விளை யாட்டுக் கழக அணியும் சக்திவேல் விளை யாட்டுக்கழக அணியைஎதிர்த்துசென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சுபன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியும்மோதவுள்ளன.

**உதயசூரின் வி.கழக**
**கால்பந்துத் தொடர்**

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்திவேல் அணியை எதிர்த்து அருணோதயா அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வெண்நிலா அணியை எதிர்த்து சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வெண்மதி அணியை எதிர்த்து கணேசானந்தா அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அம்பன் பிங் பொங் அணியை எதிர்த்து பாரதி அணி மோதவுள்ளது.

**யங்கம்பன்ஸ் வி.க.**
**கால்பந்துத் தொடர்**

கம்பர்மலையங்கம்பன்ஸ்விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் தங்கவடிவேல் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துபுத்தூர்வளர்மதிவிளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 9மணிக்கு இடம்பெறும்இரண்டாவது ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலிதோப்புவாலிபர்விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**வி.ரி.மகாலிங்கம்**
**ஞாபகார்த்த ரி- 20**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தினால் தனது அங்கத்துவக் கழக்களுக்கு இடையில் நடத்தப்படும் ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் றெஜின்போ விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தாஸ்ராார் விளையாட்டுக்கழகஅணிமோதவுள்ளது. (ம-23-108)


மொத்த அடிப்படையிலான கொள்வனவிற்கு

**சிறந்த விலையுடன்**
**அதிக சலுகைகள் இதோ!**

தற்போது நீங்கள் மொத்த அடிப்படையில் DSI தயாரிப்புகளை கொள்வனவு செய்து விசேட சலுகளையும் விலைக் கழிவினையும் பெற்றிடுங்கள்.
பாதணித் துறையின் முன்னோடியான DSI இடமிருந்து உள்ளூர் விற்பனையாளர்களுக்கு மட்டுமே.

கொள்வனவின் போது பணக் கொடுப்பனவினை மேற்கொள்ளும்
உங்களுக்கு மேலும் பல சலுகைகள் காத்திருக்கின்றது




**இன்றே வாருங்கள்**

**DSI Wholesale Shop**
இல.67, மலிபன் வீதி, கொழும்பு 11.
தொ.இல. 077 7815186 / 0112336694

samsons U Softo Ranpo
DSI
இலங்கையின் முதல்தர பாதணிகள்


# முடங்கியது மூஞ்சிப் புத்தகம்







உலகப் புகழ்பெற்ற சமூக வலைத்தளங்களில் ஒன்றான முகப்புத்தகம் நேற்று இரவு (இலங்கை நேரப்படி) 7.30 மணியளவில் சிறிது நேரம் முடங்கியது.

சமூக வலைத்தளங்களின் வரிசையில் முகப்புத்தகம் முக்கியத்துவம் மிக்க ஒன்றாக மாறியுள்ளது. உலகமெங்கும் கோடிக் கணக்கானோர் முகப்புத்தகத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்த வாரத்தில் மட்டும் இரண்டாவது தடவையாக முகப்புத்தகம் முடங்கியது. எனினும் பின்னர் சரிசெய்யப்பட்டு வழமைக்குத் திரும்பியது. (ம)



பேஸ்புக்கையும், வட்ஸ் அப்பையும் பயன்படுத்தக் கூடாது எண்டு இருந்தா ஒரு மணி நேரத்தில கை, கால் நடுங்குதே இது என்ன வியாதியா இருக்கும்



# மகளை நினைத்து அர்ஜீன் பெருமை

"எனது மகள் சினிமாத் துறையில் இருப்பது எனக்குப் பெருமை" என்று தெரிவித்துள்ளார் நடிகர் அர்ஜீன்.
அர்ஜுன் தற்போது அவரது மகளை வைத்து 'சொல்லி விடவா' என்ற படத்தை இயக்கி வருகிறார். இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நான் இவ்வளவு பெரிய புகழ் பெற்றிருப்பதற்கு காரணம் சினிமாதான். இதில்தான் எல்லாம் சம்பாதித்தேன். சினிமா கொடுத்த சாப்பாட்டைதான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். என் தொழில்தான் எனக்கு எல்லாம். இதை தவறாக நானே நினைக்கக்கூடாது. என் மகளை சினிமா நடிகை ஆக்கியதைப் பெருமையாகவே கருதுகிறேன். என் மகளைப் போல எத்தனையோ பெண்கள் சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். சினிமா மிகவும் பாதுகாப்பான தொழில் என்பது எனக்கு தெரியும். அதனால்தான் என் மகள் நடிக்க வேண்டும் என்று சொன்னதும் அனுமதி கொடுத்தேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# ஆபிரகாம் லிங்கன் தனது மகனின் வகுப்பாசிரியருக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் இது

அன்புள்ள ஆசிரியருக்கு,

என்மகன் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான். அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக இருக்க மாட்டார்கள் என அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். ஆனால், பகைவர்களுக்கு நடுவில் அன்பான நட்புக்கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்குத் தெரிவியுங்கள். பொறாமை அவன் மனதை அண்டாமல் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவது, கோழைத்தனம் எனப் புரியவையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்துகாட்டுங்கள். அதே வேளையில், இயற்கையின் ஈடில்லா அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்குகற்றுக் கொடுங்கள். வானில் பறக்கும் பட்சிகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் துரிதத்தையும், பசுமையான மலையடிவார மலர்களின் வனப்பையும் ரசிக்கக் கற்றுக்கொடுங்கள்.

ஏமாற்றுவதைவிடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும்கூட, சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுக அவனைத் தயார்படுத்துங்கள் அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள். எனினும், உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.




துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக் கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குப் புரியவையுங்கள். போலியான நடிப்பைக் கண்டால் எள்ளிநகையாடவும், வெற்றுப் புகழுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். அவனைக் கனிவாக நடத்துங்கள். அதிக செல்லம் கொடுத்து உங்களை சார்ந்திருக்க செய்ய வேண்டாம். சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மவுனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்கு சொல்லிக் கொடுங்கள். இது ஒரு மிகப் பெரிய பட்டியல்தான்...

இதில் உங்களுக்கு சாத்தியமானதையெல்லாம் கற்றுக் கொடுங்கள். அவன் மிக நல்லவன். என் அன்பு மகன்.

**இப்படிக்கு,**
**ஆபிரகாம் லிங்கன்**







**மேடம்:** நல்லவரைத் தவறாக கருதும் சூழல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்தித்தாலும் வருமானம் உயரும்.

**இடபம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**மிதுனம்:** மனக்குழப்பத்தால் தொந்தரவு ஏற்படலாம். நண்பர்களின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**கடகம்:** விலகிச் சென்ற உறவினர் விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும்.

**சிங்கம்:** திட்டமிடுதலுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** பிறரது விமர்சனத்தை பொருள்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வீட்டுத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும்.

**துலாம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** தொடர்பில்லாத பணிகள் குறுக்கிட்டு சிரமம் தரலாம். தொழில், வியாபார விடயமாக திடீர் பயணம் செல்ல நேரிடும். பணியாளர்கள் பணிச்சுமையை திறப்படச் சந்திப்பர்.

**தனுசு:** முக்கியமான பணிகள் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபார நடைமுறையில் இருக்கிற அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது.

**மகரம்:** தனித்திறமையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சமரச தீர்வு உண்டாகும்.

**கும்பம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமார். பணியாளர்கள் சுதந்திர மனப்பான்மையுடன் செயற்படுவர்.

**மீனம்:** நண்பரால் நன்மை உண்டாகும் ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக பயணம் மேற்கொள்வர்.



## G.C.E. A/L எழுதிவிட்டீர்களா! உடனடி வேலைவாய்ப்பு



- நிரந்தர பணிநிலை (EPF,ETF உட்பட)
- ஒப்பந்த பணி நிலை
- பகுதிநேர பணிநிலை

தொடர்புகளுக்கு :- 077 241 7007

## Pharmacy For Sale

யாழ்ப்பாணத்தில் வாடகைக்கட்டடத்தில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டுள்ள பதிவு செய்யப்பட்ட மருந்தகம், தளபாடப் பொருள்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 071 144 5696, 077 396 5015

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 694
சீட்டிழுப்பு திகதி 26.08.2017 சனிக்கிழமை

J 07 33 50 66

சுப்பர் ஜக்பொட் ரூ. 57, 371, 368/=

22 57 62 68

ஊதா நிற டிக்கட்டுகள் 2017.08.28 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Web: www.dlb.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2921 திகதி 26.08.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 37 39 46 54 C
போனஸ் இல.: 43
சனிக் கிழமை ஜக்பொட்: 38, 692, 880/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 04 12 25 74

நீல நிற டிக்கட்டுக்கள் 2017.08.28 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.இல : 011 4624824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune

சீட்டிழுப்பு வாரம் 69
சீட்டிழுப்பு திகதி 26.08.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 03 10 43 44
சுப்பர இலக்கம்: 02
அதிர்ஷ்ட மாதம்: செப்ரெம்பர்

ரூ. 16, 007, 998/= | ரூ. 2, 861, 786/= | ரூ. 2, 487, 276/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 01 16 35 41

2017.08.31 ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## Florence nighhting gaale school of nursing



### தாதியராக தொழில்புரிய ஆசைப்படுகின்றீர்களா?

- ஒருவருட தாதியர் பயிற்சிப்பாடசாலை
- பின் 3 மாதம் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்
- சிறந்த மாணவர்களுக்கான தொழில்வாய்ப்புகள்

பாடமுடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.
சனி, ஞாயிறுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படஉள்ளதால் முற்பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.
அலுவலக கடமை நேரம் - 8.00 - 4.00

தொடர்புகளுக்கு - 077 718 6438, 021 492 8916
முகவரி - K.K.S. Road. Maruthanarmadam.

## காணி விற்பனைக்குண்டு

யாழ். மருத்துவபீடத்துக்கு அருகில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு-077 3013060

## Sri Ram Rest House

புதிய மாபிளிடப்பட்ட A/C, Non A/C அறைகளும் குடும்பமாக தங்ககூடிய சமையலறையுடன் சகல தளபாட வசதிகளுடன் புதிய பங்களா சகல கொண்டாட்டங்களுக்கும் நாள் வாடகைக்கு. பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கு இலவசமாக வழங்கப்படும். 077 810 5102, 077 301 3659

## பெண் ஊழியர் தேவை

நல்லூர் சுற்றாடலில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து கடமை புரியக்கூடிய பெண் உதவியாளர் தேவைப்படுகின்றது. தகுந்த வேதனம் வழங்கப்படும். விரும்புபவர்கள் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 மணிக்கிடையில் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். - 077 900 4380

## RP Rent a Car

Honda Vezel, Hiace, Nissan போன்ற கார் வான்கள் நாள், மாத அடிப்படையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு.
077 029 5211

## அனெக்ஸ் வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் கோயிலுக்கு அருகாமையில் ஒரு அறையும் சமையல் அறையும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777 299 031

## வேலைக்கு ஆள்தேவை

யாழ். கச்சேரியை அண்மித்த பகுதியில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுப் பணிப்பெண் வேலைக்கு ஆள்தேவை.
நியாயமான சம்பளம் வழங்கப்படும் தங்கி நின்று வேலை செய்யலாம். அல்லது தினசரி செல்பவராகவும் இருக்கலாம்.
மேலதிக தொடர்புகளுக்கு.
077 923 3807 / 077 346 4756

S.K Broking பதிவு இல. NAI/DS1442

## காணி விற்பனைக்கு உண்டு

நாவலர் றோட், அரியாலை கனகரட்ணம் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் 2 1/2 பரப்பு காணி வெட்டுக் கிணற்றுடன் நல்ல சூழலில் நல்ல தண்ணீருடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு.
077 193 3490, 077 461 3884

## பதவி வெற்றிடம்

பதவி : விற்பனையாளர்
ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
மோட்டார் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
சிவன் மாளிகை (Pvt)Ltd,
No.166, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 2222 996 / 077 9861709

## திருமண சேவை

பல்லாயிரக் கணக்கான வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் உள்ள Unmarried, Divors, Widower மணமக்களுடைய படங்கள், ஜாதகம், விவரங்கள் என்பன www.thaalee.com என்கிற இணையத் தளத்தில் பதியப்பட்டுள்ளது. திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது Website ஆகிய www.thaalee.com என்பதைப் பார்த்து தெரிவு செய்துகொள்ள முடியும். நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ள முடியும்.
ஆகவே இலகுவாக நீங்கள் எவ்விடத்துக்கும் போய் நேரத்தையும் பணத்தையும் செலவு செய்யாமல் எம்முடன் தொடர்பு கொள்க
Tel:077 539 3728, Viber: 077 829 7351

## IPS

இலவச ஆங்கில, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வகுப்புக்கள்.

### புதிய பிரிவுகள்

ஆரம்பம் : 05.09.2017

குறுங்காலக் கற்கைகள் 3 மாதங்கள்
பெறுமதிமிக்க சான்றிதழ்கள்
பிரிவு VI இல் வரையறுக்கப்பட்ட மாணவர்கள்
அடிப்படையிலிருந்து ஆங்கிலம், கணினிப்பிரிவுகள்
கற்கையின் பிற்பாடு பயிற்சி வழங்கப்படும்.

IPS இராமநாதன் வீதி, திருநெல்வேலி
Hotline: 076 6

# சைக்கிளிலிருந்து வீழ்ந்தவர் இறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பத்தலைவர் நிலைதடுமாறி கீழே வீழ்ந்து சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் வாரிவளவுகாரைநகர் சாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. காரைநகரைச் சேர்ந்த நாகமணி நாகராசா (வயது-53) என்பவரே நேற்று உயிரிழந்தார்.

தலையில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். பொலிஸார் விசாரணை மேற் கொண்டுள்ளனர். (4-8-ரி1)

## வாடகைக்கு உண்டு

முற்றிலும் மாபிளிடப்பட்டுள்ள இணைந்த குளியலறைகளையுடைய A/C Non A/C அறைகள் தளபாட வசதிகளுடன் வாடகைக்கு.
077 810 5102, 077 301 3659

## உள்நாட்டு, வெளிநாட்டு குறிப்பு இருக்கின்றது

துபாய் -20.01.1987
நட்சத்திரம் -உத்தரம்
ஜேர்மன்- 21.01.1985
நட்சத்திரம் -திருவோணம் 73 1/2
குவைத் -14.06.1986
நட்சத்திரம் -பூரம் (சீதனம் எதிர்பார்க்கமாட்டாது)
தொடர்பு:075 636 7361

## மணமகள் தேவை

திருகோணமலை இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய தனியார் துறையில் நல்ல பதவி வகிக்கும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. வேலை விரும்பத்தக்கது. பூராடம், கிரகபாவம் 2. உயரம் 5அடி 2 அங்குலம். 077 052 0873

## German Language Academy

தமிழ் விளக்கத்துடன் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புக்கள் சாவகச்சேரி, நெல்லியடி, வவுனியா ஆகிய இடங்களில் கற்பிக்கப்படுகின்றன.

Branch : இல. 17A, முதலாம் மாடி கச்சாய் வீதி, சாவகச்சேரி.
Mr. R.மயூரன் (ஆசிரியர்) T.P : 077 6454 998

## மரண அறிவித்தல்கள்



### வீரகத்தி வேலாயுதம்


தும்பளை தெற்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி வேலாயுதம் (25.08.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வே. மகேந்திரன், த. தயாகரி, வே. விமலேந்திரன், வே. இளவேந்தன், ஸ்ரீதேவமனோகரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வே. ஸ்ரீதயாபரன் (மருமகன்), வே. இளவேந்தன் (மகன்).
தும்பளை தெற்கு, பருத்தித்துறை.

தோற்றம் 03 . 09 . 1924



மறைவு 25 . 08 . 2017

### சின்னையா இராஜநாயகம்

(இளைப்பாறிய கல்வி அதிகாரி - யாழ்ப்பாணம், கொத்தணி அதிபர் - புங்குடுதீவு, வட்டாரக் கல்வி அதிகாரி - சாவகச்சேரி, இளைப்பாறிய அதிபர் - முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, புங்குடுதீவு மகாவித்தியாலயம்)

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும், கனடா Stouffville ஐ வதிவிடமாகவும் கொண்ட சின்னையா இராஜநாயகம் (25.08.2017) வெள்ளிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) - முத்துப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - செல்லம்மா (புங்குடுதீவு 3ஆம் வட்டாரம்) தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பாளின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சூரியகலா, ஜனகன் (ஐக்கிய அமெரிக்கா), இரஞ்சிதகலா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சற்குணம் (இளைப்பாறிய ஆசிரியை) காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் கணபதிப்பிள்ளை, மார்க்கண்டு ஆகி யோரின் அன்புமைத்துனரும் தியாகானந்தி (ஐக்கிய அமெரிக்கா), சபேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புமாமனாரும் சூரியா, கார்த்திகன், காத்யாயனி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.08.2017) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

+190 559 13997 (வீடு - கனடா),
+164 720 42887 (சபேஸ்வரன் - மருமகன் - கனடா),
ஜனகன் (மகன் - ஐக்கியஅமெரிக்கா)
+17 324 461 136, +19 089 308217

தகவல்: குடும்பத்தினர்.

## நீதி அமைச்சரின்...

ஆணைக்குழு முன்பு மகிந்த அணியினால் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டதாக, அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
தலதா அத்துக்கோரளவை நீதி அமைச்சராக நியமித்ததன் மூலம் அந்தப் பதவி மீது மக்கள் வைத்திருக்கும் மதிப்பு மற்றும் நம்பிக்கை பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கின்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள புதிய நீதி அமைச்சர் தலதா தனக்கு எதிராக ஊழல் விசாரணை ஆணைக்குழு இதுவரை எந்தவொரு விசாரணையையும் ஆரம்பிக்க வில்லை. நீதி அமைச்சு தனது பணிகளை சிறந்த முறையில் முன்னெடுப்பதை தடுப்பதற்காகவே மகிந்த அணியினர் இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (5)

## வடக்கில்...

பாளர் வைத்திய கலாநிதி ககிஸ்த திரேரா. யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் தலைமையிலான குழுவினர் வடக்கில் டெங்கு அதிகரித்துள்ளமை தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடத்தினார். தொற்று அதிகமுள்ளதாகக் கூறப்படும் சில பகுதிகளையும் அவர் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.
வடக்கு மாகாணத்தில் டெங்குத் தொற்று முன்னைய வருடங்களை விட அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்குத் தாக்கம் முன்னைய வருடங்களை விட அதிகரித்துள்ளது. குடாநாட்டில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 700 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த வருடம் இதே மாதம் வரையான காலத்தில் 600 பேர் மட்டுமே இனம் காணப்பட்டிருந்தனர்.
டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து துறைகளின் பணிகளையும் முடுக்கி விடுமாறு அவர் பணித்துள்ளார்.
இதேவேளை, டெங்குத் தொற்றுக்கு இலக்காகி இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 700க்கும் அதிகமானவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நாளாந்தம் 15 தொடக்கம் 20 வரையானோர் டெங்குத்தொற்றுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

**பருவமழை**
ஓரிரு மாதங்களில் வடகிழக்குப் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிக்கும் பருவம் வரவுள்ளது. அதன்போது டெங்குத் தொற்று மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகிறது. இப்போதே இவ்வளவு எண்ணிக்கையில் டெங்குத் தொற்றுக் காணப்படும் நிலையில் மழை வரும்போது தொற்று மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு பெருமளவில் காணப்படுகிறது.

**பொறுப்பு அனைவருக்குமே**
டெங்கு நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதன் ஊடாகவே அதன் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். அந்த முயற்சியில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். குப்பைகளை அகற்றுவது மக்களதும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளதும் முக்கிய கடமை.

**சுத்தம் அவசியம்**
மருத்துவமனையைச் சூழவுள்ள பிரதேசம் சுத்தமாக இருக்க வேண்டும். டெங்குத் தொற்றுக்குள்ளான ஒருவருக்கு டெங்கு நுளம்புகள் தாக்குமாயின் பிரதேசம் முழுவதும் டெங்கு பரவும். மருத்துவமனைச் சுற்றாடலில் பொலித்தீன் கழிவுகள் காணப்படுகின்றன. அவை உடனடியாக அகற்றப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிளும், வர்த்தகர்களும், பொதுமக்களும் இது தொடர்பில் உரிய கரிசனை கொள்ள வேண்டும் - என்றார்.
மாகாண சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாவட்டச்செயலர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள், பிரதேச செயலர்கள், சுகாதார மைருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (4-32-101)

## வெள்ளைக்கொடி...

சரணடைய முற்பட்ட வேளையில் உயிரிழக்க நேரிட்டதாக கூறப்படுகின்றதே' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,

**வெள்ளைக் கொடி விவகாரம்**
'இவ்வாறு கூறுவது இலகு. போர்க்களத்தில் இப்படி நடைபெறுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வட்டமேசைக் கலந்துரையாடலில் வெள்ளைக் கொடி ஏந்தி வந்தார்கள், சிவப்புக் கொடி ஏந்திவந்தார்கள் என்று பேசுவதற்கு இலகுவாக இருக்கும். போர்க் களத்தில் ஒவ்வொரு கணத்திலும் என்ன நடக்கும் என்பதிலேயே சிப்பாய்கள் குறியாக இருப்பார்கள். போரின் இறுதித் தருணங்களில் விடுதலைப் புலிகள் எந்த நேரத்திலும் பாதுகாப்பு வலயங்களை தகர்த்துச் செல்ல முனைவார்கள் என்ற நிலைமையே இருந்தது. அதற்காக முயற்சித்தும் இருந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் சிப்பாய் எந்த நிலைமையில் இருப்பார் என்பதைச் சிந்திக்க வேண்டும். தலையே தூக்க முடியாத அந்தச் சந்தர்ப்பத்தில் நபரொருவரால் எழுந்து வெள்ளைக் கொடியை உயர்த்த முடியுமா?
பிரபாகரனும் அங்கே இருந்தமையால் அவர்கள் உச்சக்கட்ட படை நடவடிக்கையைத்தான் வெளிப்படுத்த முயல்வார்கள். அந்தத் தருணத்தில் வெள்ளைக்கொடி ஏந்திக்கொண்டு வர முயற்சித்தாலும் சுற்றியுள்ள சிப்பாய்களின் கண்களுக்கு தெரிவார்களா ? வெள்ளைக் கொடி விடயத்தைக் கூறுபவர்கள் அங்கிருந்த நிலைமைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்' - என்றார்.

**பாலச்சந்திரன் கொலை**
பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன், பிரபாகரன் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலேயே உயிரிழந்தார் என்பதை தான் உத்தியோகபூர்வமாக அறிந்ததாக கோத்தபாய ராஜபக்ச இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.
ஒசாமா பின்லேடனின் நிராயுதபாணியான மனைவி, பிள்ளைகள் கொலை செய்யப்பட்டதைப்பற்றி யாருமே கேள்வி எழுப்புவதில்லை என்றும் குறிப்பிட்டார்.
'போரின் இறுதி நாள்களின் இரவில் எந்த நேரத்திலும் புலிகள், பாதுகாப்பு வலயங்களை உடைத்துக் கொண்டு செல்வார்கள் என்ற அச்சத்துடனேயே சிப்பாய்கள் இருந்தார்கள். அவ்வாறு எந்த நேரத்திலும் பல சம்பவங்கள் நிகழக்கூடிய இடத்தில் நடந்த சிறு விடயம் குறித்துத்தான் விசாரணை செய்ய முற்படுகின்றார்கள்' என்று கோத்தபாய தெரிவித்தார்.

**சரணடைந்தோர் விவகாரம்**
'எழிலன் உள்ளிட்ட 12பேர் தொடர்பான ஆள் கொணர்வு மனு மீதான விசாரணை நடைபெறுகின்றது. போரின் இறுதித் தருணத்தில் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் முன்னிலையில் இவர்கள் சரணடைந்ததாக சாட்சியங்கள் உள்ளன. அவர்களுக்கு நடந்தது என்ன ?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,
'ஒவ்வொரு நிகழ்வு குறித்தும் நான் அறியவில்லை. சில சம்பவங்கள் தொடர்பில் இராணுவத்திடம் தவறான செயற்பாடுகள் இருந்திருந்தால் அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருந்தோம். பலருக்கு எதிராக சட்டநடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. சிறிய பிரச்சினை ஒன்றை பொதுவான பிரச்சினையாக காண்பிக்க முயற்சிப்பது தவறாகும்' என்று பதிலளித்துள்ளார்.

**வடக்கு ஆயுதக் குழுக்கள்**
போரின் பின்னர் வடக்கில், டக்ளஸ், சித்தார்த்தன், கருணா ஆகியோரை நிராயுதபாணிகளாக்கினோம். டக்ளஸ், சித்தார்த்தன் போன்றவர்களிடத்தில் ஆயுதங்களைக் களையாது வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தியிருந்தால் டக்ளஸ்தான் வடக்கின் முதலமைச்சராக இருந்திருப்பார் என்றும் கோத்தபாய ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (5)

## மக்கள்...

றையிலிருந்து மக்கள் வந்து செல்வதற்கு ஏதுவாக, பருத்தித்துறை பொன்னாலை வீதியின் ஊடான போக்குவரத்துக்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
பாதுகாப்புத் தரப்பினரின் நீண்ட கால ஆக்கிரமிப்பிலிருந்து கடந்த மாதம் மயிலிட்டித்துறைமுகம் விடுவிக்கப்பட்டது. இந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் அதிகமானோர் பருத்தித்துறைப் பகுதியிலேயே தங்கியிருந்தனர். அவர்கள், மயிலிட்டித்துறைமுகப் பகுதிக்கு வந்து செல்வதற்கு, பருத்தித்துறை பொன்னாலை வீதியில் சுமார் 4 கிலோ மீற்றரைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. பாதுகாப்புத் தரப்பினர் அந்த வீதியை ஆக்கிரமித்து வைத்துள்ளனர். இதன் காரணமாக 42 கிலோ மீற்றர் சுற்றியே மயிலிட்டித்துறைமுகப் பகுதிக்கு வரவேண்டியிருந்தது.
இவ்வாறானதொரு நிலையில் பருத்தித்துறை பொன்னாலை வீதியில் தமது கட்டுப்பாட்டிலிருந்த பகுதியின் ஊடாகப் போக்குவரத்துக்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் இராணுவத்தின் பாதுகாப்புடன் பயணம் மேற்கொள்வதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
இது தொடர்பில் ஆராய்வதற்காக நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (5-101)

## மகிந்தவுடன்...

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த விஜயதாச ராஜபக்ச, 2007ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவுடன் முரண்பட்டு அங்கிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டார். கூட்டு அரசில் நீதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணைகள் தாமதப்படுத்தப்படுகின்றமை மற்றும் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறிய குற்றச்சாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கூட்டு அரசின் அமைச்சுப் பொறுப்புக்களிலிருந்து விஜயதாசவை நீக்கினார்.
இந்த நிலையில் பதவியிழந்த இரு ராஜபக்சாக்களும், மகரகம அருகே அமைந்துள்ள பெல்லன்வில விகாரையில் ஒன்றாக இணைந்து வழிபாட்டில் கலந்து கொண்டனர். கொழும்பு அரசியலில் இது பெரும் பரப்பை ஏற்படுத்தியுள்ளது. (5)

## கருக்கலைப்பு...

அதனை கலைக்கும் உரிமை யாருக்கும் இல்லை. ஒருவரின் உரிமைக்காக மற்றுமொருவரின் உரிமையை மீற முடியாது, என்று இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 650 சட்ட விரோத கருக்கலைப்புகள் இடம் பெறுவதாக களனி பல்கலைக்கழகத்தினால் கடந்த வருடம் மேற் கொண்ட ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. (5)

## வடக்கில்...

பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 ஆயிரத்து 4 பேரும், மன்னார் மாவட்டத்தில் 493 பேரும், வவுனியா மாவட்டத்தில் 453 பேரும், கிளிநொச்சியில் 356 பேரும், முல்லைத்தீவில் 300 பேருமாக வடக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 607 பேர் அரச வேலை வாய்ப்புக்காக பதிவு செய்துள்ளனர்.
அரச வேலைக்கான ஆள்சேர்ப்பு உச்ச வயதெல்லை 35ஆகக் காணப்பட்ட நிலையில், அதனை 45 வரையில் அதிகரிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசாவால், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதனை அவர் ஏற்றுக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (5-101)

## திலீபனின்...

யாழ்ப்பாணம், ஓக. 27
தியாகதீபம் திலீபனின் நினைவு நாள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் நல்லூரில் அமைந்துள்ள நினைவுத் தூபியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றுத் துப்புரவு செய்துள்ளனர். தியாக தீபத்தின் நினைவுநாளை கடந்த ஆண்டு ஜனநாயகப் போராளிகள் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன முன்னெடுத்திருந்த நிலையிலேயே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்தத் துப்புரவு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.
இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அகிம்சை வழியில் போராடி வீரச்சாவடைந்த தியாக தீபம் திலீபனின் நினைவுநாள் அடுத்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகி 26ஆம் திகதி நிறைவடையவுள்ளது. 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் திலீபனின் நினைவுநாள் உணர்வெழுச்சியுடன் அவரது நினைவுத் தூபியில் யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை.
கடந்த ஆண்டு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில், நல்லூர் பின்வீதியில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி துப்புரவு செய்யப்பட்டு நினைவுநாள் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. அதே போன்று நல்லூர் கோயில் முன்வீதியில் உள்ள தூபியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நினைவுகூரப்பட்டது.
வடக்கு மாகாணசபையின் 102ஆவது அமர்வில், நல்லூர் பின்வீதியில் உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபி யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பொறுப்பேற்கப்பட்டு, துப்புரவு செய்யப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.
இவ்வாறானதொரு நிலையில் நேற்றுத் திடீரென, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியைத் துப்புரவு செய்தனர். இவ்வாறு துப்புரவு செய்யவுள்ளமை தொடர்பில் அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் முகநூலில் பதிவிட்டிருந்தனர். அதற்கு கட்சியை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கு எதிராகப் பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர். (5-8)

## என் கணவன்...

தெரிவிக்கப்படுவதன் காரணத்தால் வடக்கு மாகாண சபை உறுப்பினரான கந்தையா சிவநேச னுக்கு(தூள் பவான்) அமைச்சர் பதவி வழங்க முடியாது என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார். இது தொடர்பில் தூள் பவானுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தார். ஆனால், அண்மையில் நடந்த வடக்கு மாகாண அமைச்சரவை மாற்றத்தின்போது தூள் பவான் எனப்படும் கந்தையா சிவநேசனுக்கு விவசாய அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது.
கொலைச் சந்தேகநபர் என்று கூறி முன்னர் நிராகரித்த நபருக்கு இப்போது எப்படி அமைச்சராக நியமனம் வழங்கினீர்கள் என்று செய்தியாளர்கள் முதலமைச்சரிடம் கேட்டனர். அதற்குப் பதிலளித்த சி.வி.விக்னேஸ்வரன், "தூள் பவான் எனப்படும் சிவநேசன் குற்றமற்றவர் என்று தெரிந்ததால் அமைச்சுப் பதவி வழங்கத் தீர்மானித்தேன். சிவராம் கொலையில் தொடர்புபட்டது இவரல்லர் அது ஊத்தை பவான்தான்" என்று தெரிவித்திருந்தார்.
முதலமைச்சர் கூறிய புளொட்டின் ஊத்தை பவான் எனப்படும் கந்தையா செல்வராசாவின் குடும்பத்தினர் தற்போதும் வவுனியா மாவட்டத்தில் வசித்து வருகின்றனர். முதலமைச்சரின் கருத்தால் வெகுண்டெழுந்துள்ள செல்வராசாவின் மனைவி தனது கணவன் பற்றிய விவரங்களை உதயன் பத்திரிகையுடன் பகிர்ந்து கொண்டார். அவர் தெரிவித்ததாவது:
1989ஆம் ஆண்டு நான் திருமணம் செய்தேன். எனக்கு இப்போது 5 பெண்பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும் இருக்கின்றனர். எனது கணவர் புளொட் அமைப்பின் நடவடிக்கையில் ஈடுபட்ட காலத்தில் அவர் செய்கின்ற நடவடிக்கைகள் முழுவதும் எனக்குத் தெரியும். அவர் யாரையும் கொலை செய்யவில்லை. அநியாயமாக எனது கணவர் மீது கொலைக் குற்றச்சாட்டை சுமத்துகின்றார்கள். முதலமைச்சர் கூறியதை நான் மறுக்கின்றேன். எனது கணவனை ஊத்தை பவான் என்று அமைப்பில் கூப்பிடுவார்கள். அதற்காக அவர் குற்றம் செய்தவர் என்று அர்த்தமல்ல. பதவிக்காக எனது கணவன் மீது குற்றத்தைச் சுமத்த முயற்சிக்கின்றார்கள். அதை ஏற்றுக் கொள்ள முடியாது.
எனது கணவன் 2008ஆம் ஆண்டு மே மாதம் பூந்தோட்டம் சந்திப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது அமைப்பைச் சேர்ந்த வேறு சிலராலேயே அவர் கொல்லப்பட்டார் என்று எனக்குத் தகவல் கிடைத்தது. அவர்கள்தான் இப்போது எனது கணவர் மீது வீண் பழி சுமத்துகிறார்கள்" -என்றார். (உ-5)

# யங்கம்பன்ஸ் வி.கழக கரப்பந்து தொடரின் காலிறுதி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 27

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் தங்கவடிவேல் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது நீர்வேலி ஐக்கியம் அணி.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலியுத் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் கலைமதி அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலிரு செற்களையும் முறையே 25:14, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய இந்து இளைஞர் அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

(ம-23)


## கடை வாடகைக்கு

இல.168, 168(1/1) ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இருதளங்களைக் கொண்ட மாபிள் பதிக்கப்பட்டு சகல வசதிகளுடனும் கூடிய கடைத் தொகுதிக் கட்டடம் (ராஜா பிளாசா) வாடகைக்குக் கொடுக்கப்படும்.

**076 826 4863, 077 712 0945**




PALAWATTA FOODS PRODUCT

பலவத்த உணவு உற்பத்திகள்

1Kg மாவில் 160 இடியப்பம் சாதாரணத்தில் தயாரிக்க முடியும்

- இலங்கையின் முதற்தரமான இடியப்பமா
- 1Kg இடியப்பமாவினை 108/- இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்

தொர்புகளுக்கு : அலன் - 077 069 0220
வெனி - 077 227 1383
- 045 224 0226

## மீண்டும் யாழ்.நகரில் (அரியாலையில்) துரைராஜா டீசல் பம்சேவிஸ்

அனைத்து நவீன டீசல் / பெற்றோல் வாகனதாரிகளுக்கு ஒரு நற்செய்தி.....

அனைத்து நவீன டீசல் வாகனங்களின் பழுதுகளை Electronic முறையில் அறிந்து (Scanner) அத்துடன் முதல் முறையாக வடமாகாணத்தில் Electric Injector Com on RailCommer Pump and Wozzel (பழுது திருத்திக் கொடுக்கப்படும்) மேலும் நவீன Stethoscope / Scanner/ Endoscope முறையில் பழுது கண்டுபிடிக்கப்பட்டு Report (அறிக்கை ) வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :- அமரர் துரைராஜாவின் மகன் Roni

**Roni - 077 931 7532**

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அழகான 91 ஆம் ஆண்டு பிறந்த, ஸ்கன்டிநேவியாவில் (Scandinavia) Full qualified - MBBS படித்து அரச வைத்தியசாலை யில் வேலை செய்யும் மணமகளுக்கு அதே குடும்பத்தைச் சேர்ந்த Full qualified - MBBS படித்த பொருத்தமான டொக்டர் மணமகன் தேவை. West ஐரோப்பா, East ஐரோப்பா, Asia வில் படித்த மணமகன் விரும்பத்தக்கது.

Software Engineering Expert ஐரோப்பாவில் படித்த வர்களும் விரும்பத்தக்கது. பிறந்த ஆண்டு 1985 - 1990 இற்குள் இருப்பது நல்லது.

✓ படிப்பு ✓ வேலை ✓ ஆங்கில அறிவு
✓ வயது ✓ நிறம் ✓ உயரம் ✓ நட்சத்திரம்
✓ ஊர் ✓ தற்போது எடுத்த தெளிவான போட்டோ

பொருத்தமானவர்கள் மேற்குறிப்பிட்ட தகவல்கள் அடங்கிய Bio data உடன் E-mail மூலம் தொடர்பு கொள்ளவும். முழுமையான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும்.

E-mail address:- seegeer10@gmail.com

## குறுகிய காலத்தில் நீங்களும் ஒரு பட்டதாரியாகலாம்

BA, BBA, BCOM, BSC, MA, MSC, MBA, ETC

உங்களின் கடந்தகால தகைமைகளையும், அனுபவங்களையும் வைத்து RPL எனப்படும் சர்வதேச முறையினால் பட்டங்கள் பெற்றுத்தரப்படும்.

**Can be used for :**

Goverment / Private Jobs — Promotions
Migrations — Higher Studies, etc.

*(UGC& Foreign Ministry Approved)*

**Amazon College**

294, 2nd Floor, Galle Road,
Peoples Bank Building, Bambalapitiya,
Tel: 0114 386 126, Hot Line : 076 520 4605
directdegree2014@gmail.com
www.amazoncollege.lk

முகவர்கள் தேவை

### கடை கட்டடம் வாடகைக்கு தேவை

பலாலி வீதி அல்லது பிரதான வீதியில் அமைந்த கடை கட்டடம் வாடகைக்கு தேவை.

077 486 9567

### காணி தேவை

அரியாலைக்கு இடைப்பட்ட A9 வீதியில் அமைந்த வெற்றுக்காணி தேவை.

077 554 5843/ 077 662 3824

## ஓம் விராட் விஸ்வப் பரப்பிரம்மனே நமஹ



ஆலயங்களுக்குத் தேவையான உற்சவமூர்த்திகள் சிவ விக்கிரகங்கள் மானாங்குலம், மாத்ராங்குலம், தேவாங்குலம் - ஆயாதி கணித சிற்பசாஸ்த்திர முறைப்படி பரம்பரை விஸ்வகர்மாக்களால் செய்து தரப்படும்.


கண்டா மணிகள், கலசங்கள், சோடஉபசாரங்கள், திருவாளி கள் வெள்ளி தங்க அங்கிகள் துவாஜஸ்ஸதம்பம், பட்டுக்குடைகள், மகரதோரணங்கள், கும்ப கோணம், நாகாஸ்குத்துவிளக்குள், ஸ்நபனச் செம்புகள் முதலான அனைத்துப் பொருள்களும் ஆலயநிமாண பிம்பலஷணம், காசியப்ப சிற்பசாஸ்திரம், மூர்த்தி தியானம் ஆதார நூல்களின்படி முறையாகவும் நேர்த்தியாகவும் செய்து தரப்படும்.

விஸ்வஸ்ரீ - தியாகராஜா ஆச்சாரி ரவிசங்கர்
விஸ்வகாமா சிற்பக்கலைக்கூடம்
208P 1/1 செட்டியார் தெரு, கொழும்பு - 11

(CS 7691) (14)

**077 900 6584 vks.centre@gmail.com**

## சேவைநயப்பு வாழ்த்து



Congratulations

**திரு.செபமாலை பீற்றர் பியன்வெனு (J.P)**
**BA,Spe.Trd(Maths)**

ஆசிரியர், பகுதித்தலைவர் – யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

**சேவை விவரம்**

26.01.1998 - 31.08.2000 - யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்
01.09.2000 - 14.05.2002 - ஆசிரியர் கலாசாலை, பலாலி.
15.05.2002 - 25.04.2010 - யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்
26.04.2010 - 26.08.2017 - யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

மணிவிழாக் காணும் புகழ் மங்காத நாயகனே - உம்
பணி நயத்து வாழ்த்துகின்றோம் பல்லாண்டு வாழியவே
மணிமுடி மேல் அணிசெய்யும் மங்காத வைரம் என
கணித பாடமதில் மாணவரை கருத்துடனே திகழச் செய்தீர்

கற்கண்டாய் இனிக்கும்படி கணிதமதைப் போதித்தீர் - உம்
சொற்கண்டு ஒழுக்கத்துடன் பிள்ளைகளை ஒழுகச் செய்தீர்
விளையாட்டும் முத்தமிழும் விரைவான செயலாற்றலும்
களையாத இளைஞனென வியந்து விழி நோக்குகின்றோம்

இனிவரும் காலமெல்லாம் இறையருளில் நீர் வாழ
இனிதாக வாழ்த்துகின்றோம் வாழிய நீர் பல்லாண்டு

2013
பிரதிபா பிரபா விருது
2013, 2015
வலிகாமம் கல்வி வலயத்தால் வழங்கப்பட்ட நல்லாசிரியர் விருது

ஆசிரியர் கழகம்
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

# வென்றேயாக வேண்டும் வேறு வழிகள் இல்லை



இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் பல்லேகல மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இன்று நடைபெறவுள்ளது.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. இரண்டிலும் இந்திய அணியே வெற்றி பெற்றது. முதலாவது ஆட்டத்தில் அந்த அணி மிக இலகுவாகவும், இரண்டாவது ஆட்டத்தில் எதிர்பாரா விதமாக திரில் வெற்றிபெற்றும் தொடரில் 2:0 என்று முன்னிலை வகிக்கிறது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்கக் கூடிய வாய்ப்பு இலங்கைக்கு ஏற்படும்.

இன்றைய ஆட்டத்திலும் இலங்கை தோல்வியடைந்தால் அடுத்த இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெற்றாலும், அந்த அணியால் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாது. எனவே வாழ்வா சாவா நெருக்கடியில், வேறு வழியேயில்லை வென்றேயாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இலங்கை அணி இன்று களமிறங்குகிறது. கடந்த ஆட்டத்தில் தாமதமாகப் பந்துவீசிய குற்றத்துக்காக இலங்கை அணித்தலைவர் தரங்கவுக்கு இரண்டு ஆட்டங்களில் களமிறங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் இன்றைய ஆட்டத்தில் விளையாட மாட்டார். பொறுப்புத் தலைவராக கப்புக்கெதர செயற்படவுள்ளார். சந்திமல், திரிமன்னே ஆகியோர் அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளனர். நான்காவது ஒருநாள் ஆட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி பிரேமதாஸ மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. (ம)



## அக்மலுக்கு செயற்குழு வேண்டுமாம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் உமர் அக்மல், தனக்கும் அணியின் பயிற்றுநர் மிக்கி ஆர்தருக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு, செயற்குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளார்.

பயிற்றுநருக்கு எதிராக, பகிரங்கமான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்ததைத் தொடர்ந்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் எச்சரிக்கப்பட்டார் அக்மல். இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்கமளிக்குமாறும் அக்மலுக்கு உத்தரவிடப்பட்டது. இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அக்மல் இவ்வாறு தெரிவித்தார்.

"எனக்கும் பயிற்சியாளர் மிக்கி ஆர்தருக்கும் இடையிலான பிரச்சினைகள் தொடர்பாக ஆராய தனிக்குழு அமைக்கப்பட வேண்டும். சிறந்த நற்பெயரைக் கொண்ட சிரேஷ்ட வீரர்கள், அரச ஊழியர்கள் ஆகியோரைக் கொண்டு, இந்தச் செயற்குழு அமைக்கப்பட வேண்டும். என் மீது அவமானப்படுத்தும் கருத்துகளை மிக்கி ஆர்தர் வெளிப்படுத்தினாரா என்பதைக் கண்டறிய வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் விசாரணைக் குழுவால் என் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் மிக்கி ஆர்தரிடம் மன்னிப்புக் கேட்கத் தயார்" என அக்மல் மேலும் தெரிவித்தார். (ம)



## டோனி 100

இந்திய அணியின் இலக்குக் காப்பாளரான டோனி, ஒருநாள் ஆட்டங்களில் தனது 100ஆவது ஸ்டம்பிங்கை எதிர்நோக்கியுள்ளார்.

ஒருநாள் ஆட்டங்களில் இதுவரை 99 ஸ்டம்பிங்கை டோனி நிகழ்த்தியுள்ளார். இதன்மூலம் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்கக்காரவின் பெறுபேறை அவர் சமன் செய்துள்ளார். 100 ஸ்டம்பிங் என்ற மைல்கல்லுக்கு இன்னும் ஒரேயொரு ஸ்டம்பிங்கே டோனிக்குத் தேவைப்படுகிறது. இன்று நடைபெறும் ஒருநாள் ஆட்டத்தில் அல்லது எதிர்வரும் 31ஆம் திகதி கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் இடம்பெறும் ஒருநாள் ஆட்டத்தில் இந்த மைக்கல்லை டோனி தொடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)


## இப்ராகிமோவிக் – மன்செஸ்டர் ஒப்பந்தம் ஒரு வருடம் நீடிப்பு

சுவீடன் நாட்டின் முன்னணி கால்பந்து வீரரான இப்ராகிமோவிக் உடனான ஒப்பந்தத்தை மன்செஸ்டர் யுனைற்ரெட் அணி மேலும் ஒரு வருடத்துக்கு நீட்டித்துள்ளது.

பரிஸ் ஜேர்மன் அணிக்காக விளையாடிவந்த இப்ராகிமோவிக், கடந்த ஆண்டு மன்செஸ்டர் யுனைற்ரெட் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். 35 வயதான அவரை ஒரு வருடத்துக்கு ஒப்பந்தம் செய்தது மன்செஸ்டர் யுனைற்ரெட்.

2016 - 2017 பருவகாலத்தில் இப்ராகிமோவிக் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பின்னர் காயம் காரணமாக அணியில் இருந்து விலகினார். இதனால் மீண்டும் மன்செஸ்டர் அணியில் இடம்பிடிப்பாரா? என்ற கேள்வி எழுந்தது. இப்ராகிமோவிக் மன்செஸ்டர் இடையிலான ஒப்பந்தம் இந்த மாதம் 31ஆம் திகதியுடன் முடிகிறது.

காயம் முழுமையாகக் குணமடைந்து மீண்டும் களமிறங்கத் தயாராகியுள்ள அவரை மன்செஸ்டர் அணி அடுத்த ஒரு வருட காலத்துக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. (ம)



## பாகிஸ்தானில் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமாம்



பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் உலகப் பதினொருவர்அணிக்கு அங்கு சிறந்த பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கொலிங்வூட்.

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது, இலங்கை வீரர்கள் பயணித்த பேருந்து மீது ஆயுததாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதன்பின்னர் பன்னாட்டு கிரிக்கெட் சபைகள் பாகிஸ்தானுக்கு தத்தமது அணிகளை அனுப்பத் தயங்கின. எனவே ஒவ்வொரு நாடுகளில் இருந்தும் பாகிஸ்தானுக்கு சென்று விளையடும் வீரர்களை ஒன்றிணைத்து தொடர் ஒன்றை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டது. உலகப் பதினொருவர் அணிக்கு எதிராக பாகிஸ்தான் விரைவில் விளையாடவுள்ளது. இந்த அணியின் தலைவராக பிளாசிஸ் செயற்படவுள்ளார். அணியில் கொலிங்குவூட் இடம்பெற்றுள்ளார். இந்த நிலையில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் உலகப் பதினொருவர் அணிக்கு உயர் பாதுகாப்பு வேண்டும் என்று கோரியுள்ளார் கொலிங்வூட். (ம)



## ஆஸி. - பங்களாதேஷ் ஆட்டம் இன்று ஆரம்பம்

ஆஸ்திரேலியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

ஆஸ்திரேலிய அணி பங்களாதேஷ_க்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் மிர்பூரில் ஆரம்பமாகிறது.

பங்களாதேஷ் அணி அதன் சொந்த மண்ணில் மிகுந்த பலத்துடன் விளங்கக்கூடியது. இதனால் இன்றைய ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியால் அவ்வளவு இலகுவில் ஆதிக்கம் செலுத்திவிட முடியாது. இங்கிலாந்து பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது இங்கிலாந்தை பங்களாதேஷ்வீழ்த்தியிருந்தது.

ஆசிய ஆடுகளங்களில் சுழல்பந்து வீச்சை ஓரளவுக்கு திறம்படக் கையாளக்கூடிய நிலைக்கு ஆஸ்திரேலியா வந்துள்ளது. இந்தியாவுக்கு எதிராக அந்த அணி இறுதியாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டமையை சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். எனவே இந்தத் தொடரில் விறு விறுப்புக்குப் பஞ்சம் இருக்காது. (ம)

## பாகிஸ்தான் அணி அறிவிப்பு

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள உலகப் பதினொருவர் அணிக்கு எதிரான ஆட்டத்துக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்டத்துக்கான உலகப் பதினொருவர் அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. சர்பிராஸ் அகமட் தலைவராகச்செயற்படவுள்ளார்.

பாகிஸ்தான் அணி விவரம் – சர்பிராஸ் அகமட் (தலைவர்), சமான், செசாட், அசாம், மலிக், அமின், வசிம், சடப் கான், நவாஸ், அஸ்ரப், ஹசன் அலி, யாமின், ஆமிர், ரயீஸ், உஸ்மான் கான், சொகைல் கான்.

(ம)




## English Course 50% off

- Spoken English 4000/= ~~8000/=~~
- Diploma in English 6000/= ~~12000/=~~
- Trainer Training Diploma 12,000/= ~~24000/=~~
- Spoken Sinhala 4,000/= ~~8000/=~~
- Diploma in Sinhala 7,800/= ~~15600/=~~

ஆரம்பம் 29.08.2017 (செவ்வாய்) 9.00 am
தொடர்புகளுக்கு:- Jaffna 021 221 2410 Chunnakam 021 224 3660
Mob:076 697 3040
ELAS
Sir Pon Ramanathan Rd,Thirunelveli,Jaffna (பல்கலை எதிரில்)
124, Sir Pon Ramanathan Rd,K.K.S Rd, Chunnakam, (Above DFCC Bank)

## V2 TRAVELS

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு.
VISA EXTENSION
யாழ்ப்பாணத்திலேயே இப்பொழுது செய்து கொடுக்கப்படும்.
0768227499
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



FREE FOR 100 STUDENT

CMA
ACCA ASSOCITION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS

பாடப்பிரிவுகள் ஆரம்பம்
16-09-2017 CMA
23-09-2017 ACCA
WHITE LOTUS CAMPUS
154, A/1, Navalar Road, Jaffna
whitelotuscampus01@gmail.com
021-722 3773 / 077-932 4255

## NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA

# 2018 A/L
[2017 AUGUST பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது]
## DAY CLASSES
திங்கள் தொடக்கம் வெள்ளி

| | |
|---|---|
| PHYSICS 11.30 - 1.30 | திரு.G.பிரபா<br>திரு.S.சோதிலிங்கம் |
| CHEMISTRY 9.30 - 11.30 | திரு.K.சிவத்திரன் |
| BIOLOGY 7.00 - 9.30 | வழமையான ஆசிரியருடன்<br>திரு. T.கெங்காதரன் |
| COM.MATHS 7.00 | திரு.P.செந்தில்நாதன் |

ஆரம்பம் :
05.09.2017 செவ்வாய் காலை 7.00
தொடர்பு : 0777 - 917611
https://facebook.com/newsciencehalljaffna/

ஜூஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்
புதிய ஐடியா ! அதிக இலாபம் !



தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

### வீடு விற்பனைக்கு
வட்டு தெற்கு. வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வீதியில் 04 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
077 833 2954/ 004552724262

### விற்பனைக்குண்டு
கொக்குவில் கிழக்கில் K.K.S Road இல் இருந்து 200 m தூரத்தில் 1.75 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
076 827 8705

### களஞ்சியம் வாடகைக்குத் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி பகுதிகளை அண்மித்த இடத்தில் களஞ்சியத்திற்குப் பயன்படுத்தக்கூடிய கட்டடம் தேவை.
தொடர்பு - 077 917 9969

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவில் முழு / பகுதி நேரப் பாடநெறிகள்

## Diploma in Spoken English
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் 3 மாதங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்
Duration Spoken - 3 Months Diploma - 4 Months
Spoken English Course Fee : 15250/=
Diploma in English Course Fee : 21000/=

சகல கணனிப் பாடநெறிகளுக்கும் விசேட கட்டணக் கழிவு
- MS- Office
- Computer Studies
- Graphic Designing
- Web Designing
- Computerized Accounting

Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1 தகைமைப் பரீட்சைகள்
மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
German & Swiss மொழிப் பாடநெறி Deutsch
Netherlands மொழிப் பாடநெறி Dutch
French மொழிப் பாடநெறி FRENCH
BRITISH COUNCIL IELTS Registration Centre

BRITISH COLLEGE of Education
Hot Line 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street Mullaithivu Tel : 021-4927497
04/09/2017 முதல் கிளிநொச்சியில் புதிய கிளை ஆரம்பமாகின்றது
565, Peradeniya Rd, Kandy. Tel : 081-4949590 13, 1st Chapel Rd, Colombo-06. Tel : 011-2362775


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.